

வான வில்

ஆறுதலளிக்கும் ஒரு தியான நூல்

BY

J. R. MACDUFF

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

வானவில்

BOW IN THE CLOUD

BY

J. R. MACDUFF

மொழிபெயர்த்தவர்

M. D THOMAS

THE CHRISTIAN LITERATURE SOCIETY

THE CHRISTIAN LITERATURE SOCIETY
(*In association with the United Society for Christian Literature*)
POST BOX 501, PARK TOWN, MADRAS 3
and at
MYSORE BANGALORE TIRUVALLA

G.L.
COPYRIGHT

First published, 1954

PRINTED IN INDIA AT THE DIOCESAN PRESS, MADRAS 7—1954. B387

வானவில்

சோக சஞ்சலத்தில் ஆறுதல் அளிக்கும் தியானங்கள்

"நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கடவுளும் பிதாவுமானவர் ஸ்தோத்திரத்துக்குரியவர்; இவர் இரக்கங்களின் பிதா; எல்லாவித ஆறுதலின் கடவுள், எங்களுடைய சகல உபத்திரவத்திலும் எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். அவர் எங்களுக்கு அளிக்கும் அதே ஆறுதலின் மூலமாய், எவ்வித உபத்திரவத்திலும் இருக்கிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திறமையுள்ளவர்களாக வேண்டுமென்றிருக்கிறார்" (2 கொரிந்தியர் 1: 3, 4).

முன்னுரை

1899, அக்டோபர் 23-ம் தினத்தில் பரிசுத்தவானை மின்றறன் தாமஸ் எனும் என் தகப்பனாரின் பூலோக வாழ்க்கை சூரியன் அஸ்தமித்தது. அப்பொழுது நான் பத்து வயது சிறுவன். என் அருமைத் தாயார் எவ்வித ஆறுதலுமின்றி சோக ஆழங்களில் அமிழ்ந்தனர். அச் சமயத்தில் அவர்களின் மூத்த சகோதரனும் வல்லமையான பிரசங்கியுமான காலம் சென்ற D. M. பாக்கியநாதன் ஐயர், "வானவில்" எனும் அருமையில் அருமையும், அபூர்வத்தில் அபூர்வமுமான சிறுபுத்தகம் ஒன்றை வாசிக்கக் கொடுத்தனர். அருமையானவர்களை இழந்து சோக அலைகளில் விழுந்து தத்தளித்த அநேகரை ஆறுதல்படுத்தி விடுவித்த இந்தத் தியான நூல் என் தாயாரையும் அவ்வாறே இரட்சித்தது. எங்களுடைய குடும்பப் பிரார்த்தனைகளில் என் தாயாரின் ஒழுங்கின்படி, நான் சிறு பிள்ளை

யின் சொற்ப அறிவோடு அதைப் பல காலமாக வாசித்ததுண்டு. அதின் அபூர்வ வல்லமை இவ்வாறிருக்க, "வானவில்" எனும் ஒரே ஒரு பிரதியைத் தவிர வேறு பிரதியை ஐம்பது வருஷங்களாக நான் எங்குங் காணவில்லை. ஆகையால், அதை மீண்டும் மொழிபெயர்த்து வெளியிட முன்வந்தேன். பலவித துன்பங்களால் பீடிக்கப்பட்டிருப்போருக்கும், தங்களின் அருமையானவர்களை இழக்கக்கொடுத்து ஆறுதல் அற்றிருக்கும் அனைவருக்கும், எல்லாவித ஆறுதலின் கடவுளானவரின் நாமத்தில், பக்திவினயமான ஆசியுடன் இம்மொழிபெயர்ப்பைச் சமர்ப்பிக்கிறேன்.

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும்போது அந்த வில் மேகத்தில் தோன்றும்" (ஆதியாகமம் 9: 14).

M. D. தாமஸ்

1-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

தெய்வ ஆளுகை

"யெகோவா அரசாளுகிறார்"—சங்கீதம் 93: 1.

சோகம் சஞ்சலமாகிய கார்மேகங்கள் கவிந்து இருள் மூடுகையில், இந்தத் திவ்விய மொழியால் நீ பெறும் ஆறுதலையும் மகிழ்ச்சியையும்விட சிறந்தது வேறொன்றுமில்லை. கடவுள்—உன் கடவுள்—இயேசு பெருமானைத் தந்த கடவுள்—சகல சம்பவங்களையும் நேரிடச் செய்பவர்; நேரிடும் எந்தச் சம்பவத்தையும் உன் நன்மைக்கு ஏதுவாக்குகின்றவர், "நான் பூமிக்கு மேலாக மேகத்தை வருவிக்கும்போது" என்கிறார். பூலோக வாழ்க்கையின் மா பரவச மகிழ்ச்சியின் மத்தியில் சிலகாலம் அந்தகாரம் மூடுவதுண்டு; இவ்வாறு மூடும்படி செய்வது தமது தெய்வகரமே என்பதை அவர் மறைக்காமல் தெரிவிக்கிறார். மேகத்தை வருவிக்கும் அவரே உன்னை மேகத்திற்கு உட்படுத்துகிறார்; அதின் ஊடாக அவரே உன்னைத் தமது இரக்கத்துடன் நடத்திச் செல்லுகிறார். "அவர் இராஜ்யம் எல்லாவற்றையும் ஆளுகிறது" (சங். 103: 19). "சீட்டு மடியதனிலே போடப்படும், அதின் தீர்ப்போ யெகோவாவினாலே வரும்" (நீதி. 16: 33). நீ கடவுளால், அவருடைய திருச் சித்தத்தின்படி, உலகத்தில் வாழ வைக்கப்பட்டிருக்கிறாய்; இது என்ன பாக்கியம்! உன்மேல் அவர் பாரம் சுமத்துகிறார்; அது உன்னை அழுத்திக்கொண்டிருக்கும்படியும் செய்கிறார்; தம் வேளை வரும்போது அதை எடுத்துப்போடுகிறார்.

துர்ச்சம்பவங்களின் பூலோக ஏதுக்களை நீ யோசித்துச் சிந்தையில் வையாதபடி எச்சரிக்கையாயிரு; அது மகா மோசமான நாஸ்திக மன நிலையாம். நீ மகா ஆவலுடன் விரும்பி வளர்க்கும் ஆமணக்குச்

செடிகள் அழிக்கப்படுகையிலும் (யோனு 4:7), உனக்கு அருமையும் ஆசையும் உயிருமானேர் உனக்கு எதிரில் மரித்துக் கிடக்கையிலும், கடவுள் ஒரு பூச்சி வரும் படிக் கட்டளையிட்டார் (யோனு 4:7) என்னும் எண்ணமே உன்னை அமர்த்தவேண்டியது. தியான ஆலயமாகிய உன் ஆன்மாவில் தெய்வ அக்கினி இறங்கி அதை அழிக்கும்போது, "யெகோவா தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறுர்" (சங். 11: 4). "எதிர்பார்த் திராத ஆபத்து," "விதி" "தலைவிதி" எனும் சொற்கள் கிறிஸ்துவ பக்தரின் நம்பிக்கையோடு சற்றும் பொருந் தாதவை. கடற்கரையில் அலைகளால் ஓயாது அடிபடும் குத்துச் செடிகள் போன்றவனல்ல நீ. "யெகோவா வின் சத்தம் தண்ணீர்கள்மேல் தொனிக்கிறது" (சங். 29: 3); "தைரியமாயிருங்கள், நான்தான் பயப் படாதிருங்கள்" (மத். 14: 27); உனக்கு என்ன நேரிட் டாலும், "இது உமது செயலே என்று நான் வாய் திறவாமல் மௌனமாயிருக்கிறேன்" என்பதே (சங். 39: 9) உன்னில் இருக்கவேண்டிய ஒரே மனநிலை யாகும்.

மனிதரின் கண்களுக்கு, சாவைப்போல் ஒழுங்குத் தவறும், காரணமற்றதும் அகாலமுமான சம்பவம் வேறில்லை. உண்மையில் அப்படியல்ல; சர்வத்தை யும் ஆளும் கடவுளின் கரத்திலேயே மரணத்தின் திறவுகோல் இருக்கிறது (தரி. 1: 18). அத்திமரத்தின் உவமையைக் கவனிப்போம். அது இன்னமும் இருக்க வேண்டுமா, அல்லது நிலத்தையும் வியர்த்தமாக்காத படி வெட்டிப்போடப்படவேண்டுமா என்பது பரலோ கத்தில் தீர்மானிக்கப்படும் விஷயமாம் (லூக். 13: 7). கடவுளின் தீர்ப்புக்குப் பின்பே கோடரி அதன் வேர் அருகே வைக்கப்படும் (லூக். 3: 9). கனிகொடாத மரமே கடவுளின் தீர்ப்புக்குப்பின் வெட்டப்படுமானுல், யெகோவா நாட்டின நீதி விருட்சங்கள் (ஏசாயா 61: 3) அவரின் அநுமதியின்றிச் சாயுமோ? அவைகளுக்கு எவ்விதச் சேதமும் ஏற்படாதபடி அவர் பார்த்துக் கொள்வார். அவைகளில் துடித்துக்கொண்டிருக்கும்

ஒவ்வொரு அணுக்களுக்காகவும் அவர் கவலைப்படு வாரே. ஒருவேளை யாரையும் விடாத சாவு அவர்களை வீழ்த்துமென்றாலும், யெகோவா கரமே இதைச்செய்த தென்று அறியாதான் யாரே?" (யோபு 12: 9).

உன் சுயசித்தத்தை அவரின் திருச் சித்தத்திற்கு உட்படுத்துவாயாக. அவரின் விதிகளைக் குற்றப்படுத் தத் துணியாதே. அவரின் திருச் சித்தமானது அணு வும் மாறவேண்டாம்; அவர் கரத்தினுள் அமர்ந்திரு. அவர் தரும் இனிப்பைப் பருகு. கசப்பையும் பருகு. உன் நேசரான வைத்தியர் தாமே உண்டாக்கி உனக்கு உட்கொள்ளத் தரும் ஔஷதத்தில் ஒரு அணுவாகிலும் அவசியமில்லாதிராது. "கடவுளுக்கு இஷ்டமானது எனக்கும் இஷ்டமே. நாம் அவரின் கட்டளையை ஏற்று அவருக்குக் கீழ்ப்படிகையில் அவருக்குப் பணி இயற்றுகிறோம்; ஏனெனில் அது அவரின் திருச்சித்தக் கட்டளை. அதேவிதமாக அவர் நடப்பிப்பதை நாம் ஏற்றுக்கொள்ளுகையில், அவருக்குப் பணிந்து கொடுக் கிறோம்; ஏனெனில் நடந்த அந்தச் சம்பவம் அவரின் திருச் சித்தச் செயலே" என்று ஒரு பக்தனைப்போல் நீயும் சொல்லுவாயாக. "இம்மையின் அசம்பவங்களி லும் அதிர்ச்சிகளிலும் நம்மை அசையா உறுதியுடன் காத்துக்கொள்ளுவது எவ்வாறு? அவைகளுக்கு மேலாக நோக்குவதாலும், அவைகளுக்கு அப்பால் நோக்குவதாலுமே. மேலாக நோக்குவோமாகில், அவைகளை நடப்பித்த சர்வ வல்லமையும் அன்புமுள்ள தெய்வ கரத்தைக் காண்போம்; அப்பால் நோக்குவோ மாகில், அதே தெய்வ கரம் நம்மை நடத்தி நமக்கு அருளிச்செய்ய இருக்கும் இனிமையும் அருமையுமான பேரின்ப பாக்கியத்தைக் காண்போம்" என்பது ஜெரிமி டேய்லர் (Jeremy Taylor) எனும் பக்தனின் உரை.

"யெகோவா அரசாளுகிறார்: பூமி பூரிப்பதாக" (சங்.97:1) எனும் மதுர மொழியை இயற்றிய எபிரேய கவிஞன் எப்பேர்ப்பட்டவன்! கண்களுக்கினிய ஏழு வர்ணங்களுடன் ஜொலிக்கும் வானவில் போன்ற இந்த

ஆறுதல் மொழியை பூலோக மக்கள் யாவரும் இன்று காணும்படி தன் கவியில் அதை அமைத்துவிட்டான்.

"நான் பூமிக்கு மேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

2-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

அன்பான நோக்கம்

"தமது அடியானின் வாழ்வில் பிரியங்கொள்ளுகிற யெகோவா"

—சங்கீதம் 35: 27.

"வாழ்வு" என்றால் என்ன? தங்கச் சரிகை நூற்களால் செய்யப்படும் பீதாம்பர ஆடைபோன்ற வாழ்க்கையோ? நிரம்பி வழியும் பாத்திரமோ? திரண்ட ஐசுவரியமோ? பொதுஜனப் புகழ்ச்சியோ? குறையாத குடும்பமோ? ஐயோ, இவைகள் யாவும் வாழ்க்கைக்குக் கண்ணியே ஆகும்; இவைகளைப் பெறுவோர் கடவுளுக்கு நன்றி செலுத்தவுமாட்டார்; தான் பெற இருக்கும் நித்திய பாக்கியத்தைக் காணக் கூடாதபடி ஆன்மாவை இவைகள் குருடாக்கியேவிடுவன. ஆன்ம விஷயத்தில் "வாழ்வு" எனப்படுவது அநேகமாக எதுவென்றால், கடவுள் தமது திருக்கரத்தால் உன்னை நடத்தி, தாழ்மைப் பள்ளத்தாக்கின் பள்ளங்களுக்குள் கொண்டு விடுவதாகும்; பூர்வகாலத்தில் தம் தாசனாகிய யோபைப்போன்றே உன்னையும் உன் ஆடுகளையும் மாடுகளையும் ஒட்டகங்களையும் சுகத்தையும் சம்பத்தையும் பெற்றெடுத்த பிள்ளைகளையும் நீ இழந்து தவிக்கச் செய்வார். ஏன்? முடிவில் நீயும் யோபைப்போல் தரையிலும் தூசியிலும் அவர் திருவடிக்குமுன் விழுந்து பணிந்து, "யெகோவா திருநாமம் துதிக்கப்படுக" எனச் சொல்லும்படியே (யோபு 1: 20, 21).

ஆகவே, பொதுவாக பூலோகத்தில் "வாழ்வு" எனப்படுவதற்கு முற்றிலும் எதிர்மாறான நிலைமையில்

தான் தெய்வ வாக்குத்தத்தமாகிய வானவில் காணப் படும். துக்கம் மழையாகப் பெய்கையிலும் கண்ணீராக வடிகையிலும், அன்பினுல் மலர்ந்திருக்கும் உன் பரம தந்தையரின் திருமுகத்தை நீ காண்பாய். உன் பேரில் அவருக்குப் பெருத்த அன்புண்டு; உன் ஆன்ம வாழ்வில் அவர் பேரவாக்கொண்டவர்; ஆதலால், “வாழ்வு” எனத் தவருக அழைக்கப்படும் நிலைமையில் நீ வாழும்படி அவர் உன்னை விடுவதில்லை. உனக்குப் பணித்த கடமைகளில் நீ தளருகையிலும், அன்பு தணிந்து அவைகளைக் கைவிடுகையிலும், உன் இருதயம் திமிர்ப்பிடித்துப்போய், பூலோகக் களிப்பிலும் செல்வத்திலும் நீ மதிமயங்கி, அவரைப் பற்றிய அன்பு கல்லாக உறைந்துபோகையிலும், உன் சௌக்கிய வாழ்க்கையில் அவர் முட்களை வைத்துவிடுகிருர்; உடனே நீ துள்ளித் திமிறி அதைவிட்டு வெளிக் கிளம்பிவிடுகிருய்; இனி எப்போதாகிலும் பாவச் சேற்றிலும் தூசியிலும் கிடந்து உருண்டு புரண்டு கொண்டிராய்.

இவ்வித தெய்வச்செயலின் புத்திக்கெட்டாத இரகசியம் இப்போது உனக்கு விளங்குவதில்லை. கண்ணீர் வடித்துக்கொண்டே, “என் பூலோக இன்பத்தை அவர் குரூரமாகக் கவிழ்த்துப்போட்டதேன்? நான் கொண்ட எண்ணங்களும் குறித்தத் திட்டங்களும் சித்திக்கப்போகும் தருணத்தில் அவர் அவற்றைப் பஞ்சாய்ப் பறக்கடித்ததேன்? நான் ஆவலாய் வளர்த்த ஆமணக்குச் செடி ஒரே இரவில் அழித்துப் போடப்பட்டதேன்?” (யோனு 4: 7) எனப் புலம்பித் தவிக்கிருய். இதற்குத் தெளிவான உத்தரவு உண்டு. உன் ஆன்ம வாழ்வையே அவர் தம் நோக்கமாகக் கொண்டுள்ளார். காளவாய்கள் போன்ற உன் உபத்திரவங்கள் நீங்க, “இம்மட்டும் யெகோவா எனக்கு உதவி செய்தார்” (1 சாமு. 7: 12) என நீ கூவிக் களிப்பாய். அவர் அனுப்பும் துன்பங்கள் முறையற்றதும் காரணமற்றதுமான நிகழ்ச்சிகளே அல்ல. அவை ஒவ்வொன்றிலும் உத்தம வாழ்க்கைக்கு ஏதுவான அவ

சியம் அமைந்திருக்கும். அவரின் கரத்தால் உன்னைச் சிட்சித்து, நீ அறிந்திராததும், நீ சற்றும் விரும்பாததுமான வழிகளில் அவர் உன்னை நடத்துகிறார்; நீ அவைகளில் நடக்கும்போது, அவரின் அமர்ந்த மெல்லிய சத்தம், "என் நேசனே, நீ சீரும் செளக்கியமுமாக வாழ்வதே என் உன்னத நோக்கமாம்" என்று உன் செவிகளில் தொனிக்கும்.

ஆகவே, யாவும் நன்றாயிருக்கிறது என நீ எண்ணி அமர்ந்திரு. அவரது அன்பின் சமுகத்துக்கு உன்னை இழுக்கும் எந்த ஏதுவைக் குறித்தும் முறுமுறுக்காதே. உன்னை வருத்தும் கவலைகளுக்காக நீ அவருக்கு நன்றி செலுத்து; ஏனெனில் அவை அனைத்தையும் நம்பிக்கையுடனே அவர்மேலேயே நீ போட்டுவிடலாம். இம்மையிலும் நித்தியத்திலும் நீ வாழ்வை அநுபவிக்கும்படி அவர் ஆத்திரப்படுகிறார்; ஆதலால் வேண்டியதற்கு மிஞ்சின வேதனையும் அவசியமற்ற அடியும் உன்மேல் விழுவதில்லை. உன் காரியங்கள் யாவற்றையும் அவர் பார்த்துக்கொள்ளட்டும்; அவர் கரத்தில் விட்டுவிடு.

நான் பூமிக்கு மேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

3-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

பத்திரமான ஒதுக்கு

"அவர் (ஒரு மனுஷன்) காற்றுக்கு ஒதுக்காகவும், பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும், வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாகவும், விடாய்த்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார்." ஏசாயா 32: 2. ("அவர்" என்பது ஆங்கில மொழி பெயர்ப்பில் "ஒரு மனுஷன்" என இருக்கிறது.)

ஒரு மனுஷன்: இந்த முதல் வார்த்தையானது மகா அருமையான இந்த வசனத்தின் கருத்தை உள்ளத்

தில் ஆழமாய்ப் பதிய வைக்கும் வார்த்தை: இவர் "மனுஷனாகிய கிறிஸ்து இயேசு" (1 தீமோ. 2: 6). இவ்வாறு தம் அடியவருக்கு அவர் "ஒதுக்கு" ஆவது எப்போது? எங்கே? பூர்வ எலியா முனிவன் கண்டது போன்ற "பலத்த பெருங்காற்றிலே" அவர் ஒதுக்காவார். சூரிய ஒளிபோன்ற வாழ்க்கையின் இன்பங்களிலும் மகிழ்ச்சிகளிலும், மப்பும் மந்தாரமும் மேகமும் அற்ற நாட்கள்போன்ற அமைதியான வாழ்க்கையிலும், யாதொரு குறையுமற்ற வாழ்விலும் நீ அவரைத்தேடுகிறதில்லை. ஆனால் மேகங்கள் அடர்ந்து கவிந்து, சூரியனை முழுவதுமாக மறைத்துவிடுகையில், அதாவது கொடிய துன்பங்கள் நேரிட்டு பூலோகத்தின் எந்த நம்பிக்கையும் அற்றுப்போகையில், அப்பொழுதே ஜெபம் எழும்புகிறது. "என் இருதயம் தொய்யும்போது உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய்விடும்" (சங். 61: 2) என நீ அபயமிட ஆரம்பிக்கிறாய். பூமி அதிர்ச்சி-பெருங்காற்று-அக்கினி-இவற்றிற்குப்பின் "அமர்ந்த மெல்லிய சத்தம்" (1 இரா. 19: 11, 12). சோகத்தில் ஆழ்ந்து புலம்பும் விசுவாசியே, உனக்கு மெய்யாகவே நிச்சயமான ஒதுக்கு இருக்கிறது. அது அசையா உறுதியான அரண். பூலோகத்திலும் ஒதுக்குகள் உண்டு; ஆனால் அவைகள் பாதுகாப்பும் பலமும் பிரயோஜனமுமற்றவை; ஆபத்துக்கு நில்லாதவை. காற்று அவைகளின்மேல் வீசின உடனே அவை இல்லாமற்போம். ஆனால் புசற்காற்று மோத மோத உன் நித்திய ஒதுக்கானோர்பேரில் உனக்குப் பாசமும் பற்றும் அதிகரிக்கும்; நித்திய கன்மலையான அவருக்குள் நீ மேலும் மேலும் ஒதுங்கி பத்திரமாய் இருப்பாய்.

ஒரு மனிதன்: இயேசு பெருமானின் மனுஷீகத்தை மீண்டும் மீண்டும் தியானிப்பது உனக்கு மகிழ்வூட்டுவதாக. பரலோக சிம்மாசனத்தில் வீற்றிருப்பவர் உன் சகோதரனும். உயிரோடிருக்கும் உன் உறவின் முறையான் அவர்; உன் உருவத்தை நன்றாய் அறிந்த

வர். உன்னத மனுஷரான அவர் உருக்க இரக்கமான அநுதாபம் உடையவர்; ஆதலால் யாரையும்விட நன்ருய் உன் சோர்வையும் சோகத்தையும் சஞ்சலத்தையும் அளவிடக்கூடியவர்.

நீ இழக்கக் கொடுத்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கையில், யாரையும் இழக்கக் கொடுத்திராத பூலோக நண்பன் ஒருவன் உன்னிடம் வந்தால் உன் சஞ்சலத்தை அவன் உணரான். ஆனல் உன்னைப்போல் பலமுறையும் துக்க வெள்ளத்தில் அகப்பட்டு தத்தளித்த ஒரு நண்பன் இருக்கிருன்; உன்னைப்போல் உள்ளம் உடைந்து சஞ்சலத்தில் அமுந்தியவன்; அவன் உன்னேடு எவ்வளவும் உருக்கமாக அநுதாபப் படக்கூடியவன் அல்லவா? உன் அன்பர் இயேசு அப்படிப்பட்டவரே. மனிதனுக அவர் சஞ்சரிக்கையில், மானிட வாழ்க்கையின் பாடு சஞ்சலம் யாவற்றையும் அநுபவித்தார். உனக்கு அவர் அருளும் ஒதுக்குக்கு நீ ஓடித் தப்பும்படி உன்னைத் தாக்குகிற சூருவளிக் காற்று அவருக்கு அநுபவத்தால் நன்ருய்த் தெரியும். அவர் கன்மலை எனப்படுவர்; ஆயினும் "ஒரு மனிதன்"; அவர் இரட்சிக்க வல்லவர், இரக்கம் காட்டவும் வல்லவரே; "இம்மானுவேல்: நம்முடன் கடவுள்." வான மண்டலத்தில் விளங்கும் மேகவில்லுக்கு அவர் ஒப்பானவர்; அதின் உச்சமானது மேகங்களில் இருந்தாலும் அதின் அடிமுனைகள் பூமியில் ஊன்றி இருப்பன. இன்னமும் அவர், பிரமாண்டமான விருட்சம் போன்றவர்; எந்தப் புயற்காற்றுக்கும் எதிர்த்து நிற்கும் இந்த விருட்சத்தின் கிளைகளில் சின்னஞ் சிறிய குருவிகளும் பயமின்றிப் பத்திரமாய் உட்கார்ந்திருக்கும்.

சோகத்தில் ஆழ்ந்து புலம்பித் தவிப்போனே, "உன் காதலரின் நிழலிலே ஆசையோடு அமர்ந்திரு" (கீதகீதம் 2: 3). உயிர்த்துணைவரும் உற்ற உறவினரும் உனக்கு ஆறுதல் செய்யக்கூடாத நிலைமையில், அவர் உன்னை ஆற்றவும் தேற்றவும் கூடியவரும் பிரியமுமுள்ளவர் என்பதைப் பரீட்சித்துப் பார். ஓடை வற்

றிப்போகையில் அதின் உற்பத்தியான ஊற்றுக்கே போய்விடு; பூலோக நன்மையை இழந்துபோகையில், வற்ரு நன்மைக் கடலான உன் சிருஷ்டிகரின் திருவடிகளை அடைந்துகொள். குத்தப்பட்ட அவர் விலாவில் மறைந்துகொள். ஆணிகடாவப்பட்ட அவரது கரமே துக்கத்தை உன்மேல் வருவித்ததாம். புயற் காற்றை எழும்பச் செய்யும் அவரே அதற்கு ஒதுக்குமானவர். "இவர் எல்லாவற்றிலும் தமது சகோதரரைப்போல் ஆகவேண்டியதிருந்தது......அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதில் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிருர் (எபி. 2: 17, 18). ஜொலிக்கும் இந்த வானவில்லைப் பார். கார்மேகங்கள் சூழ்ந்து உன் பாதையெல்லாம் அந்தகாரமாகையில், உன் கண்களை ஏறெடுத்து இந்த வானவில்லை நோக்குவாயாக. அது உன் இருளில் உனக்கு ஆறுதல் தரும்.

''நான் பூமிக்கு மேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்.''

4-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

சிட்சைக்குக் காரணம்

"கர்த்தர் எவனிடம் அன்புகூருகிறரோ அவனைச் சிட்சிக்கிறர்"
—எபிரேயர் 12: 6.

என்ன! கடவுளின் அம்புகள் என் உள்ளத்திற்குள் பாய்கின்றன. நான் ஆக்கிவைத்தவைகளையெல்லாம் அவர் கவிழ்த்துக் கொட்டிப் போடுகிருர். என் வாழ்க்கையில் கார்மேகங்களைக் கனதியாய் வருவித்து என் மகிழ்ச்சியின் சூரியனை மறைத்துவிட்டார். அவர் என்னை நேசிக்கிருரா? ஆம், துன்பப்படுவோனே, புசற் காற்றில் அடிபட்டுக் கிடப்போனே, அவர் உன்னில் அன்புகூர்வதாலேயே உன்னைச் சிட்சிக்கிருர். அன்பும் இரக்க உருக்கமுமான அவரின் காத்திலிருந்

தும், மாருததும் இரக்க உருக்கமுமான அவருடைய திருவுள்ளத்திலிருந்துமே இந்தத் துன்பம் உன்மேல் வருகிறது.

நீ மாதக்கணக்காய் வியாதிப் படுக்கையில் கிடந்து இரவுகளில் சற்றும் நித்திரையின்றி வருந்துகிருயோ? இதோ, நொந்த உன் தலையைச் சாய்த்து அமர்ந்து கொள்ள ஒரு தலையணை! அவர் உன்னிடம் அன்புகூர்வதால் உன்னை சிட்சிக்கிருர்.

அருமையான ஒரு உயிரை நீ இழந்து உன் உள்ளம் உடைந்து உன் வீடு வெறுமையாய்க் கிடக்கிறதோ? அவர் உன்னில் அன்புகூர்ந்தே, அந்த உயிரை நீ இழக்கவும் கல்லறைக் குழிக்குள் வைக்கவும் செய்தார். ஒரு வீட்டில் வியாதியால் சங்கடப்படும் பிள்ளையையே தாயானவள் தன் முழு பாசத்தோடும் விழிப்பான கரிசனையோடும் நடத்துவாள்; அவ்விதமாகவே, இதோ இந்நேரத்தில் உன்னைச் சிட்சிக்கும் உன் பரம தந்தையர் தமது சகல உருக்க இரக்கத்தோடும் கரிசனையோடும் உன்னண்டைக்கு வந்துவிட்டார். உன் மேல் வைத்த அன்பினுல் இந்தத் துக்கதிற்குள் அவர் உன்னை நடத்தினுர். உன்மேல் வைத்த அன்பினுலேயே இந்தத் துக்கத்திற்கு ஊடாக அவர் உன்னை நடத்திச் செல்வார். அவரின் எந்த நடத்துதலும் காரணமற்ருே, முறையற்ருே, இருப்பதில்லை. அவரின் செய்கைகள் யாவுக்கும் அன்பே காரணமாகும். அவர் உனக்குக் குடிக்கக் கொடுக்கும் பாத்திரத்தில் ஒரு துளிக் கோபமும் கிடையாது. பக்தியுள்ள ஒரு அம்மையார், "நமக்காக அவர் யாவற்றையும் சவதரித்து வைப்பதுபோலவே துன்பங்களையும் சவதரித்து வைக்கிருர்; தமது பிரம்பால் நம்மை அடிப்பதும் அவரின் உடன்படிக்கையின் நிபந்தனையே; அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்!" என்ருர். ஸ்தோத்திரிக்கப்படும் நம் ஆண்டவர் தாமும், "நான் நேசிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்" என்கிருர் (தரி. 3:19). இந்தப் பூலோகத்தில் அவர் சஞ்சரித்த நாட்களிலல்ல, பரலோக மகிமை

களால் சூழப்பட்டு வீற்றிருக்கையில் இவ்வாறு மொழிந்தருளுகிறார்.

விசுவாசியே, இந்தப் பிரம்பு, இந்தத் தண்டனையின் பிரம்பு, உனக்காக மரித்து என்றும் உயிரோடிருக்கிற உருக்க இரக்கமுள்ள உன் நேசரின் கையில் தான் இருக்கிறது. உபத்திரவமே நீ நடந்து செல்ல வேண்டிய இராஜ பாதையாம். ஆனால் அது அன்பினால் பாவப்பட்ட பாதை என்பதை நினைத்துக்கொள். சில புஷ்பங்கள் உண்டு, அவற்றைக் கைவிரல்களுக்கிடையில் வைத்து நசுக்கினால் மட்டும் நறுமணம் கொடுக்கும்; அவ்விதமாகவே உன்னையும் நறுமணம் பெறவேண்டியே அவர் நசுக்குகிறார். சில பட்சிகள் இருக்கின்றன; முள்ளானது அவைகளில் தைத்து சதையைப் பீறும்போது மகா இனிமையாகப் பாடும்; அவ்வாறே, நீ வானம் நோக்கிக் கிளம்பி பாடிக் கொண்டே பறக்கும்படி, துன்பமாகிய முள்ளால் அவர் உன்னைக் குத்தி உன் நெஞ்சத்தைப் பீறுகிறார். நீ பாடும்படி அவர் விரும்பும் மகா இனிய கீதம் என்ன? "என் இருதயம் ஸ்திரமாயிருக்கிறது. கடவுளே, என் இருதயம் ஸ்திரமே; நான் பாடுவேன், துதித்துப் பாடுவேன்" என்பதே (சங். 57: 7). பரம பக்தன் ஒருவர், "யாரைக் கடவுள் மகா பிரகாசமாகத் துலக்க விரும்புகிறாரோ, அவர்களிலேயே தம் உளிப் பிரயோகத்தை அடிக்கடி தொடுக்கிறார்" என்றார். "வேதாகமத்தில், நாம் காண்கிறபடி, நமது துன்பங்களையும் கஷ்டங்களையுமே கடவுள் தம் திருஉள்ளத்தில் எப்பொழுதும் வைத்துள்ளார். நாம் அதில் படிக்கும் தெய்வ கட்டளைகளிலும் வாக்குத்தத்தங்களிலும் பாதிபோல் துன்புறுவோருக்கே அருளப்பட்டவையாகும்" என வேறொரு பக்தன் கூறுகிறார். "நான் துன்பப்பட்டிராவிடில், கடவுளின் இரக்கம், உண்மை, யாவற்றின் மேலுமுள்ள அவரின் ஆளுகை, இவைகளைப்பற்றி இப்போது நான் அறிந்திருப்பதில் பாதியாகிலும் அறிந்திரேன்" என இன்னொரு பக்தன் தன் மரணப்படுக்கையில் சொன்னார்.

"என் ஸ்வாமீ, நீர் என்னைச் சிட்சித்தாலும் நான் உம்மில் அன்புகூர்வேன் என்றல்ல, நீர் என்னைச் சிட்சித்தபடியால் நான் உம்மில் அன்புகூர்வேன்" என்றே சொல்லுவேன். சிட்சிக்கும் உமது அன்பின் கரத்தை ஓடிவந்து தழுவிக்கொள்ளுவேன். ஆபிரகாமைப் போல் என்னையும் கொடிய பரீட்சை செய்யத் தேவரீர் அழைக்கையில், 'இதோ, அடியேன்' என்பேன். என் மகா காரிருள் மேகங்களிலும் நான் காணும் வான வில்லானது, "அவர் அன்புகூர்வதால் சிட்சிக்கிறார்" என்பதே.

"நான் பூமிக்கு மேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

5-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

மாறுமை

"நான் கர்த்தர், நான் மாறாதவர்; ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை"—மல்கியா 3: 6.

கடவுளின் மாறுமையை என்ன சொல்லுவோம்! துக்கங்களிலும் துன்பங்களிலும் அடிபடுவோருக்கு அது திடனும் நம்பிக்கையும் தருவது. மாறுதலே மானிட வாழ்க்கையின் கதி. காட்சிகள் மாறுகின்றன. களிப்புகள் மறைகின்றன. உன் நண்பரைக் கவனி; சிலர் உன்னைவிட்டுத் தொலைதூரமாய்ப் போய் விடுகின்றனர்; சிலர் என்றும் திரும்பாத பயணமாகி விடுகின்றனர். பற்பல கட்டங்களுள்ள இந்த வாழ்க்கையில், நிலைவரமானதும், உறுதியானதும், நிலைத்திருப்பதுமானவற்றின்மேல் நாட்டமில்லாதிருப்பாரும் உண்டோ? உன் வாழ்க்கையாகிய கப்பல் பல முறையும் மோசங்களாலும் மாறுதல்களாலும் இழுக்கப்பட்டுப்போகிறது. மோசமும் மாறுதலுமற்ற பத்திரமான ஒதுக்கை அடையும்படி நீ வாஞ்சிக்கிறாய்.

நான் மாறுதவர். மனிதன் மாறக்கூடும். அவன் மாம்சமும் உள்ளமும் ஓயாமல் மாறக்கூடும்; ஏன், மனிதன் சோர்ந்தும் தவித்தும், தவறியுமே போகிறுன்; ஆனல் சோர்வுருத, தவருத, மாருத ஆண்டவர் ஒருவர் இருக்கிறார். பூலோகத்தின் எந்த மாறுதலும் அவரை அசைப்பதில்லை. நீ துள்ளித் துடித்து விழுந்தாலும் அவர் மாறுவதில்லை. நீ மனம் வருந்துகிருய், மனம் உடைகிருய், மாறி மாறித் துவளுகிருய்; துரோக சிந்தையுள்ள உன் இருதயமானது மோசம் போக்கும் வில்லைப்போல் துவளுகிறது (சங். 78: 57). இதோ நித்திய சிங்காசனத்தின்மேல் தீட்டப்பட்டிருக்கும் விலாசத்தைப் பார்! கடவுளின் செய்கைகளிலெல்லாம் விளங்கும் நாமம் என்ன? "போய்யுரையாத கடவுள்" என்பதே! (தீத்து 1: 3). அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை (யாக். 1: 17).

நான் மாறுதவர். கறுத்து இருண்ட மேகங்கள்மேல் ஆறுதல் எனும் தமது வில்லை அவர் வளைத்து வைக்கிருரே, அது யாருக்காக? தமது சொந்த உடன்படிக்கையின் ஜனமான யாக்கோபின் புத்திரருக்காக. இவர்கள் தங்கள் உண்மையான மூத்த சகோதரனுகிய இயேசுவானவரின் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு மேன்மையான ஆன்ம சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றனர் (ஆதி. 27: 15–29).

நான் மாறுதவர். மா அருமையான நாமம். உனக்கு நன்மையே தவிர வேறெதுவும் நேரிடாது என்று நிச்சயப்படுத்தும் உறுதிப்பத்திரமாம் அது. அவரின் உண்மையை நீ சந்தேகியாதே. அவருடைய நடத்துதல்கள் செம்மையற்றவை எனக் குற்றப்படுத்தத் துணியாதே. உன் வாழ்க்கையை இப்போது இருளுக்குட்படுத்தியிருப்பது அவரின் அன்பின் உடன்படிக்கையே. தமது சொந்தக் குமாரனென்றும் பாராமல் அவரை ஒப்புக்கொடுத்த தெய்வ அன்பு இந்த சமயத்திலும் மாருததாகவே இருக்கிறது. நீ உன் துன்பங்களைக் குறித்து ஆச்சரியப்படுகிருயோ? வேண்டாம்;

அவர் இந்நாள் மட்டும் உன்னிடத்தில் பொறுமையா யிருப்பதைக் குறித்தே ஆச்சரியப்படு. நீ நிர்மூல மாகாதிருப்பது உன் ஸ்வாமியின் மாறாத இரக்கங்களி ளுலேயே. அவரும் உன்னைப்போலவே அங்கும் இங்கும் துவளும் மனுஷனுயிருப்பாரானல் நெடுங்காலத்திற்கு முன்பே உன்னைப் புறம்பே தள்ளி அக்கிரமக்கார ரோடே உனக்குப் பங்கை நியமித்திருப்பார். ஆனல், "என் நினைவுகள் உங்கள் நினைவுகளல்ல; உங்கள் வழி கள் என் வழிகளுமல்லவென்று கர்த்தர் சொல்லு கிறார்" (ஏசா. 55: 8). அவரில் எவ்வித மாறுதலுமே இடையாது. ஆதலால், மேகங்களால் மப்பும் மந்தா ரமும் ஏற்பட்டிருக்கும் இப்பொழுது, நீ உன் கண்களை ஏறெடுத்து அந்த உடன்படிக்கையின் அடையாள மான வில்லை நோக்கு; கண்ணீர் உதிர்த்துக்கொண்டே, "யாக்கோபின் கடவுளைத் தன் துணையாகக் கொண் டிருந்து, தன் கடவுளாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்" (சங். 146: 5) எனப் பாடி மகிழ்ந்திரு.

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

6-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

தெய்வ அநுதாபம்

"அவர்கள் படுகிற வேதனைகளை அறிந்துகொண்டேன்"

—யாத்திராகமம் 3: 7.

மனிதன் யாரும் இவ்வாறு சொல்லக்கூடியவ னல்ல. மானிட ஆன்மாவில் அணுப்போன்ற உணர்ச்சி கள் நிரம்ப உண்டு. பூலோக அன்பரின் எந்த அளவு உருக்க இரக்கமான அநுதாபமும் இந்த உணர்ச்சிகளை அறிந்துகொள்ள முடியாது. ஆனல் துக்க பாதையில் யாருக்கும் முன்னக நடந்து செல்லும் இயேசுவை நோக்குங்கள். இவர் பாடுறுவோரின் அதிபதியாம்

(எபி. 2:10); "நமது உருவம் இன்னதென்று அவருக்குத் தெரியும்" (சங். 103: 14). இழவினால் ஏற்பட்ட மலை போன்ற துக்கம் உன் உள்ளத்தை நசுக்கிக்கொண்டிருக்கையில், உன் உத்தமோத்தம நண்பரும் உன் துக்கத்தின் பற்பல உணர்ச்சிகளை அறியமாட்டார்கள்; ஆனால் அன்பரான இயேசு அறிவார், அறியக்கூடும். அவர் ஓர் காலத்தில் உன் பாவங்களைச் சுமந்தார், உன் துக்கங்களையும் சுமந்தார் (ஏசா. 53: 4). இப்பொழுது மகத்துவ சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் உன் ஆண்டவரின் கண்கள் கண்ணீர் சிந்திக் கலங்கியவை. நீ வாதிக்கப்படுகையில், "அவர் வாதிக்கப்பட்டார்" (ஏசா. 53: 8) என்பதை நினை. நீ கண்ணீர் சிந்தும்போதெல்லாம், "இயேசு கண்ணீர் விட்டார்" (யோ. 11: 35) என்பதை நினைவுகூரு.

இஸ்ரவேலர் நூற்றுக்கணக்கான வருஷங்களாய் அடிமைத்தனத்தினால் தவித்து ஓலமிட்டுக்கொண்டிருந்தார்கள் (யாத். 2: 23). கடவுள் அதை அறியாதிருந்ததுபோல் தோன்றிற்று. பாகாலைப்போலவே அவர் தூங்கினதாகவும் (1 இரா. 18: 27) தோன்றிற்று. ஆனால் அவ்வளவு காலமும் விநாடி தவறாமல் அடிமைத்தனத்தால் தவித்த தம் ஜனங்களின்மேல் அவரின் கருணைப் பார்வை ஊன்றியிருந்தது. அக்காலத்திலே "அவர்கள் படுகிற வேதனைகளை அறிந்துகொண்டேன்" என்றார்.

இத்தேவிதமாக அவர் உன்னையும் மறந்துவிடுவதாயும் கைவிடுவதாயும் தோன்றும் சமயங்கள் உண்டு. அந்நேரத்தில் நீ, "கடவுள் இரக்கம் காட்ட மறந்தாரோ" (சங். 77: 9) என சங்கீதக்காரனைப்போல் புலம்பித் தத்தளிப்பாய். ஆனால், அவரோ எப்போதும்போலவே அப்போதும் உருக்க இரக்கத்துடன் உன்மேல் கண்ணோக்கமாயிருக்கிறார். "படமுடியாது இனித் துயரம், இனி என்னால் தாங்கமாளாது" என்று சொல்லுமட்டும் உன் துன்பங்கள் பெருகும்படி அவர் விடுவதுமுண்டு. ஆனால் எதற்காக? ஒத்தாசையுள்ள தம் கரத்தை நீட்டி தமது ஏராளமான கருணையை

வெளிப்படுத்தும் பொருட்டே. "கர்த்தரால் வந்த முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவராயிருக்கிறரே" (யாக். 5:11).

அவர் உன் வேதனைகளை அறிந்திருப்பதானது, உனக்கு அவசியமான வேதனையை மட்டும் அவர் அனுப்புவார் என்பதற்கு உறுதிப்பத்திரமாம். "உன்னை சர்வசங்காரம் செய்யேன், மட்டாய்த் தண்டிப்பேன்" (எரே. 30: 11). அவர் உனக்கு அனுப்பும் யாவும் சரிபாகமாக அளவிடப்பட்டும், ஞானத்துடன் பங்கிடப்பட்டும் உனக்கு வருகிறது. தற்செயலாகவோ கண் மூடித்தனமாகவோ ஒன்றும் நேரிடுவதில்லை. முள்ளுக்குமேல் முள் உன்னைத் தைப்பதில்லை; மட்டுக்கு மிஞ்சிய வேதனை உன்னை வருத்துவதுமில்லை. உன் கண்ணீரை அவர் தமது துருத்தியில் வைத்திருக்கிறர் (சங். 56: 8). ஒவ்வொரு கண்ணீரையும் துளிதுளியாகச் சொட்டுச் சொட்டாக அவர் கணக்கிட்டு வைக்கிறர். பரிசுத்த பண்டமான இந்தக் கண்ணீர் துருத்தியைத் தமது பொக்கிஷ அறையில் மிகுந்த பத்திரமாய் அவர் வைத்திருக்கிறர். நெடுங்காலமாய் நோயிலும் வேதனையிலும் கிடந்த ஒரு பக்தன், "என் இரட்சணிய வள்ளலின் அன்பை நான் மேலும் மேலும் அறியவும், அவர் பாடுகளின் ஐக்கியத்தை அறிந்துகொள்ளவுமே என்னை நிறுத்தி வைத்திருக்கிறர்; இதனுல் நித்திய நித்திய காலமாக என் சந்தோஷம் அதிகரிக்கும்" என்றர்.

துக்கத்தில் அமிழ்ந்திருக்கும் விசுவாசியே, பட்டயமானது உன் ஆத்துமாவை உருவிப்போயிருக்கிறதோ! (லூக். 2:35). ஆனுல் சந்தோஷப்படு. "வேதனையுற்றவர்" (ஏசா. 53) எனப்படும் மனுஷ குமாரனின் பாடுகளோடு நீ ஒரு சிறிய அளவாகிலும் ஒன்றுபடக் கிடைத்தது உனக்கு என்ன மேன்மை! என்ன பாக்கியம்! உன் இருண்ட கார்மேகத்தில் இன்றைக்கு உனக்குக் காணப்படும் ஜோதி வில்லை கண் ஏறிட்டு நோக்கிப் பார். இயேசு பெருமான், அநுதாப வள்ளலாகிய அவர், துடிக்கச் செய்யும் உன் வேதனைகளையும்

எரிக்கிற உன் கண்ணீர்ப் பெருக்கையும் அறிகிறவர். தமக்கு சித்தமான வேளையில் தமக்கு ஏற்றதான வழியாய் அவர் உன்னிடம் வந்து சகாயம் செய்வார்.

"நான் பூமிக்கு மேலாக மேகத்தை வருவிக்கும் அந்த வில் மேகத்தில் தோன்றும்."

7-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

கிருபைமயமான நிபந்தனை

"அவசியமானதால்"—1 பேதுரு 1: 6.

துக்க வீட்டின் வாசல் நிலைக்கால்மேல் தீட்டி வைப்பதற்கு இது என்ன தங்கமான வார்த்தை! என்ன அருமையான சட்ட வாக்கியம்!—"அவசியமானதால்." கடவுள், மக்கள்பேரில் செலுத்தும் ஒவ்வொரு அம்பும் இந்த நிபந்தனையுடனேயே பறப்பதாம். ஆ! துக்கத்தில் அழுந்தியிருக்கும் பிள்ளையே! கடவுள் தம் யோசனையுடன் உனக்கு அனுப்பும் எந்த துக்கத்தைக் குறித்தும் இந்த நிபந்தனையை மனத்தில் அழுத்திக் கொள். பூலோக வாழ்வின் இன்ப சுக சௌக்கிய சிகரங்களிலிருந்து இருண்ட பள்ளத்தாக்குகளுக்குள் விழுந்து தவிக்கிறாயோ? அவர் சொல்லுவதைக் கேள். "இது அவசியமானது". பூலோக வாழ்வு நிறைந்து வழிந்த பாத்திரத்தை உன் கையில் எடுத்து வாயில் வைக்குமுன் கடவுள் அதைத் தட்டிப்போட்டாரோ? உன் உயிர் வாழ்க்கையின் சௌக்கியங்களைக் குறைத்துவிட்டாரோ? உன் பையையும் பொக்கிஷப் பெட்டியையும் களஞ்சியத்தையும் வெறுமையாக்கிப்போட்டாரோ? அவர் சொல்லுவதைக் கேள். "இது அவசியமானது." இழவை அனுப்பி, அதின் கூரிய இருப்புக்கொழுவால் உன் ஆத்துமாவை மேலும் கீழும் குதறிப்போட்டாரோ? உன் வாழ்க்கையில் ஜொலித்துக்கொண்டிருந்த விளக்குகளையெல்லாம் ஒவ்வொன்றாய் அணைத்துப்போட்டாரோ? ஆம், "இது அவசியமானது." இந்த

வார்த்தைகளால் சஞ்சலம் நிறைந்து துடிக்கும் உன் உள்ளம் அமருவதாக.

ஆம், நீ அநுபவிக்கும் இந்தத் துன்பத்திற்கு நிச்சயமாகவே ஆழ்ந்த ஞானமான காரணம் உண்டு. அதை இப்பொழுது நீ அறியாய் (யோ. 13: 7). உன் அவசியத்திற்கு மிஞ்சிய வேகத்துடன் துன்ப அக்கினி எரிவதில்லை. சில சமயங்களில் அவர் கல்வியூட்டும் முறைகள் விளங்காத இரகசியங்களாகவே இருக்கும். "கடவுள் அன்பே" என நீ நாவினால் உச்சரிப்பதும் அசாத்தியமாகத் தோன்றும். உன் கொடிய இருளில் பிரகாசமான ஒரு ஒளியுமே தோன்றாதிருக்கலாம்; உன்னைக் கவிந்து நிற்கும் கார்மேகங்களில் எந்த வானவில்லும் காணப்படாதிருக்கும். இது இரகசியம், தெய்வ இரகசியம், புத்திக்கெட்டா இரகசியமே. உன் வானம் வெளி வாங்காமலே இருண்டிருக்கும். ஆனால் ஆண்டவராகிய யெகோவா விளம்புவதைக் கேள்! "அவசியமானதால்." உனக்கு நேராக வந்துகொண்டிருக்கும் அவருடைய இரதத்தின் சக்கரங்கள் மெதுவாகவே சுழலுகின்றன; ஆயினும் சீக்கிரமாக அவர் வந்து சேருவார். வெகுகாலம் நீ தனியாய்த் தவிக்கும்படி அவர் உன்னை விடார். உன்னைப் பிடித்துப் பிணைத்திருக்கும் பூலோகப் பற்றுகளை உன்னைவிட்டு அறுத்துப்போடவும், அவர் ஏக அதிபதியாக வீற்றிருக்கவேண்டிய உன் இருதய சிம்மாசனத்தில் நீ கொலு வைத்திருக்கும் உன் களிமண் சுரூபங்களை உடைத்தெறியவும், அவர் ஞானமான தம் முறைகளைக் கையாடுவார். இந்தத் துன்பம் உன்மேல் வருமுன்னே அவர்பேரில் உனக்கிருந்த அன்பு குளிர்ந்து விட்டதோ? (தானி. 2: 4). பிறரை நல்வழிக்குட்படுத்திக் கொண்டிருந்த உன் தெய்வபக்தி குன்ற ஆரம்பித்து விட்டதோ? உன் பூலோக வாழ்வின் சூரியன், ஆன்மாவில் பற்றியிருந்த தெய்வ அன்பின் அக்கினியை அவித்துப்போட்டதோ? முற்காலத்தில்போல் உன் வெளிச்சம் பரம எஜமானுக்காக எழும்பிப் பிரகாசிக்கவில்லையோ? உன்னை நயங்காட்டிப் பாவ வழிக்

குள் இழுத்துவிடும் உலகத்தோடு பாவ உறவு ஏற்படுத்திக்கொண்டாயோ? இந்த நிலைமையில் இந்தத் துன்பமே உன்னைச் சீர்ப்படுத்தக் கூடியதும் அவசியமானதுமான சிட்சையும் சிகிச்சையுமாம்; வேறெதுவுமில்லை.

நீ அமர்ந்திருந்து அவரே கடவுளென்று அறிந்து கொள் (சங். 46: 10). "அவசியமானதால்" என விளம்பும் அவர் அளவற்ற அன்பர்; அளவற்ற ஞானர்; அளவற்ற வல்லவர். சிறிய காரியங்களிலும், பெரிய காரியங்களிலும், அற்ப விஷயங்களிலும் பெருத்த அவசியங்களிலும் அவரை நம்பிப் பற்றிக்கொள். ஏனென்று கேளாத விசுவாசத்தில் பழகு. உன்னைச் சீர்ப்படுத்திக்கொள்வது உன் கையில் விடப்பட்டிருக்குமாகில், நீ வேறு வழிகளைத் தெரிந்திருப்பாய்; ஆனால் இப்போது அவருடைய வழியில் நட. நீ வலதுபுறமாய்ச் சாயும்போதும் இடதுபுறமாய்ச் சாயும்போதும், வழி இதுவே, இதிலே நட என்னும் வார்த்தைகளை உன் காதுகள் கேட்கும் (ஏசா. 30: 21).

அது இப்பொழுது உனக்கு விளங்காது; ஆனால், ஒரு நாளில் அது விளங்கிவிடும்; துன்பமானது, ஆசி அருளுடன் அனுப்பப்படும் தெய்வ தூதரில் ஒன்று என்பதும், "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்கள் நிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளில்" (எபி. 1: 14) ஒன்று என்பதும் தீர்க்கமாய் விளங்கும். வான வெளியில் மேகங்கள் இல்லையானால் வான வில்லும் இராது. மேகமேயற்ற வானத்தின் அலங்கார ஊதா உடையானது கண்ணைப் பகட்டும்; அதில் அங்குமிங்கும் செல்லும் இலவம்பஞ்சுபோன்ற மேகங்களின் அழகிய காட்சி காணப்படும்; பகல் அரசனின் அஸ்தமனமானது தங்க ஒளியோடும் இரத்தாம்பர ஆடம்பரத்தோடும் மனதைப் பரவசப்படுத்தும்; மெய்யே. ஆனால் காலாகாலங்களில் மேகங்கள் அடர்ந்து கவியாவிடில் பூலோகத்திற்கு நேரிடுவது தெரியாதோ? பூமிக்கு ஆஸ்தியும் ஐசுவரியமுமான மழைத்துளிகள்

இறங்குமோ? வாடி வதங்கிய பயிர் பச்சைகளுக்கு புது உயிர் ஊட்டும் வான வருஷம் ஏது?

ஆன்ம வாழ்க்கையிலும் இதே விதிதான். துன்ப மேகங்கள் அவசிய அவசியமாம். அவற்றினின்று இறங்கும் ஒவ்வொரு மழைத் துளியும் அன்பு பொதிந்திருக்கப் பெற்றதாம். துன்பப்படுவோனே, துக்கத்தில் அழுந்துவோனே, இந்நேரத்தில் முதலாய் இருண்டு கவிந்திருக்கும் கார்மேகங்கள்போலும், யாவற்றையும் பெயர்த்தெறியும் பிரசண்டமாருதம்போலும் துன்பம் உன்னைச் சூழ்ந்திருக்கிறதோ? அதோ, மேலே நோக்கிப் பார்! மேகங்களில் ஒரு வில் காணப்படுகிறதல்லவா? மேகங்களை வருவித்தவரே இந்த வில்லையும் அவற்றின் மேல் வைத்தார். அது, "அவசியமானதால்" எனும் மேக வில்லே!

"நான் பூமிக்கு மேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

8-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

தெய்வ சமுகமும் இளைப்பாறுதலும்

"என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்"—யாத்திராகமம் 33: 14.

"வழியை அறிவியும்" என மன்றாடின மோசேக்கு வழி அறிவிக்கப்படவில்லை; அதற்குப்பதில் அதிலும் மேலான தெய்வ வாக்குக் கிடைத்தது. "நீ என்னை நம்பு," "நான் உன்னோடு செல்வேன்."

துன்பப்பட்டோனே, மேக ஸ்தம்பத்தினின்றும் புறப்படும் சத்தத்தைக் கேள். நீ செய்யும் பாழ்வனாந்தரப் பிரயாணத்தில், யெஷுரனின் கடவுள் மெய் இஸ்ரவேலனை உனக்கு அருளும் வாக்காம் இது. பூர்வ காலத்தில் மோசே ஆரோன் என்பவர்களின் கையால் தமது ஜனங்களை ஒரு ஆட்டுமந்தையைப்போல் வழி நடத்தின (சங்: 77: 20). கடவுள் உன்னையும் அதே

போன்ற மேய்ப்பனின் அன்போடு நடத்துகிருர். நீ விருப்பியிருப்பதும் தெரிந்திருப்பதுமான வழிக்கு அவரின் வழி முற்றிலும் வித்தியாசமாக இருக்கலாம். ஆனுல் உன் வழியைத் தெரிந்துகொண்டவர் உன்னை விட மேலானவர். அதின் ஒவ்வொரு கோணலான வளைவிலும் சுற்றிலும் நீ செல்லுவதற்கு அவர் ஞானத்தோடும் நீதியோடும் குறித்துள்ள நோக்கம் உண்டு.

கடந்த காலங்களின் தெய்வ நடத்துதல்களை நினைவுகூரும் யாரும் அவருக்கு நன்றியும் ஸ்தோத்திரமும் படைக்காதிரார். கரடுமுரடான வனுந்தர வழிகளில் அவரின் ஆடுகள் போகும்போது, மேய்ப்பனுகிய அவரே அவைகளுக்கு முன்சென்று நடத்துகிருர். முள் புதர்களுக்கூடாகப் போவதால் அவைகளின் தோல் பீறப்படுகையிலும், கடு நடையால் அவைகள் தளர்ந்து தள்ளாடுகையிலும், அவர் அவைகளைத் தமது கரங்களில் எடுத்து வைத்துக்கொள்ளுகிருர். அவர் கூட இருக்கையில் எந்த சிலுவைப் பளுவும் லேசாகிவிடும், எந்தக் கவலையும் இனிய அநுபவமாகிவிடும். உனக்குத் தெரியாததும் பலவித மாறுதல்கள் உள்ளதுமான வருங்கால விஷயமாய் அவரை நம்பிப் பற்றிக்கொள். நீ ஆவலுடன் பற்றியிருந்த உன் உறவினரும் நண்பரும் உன்னைக் கைவிடுவார்கள்; ஆனுல் உத்தமோத்தம நண்பரான உன் ஆண்டவர் அவருடைய கிருபையின் மேக ஸ்தம்பத்தோடு உன்முன் சென்று நடத்துகிருர். அவரே உன் பங்காயிருப்பதால், அவருடைய சித்தத்தின்படி எதையும் உன்னைவிட்டு எடுத்துப்போடட்டும், நீ சந்தோஷமாயிரு. கொடை வள்ளலான கடவுளே உன் உச்சிதமான உடைமையும் சுதந்தரமும் ஆகிவிடுவதால், எந்தப் பூலோக ஈவையும் நீ இழந்துவிடலாமே. சகல திருப்தியும் அளிக்கும் கருணுநிதியாகிய அவரே உன் உள்ளத்தில் ஏக சக்காதிபதியாக ஆளும்பொருட்டு, நீ வைத்திருந்த உன் களிமண் சுரூபங்களை அவர் உடைத்தெறிந்திருப்பார். அவருடைய பிரசன்னமே

உன்னேடிருக்கத்தக்கதாக, வேற்று உறவினரையும் தோழரையும் அவர் உன்னைவிட்டு அகற்றயிருக்கலாம். இனி நீ அதிக ஊக்கத்தோடும் உண்மையோடும், "உம்முடைய சமுகம் என்னேடேகூடச் செல்லாமற்போனல் என்னை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்" (யாத். 33: 15) எனப் பிரார்த்திக்கக்கூடும். நீ உனக்குக் கூடாரங்களைப் போட்டு, "நான் வசிக்கும் வாசஸ்தலம்" என அவைகளில் எழுதிவைக்க யோசித்தாயோ? ஒருநாளும் அவர் அதை அநுமதியார். இம்மை உனக்குக் கூடாரம், மறுமை உனக்குக் குடியிருப்பு. "பயப்படாதே, நீ செல்லும் வழியில் நீ நண்பாற்று ஆறுதலற்று விடப்படுவதில்லை" என அவர் சொல்லுகிறதைக் கேட்கிருயா? "பரதேசத்தில் தங்கும் பரதேசியே, "என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்" என்றும் அவர் திருவுளம் பற்றுகிருர். உன் இருளான சஞ்சல நாட்களிலெல்லாம், நீ களைத்தும் சோர்ந்தும் போகையில், உன் துக்கத்திலும், துன்பத்திலும், உன் தனிமையிலும், ஏகாந்தத்திலும் அவரின் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும். உன் பிரயாண முடிவில், ஒளியும் மேக ஸ்தம்பமும் உனக்கு அவசியமில்லாமற்போகும்போது, "நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்." அச்சாரமும் முன் ருசியுமான கிருபையை இம்மையில் பெற்றுவந்த உனக்கு, பேரின்பப் பேருன மகிமை மறுமையில் கிடைக்கும்.

"நான் பூமிக்கு மேலாக மேகத்தை வருவிக்கும்போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

9-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

கொடுப்பவரும் எடுப்பவரும்

கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்"—யோபு 1: 21.

இவ்விதமாக முழங்காலில் விழுந்து பணிவதும் ஸ்தோத்திரிப்பதும் என்ன சிறந்த மனநிலை! கன்னுக்

குத் தோன்றும் காரணங்களைப் பாராதே, கண்ணுக்குத் தோன்ற கடவுள் ஒருவரையே பார். சபேயர்–அக்கினி–பெருங்காற்று–பட்டயம்–இவை எதையும் பக்தன் யோபு நோக்கவில்லை; கொடுத்த கர்த்தரையும் எடுத்த கர்த்தரையும் மாத்திரமே தன் மனதில் எண்ணலானன்.

துன்ப காலங்களில் மக்களில் ஏன் இவ்வளவு மனமடிவு, மிதமிஞ்சிய சஞ்சலம், சுவிசேஷ போதனைக்கு மாறுன முறுமுறுப்பு? தளம் பாவப்பட்ட பெரும் பாதைகளில் ஓயாது ஓடிக்கொண்டிருக்கும் பாரமான வண்டி சக்கரங்களால் இடிமுழக்கம் போன்ற இரைச்சல் காதுகளை அடைப்பதுபோல், "காரணம் என்ன?" "காரணம் என்ன?" எனும் கேள்வி ஓயாமல் உன் மனதை இடித்துக்கொண்டே இருக்கிறது. உயரமான பர்வதத்திற்கு ஏறவும், அங்கே கடவுள்தாமே விடுக்கும் மொழியைச் செவியில் ஏற்றுக்கொள்ளவும் மனமற்றுப் போகிருய்; பூரண நம்பிக்கையுடன் "ஆண்டவனுடைய சித்தம்போலவே நடக்கட்டும்" எனச் சொல்ல உனக்குப் பிரியமில்லை. எந்தக் கொடிய கொந்தளிப்பின் மத்தியிலும் உன் ஆண்டவர்தாமே அன்புடன், "நான்தான்!" (மத். 14: 27) என உரைக்கும் இன்பமொழியை செவியிற்கேளாயா? "கர்த்தருடைய செயல் இல்லாமல் ஊரிலே தீங்குண்டாகுமோ?" (ஆமோ. 3: 6). கர்த்தருடைய கரம் கலவாமல் பாத்திரத்தில் கசப்பு உண்டாகுமோ? அவர் தம் மக்களின் காரியாதிகளை யாரிடமும் நம்பி ஒப்புவியார்; அவ்வளவாய் அவர்களில் அன்பு வைக்கிருர். நீ குயவன் கையிலுள்ள களிமண்ணே (எரே. 18: 6); வெள்ளியைப் புடமிடுவோனின் கையிலுள்ள பாத்திரமே. அவரவருக்குரியதை அவரே அளந்து கொடுப்பவர்; யாவருக்கும் குடியிருப்பின் எல்லைகளைக் குறிப்பவரும் அவரே. "கடவுளாகிய கர்த்தர் ஒரு ஆமணக்குச் செடியை கட்டளையிட்டார்"; "கடவுளாகிய கர்த்தர் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார்" (யோனு 4: 6, 7). இரக்கங்களின் காரண கர்த்தாவும் துக்கங்களின்

காரண கர்த்தாவும் அவரே; ஆறுதல் அளிப்போரும் அவரே, பாரச் சிலுவையைச் சுமத்துவோரும் அவரே. நாசியில் ஜீவசுவாசத்தை ஊதிய ஜீவநாயகர் அவரே (ஆதி. 2: 7); அவர் அழைக்கும் சத்தம் கேட்டவுடனே ஆவி தன்னைத் தந்த கடவுளிடம் சென்றுவிடுகிறது.

உன் ஜீவனும் உனக்கு அருமையானோரின் ஜீவனும் இரவற் பொருளே. இதை எண்ணிக்கொள். சகல உடைமைகளுக்கும் பண்ணைகளுக்கும் பெரிய முதலாளியாகிய கடவுள் அவருக்கு இஷ்டமான வேளையில் உன் வயலை எடுத்துக்கொள்ளுவார், குத்தகையை வாங்கிப்போடுவார். "அவர் கொடுத்தார்." நீ பெற்றிருக்கும் இரக்கங்கள் யாவும் இரவல்களே. அவைகளைத் தருகிறவர் கடவுள்; அவைகள் நிலைத்திருக்கும்படிச் செய்கிறவர் கடவுள்; அவைகளை வாங்கிப்போடுகிறவர் கடவுளே.

பல சமயங்களில் உன் இருதயமாகிய வீட்டை நெருக்கிக்கொண்டு கிடக்கும் தட்டுமுட்டுகளையும் சப்புச் சவறுகளையும் அவர் வெளியே எறிந்துவிட்டு, வெறுமையாக்கப்பட்ட உன் உள்ளத்தில் அவரே வசிக்க சித்தங்கொள்ளுகிறார்; அவருடைய மகிமையின் பிரசன்னமும் அன்பும் உன்னிலே தங்கியிருக்கும்! என்ன பாக்கியம்! அவரை நீ இழந்துவிட்டால் அந்த நஷ்டத்திற்கு எதுவும் ஈடு செய்யாது. அவர் உன்னில் இருந்தால் எந்த நஷ்டத்திற்கும் ஈடு செய்வார். கொடுக்கிறவரும் எடுக்கிறவருமான இந்தக் கடவுளின் அன்பையும் மாறாத உண்மையையும் விடாப்பிடியாய்ப் பற்றிக்கொள். அடிக்கடி உன் அறிவுக்கும் உன் பார்வைக்கும் தோன்றுவது உனக்கு விபரீதமாயிருப்பதால், "அப்படியல்ல, ஆண்டவனே!" (ஆதி. 19: 18) எனச் சொல்லத் துணிகிறாயல்லவா? அதோ பார், கன்னங்கரேலெனக் கவிந்திருக்கும் கார்மேகத்தில் ஒரு வானவில்!—"ஆம், பிதாவே, இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது." தெய்வவாக்கை நம்பும் விசுவாசியே, இந்த வில்லைப் பார்த்து ஆனந்த பூரிப்பில் மகிழ்.

"நான் பூமிக்கு மேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

10-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

ஆபத்தில் விடுதலை

"ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்"

—சங்கீதம் 50: 15

உனக்கு விதவிதமான துன்பங்கள் நேரிடுகின்றன! வியாதி: அதினால் ஓயாத அமைதியின்மை, தளர்ச்சி, இழக்கக் கொடுத்தல்: உன் அரிய பொக்கிஷங்கள் பறிக்கப்படுகின்றன. கொடிய சஞ்சலத்தில் அழுந்துகிறாய். பொருள் நஷ்டம்: உன் பூலோக உடைமைகள் குறைந்து விடுகின்றன; அன்றேல், எடுபட்டுப் போகின்றன; உன் செல்வம், 'செல்வோம், செல்வோம்' என சிறு கடித்துப் பறந்துபோகின்றது. நண்பரின் கொடுஞ் செய்கை: யாவையும்விட இதுவே உனக்குக் கொடும் வேதனை; நீ வைத்திருந்த நம்பிக்கைப் பற்று மோசம் போயிற்று; நண்பரின் அன்பு வாடிப்போயிற்று; காய்ந்த இலைகள் காற்றில் உதிருவதுபோல், நீ கொண்டிருந்த நம்பிக்கைகளெல்லாம் உதிர்ந்துபோயிற்றே.

ஆனால், "கடவுள் நமக்கு அடைக்கலம், பலம்; ஆபத்தில் அவரே கைகண்ட துணைவர்" (சங். 46: 1). துன்பத்தில் அழுந்தினோனே, பாதுகாப்பற்ற உன்னை அவர் புசல் காற்றில் ஒதுக்கின்றி விட்டுவிடுகிறதில்லை. "என்னை நோக்கிக் கூப்பிடு." அவர் தாமே தங்கியிருக்கும் மாளிகைக் கூடாரத்திற்குள் உன்னை அழைக்கிறார். நீ உலகத்தின் திவ்வியமான தண்ணீரைப் பருகி கடவுள் அற்றோனாய் இருப்பதைவிட, மாராவின் கசப்பான தண்ணீரே உனக்கு நலம். அவர் அதை மதுரமாக்குவார். களிம்பு மேலும் மேலும் உன்னில் உண்டாகி உன் ஆத்மா மண்ணோடு ஒட்டிக்கொள்ளுவதைவிட,

நீ சூளையில் ஓங்கி எரிகிற அக்கினி சுவாலைகளுக்குள் "தெய்வ புத்திரனைப்போலிருக்கிற" ஒருவருடன் இருப்பது உனக்கு நலம் (தானி. 3: 25). "வெள்ளியைப் புடமிடும்" உன் தெய்வம் (மல். 3: 3), அக்கினிக்கு முன்னிருந்து நீ எரிந்துபோகாதபடி உன்னைப் புடமிட்டுக்கொண்டிருக்கிறார். ஆம், "நான் உன்னை விடுவிப்பேன்." இதுவே அவர் அருளும் சமயோசிதமான வாக்காம். இந்த விடுதலையானது, நீ எதிர்பார்த்ததும் உன் ஜெபங்களில் நீ வேண்டிக்கொண்டதும், நீ விரும்பியதுமான விடுதலையாக இராதிருக்கலாம். அவர் உன்னை அன்புடன் சிட்சிப்பதின் பயனாக, "நீ அவரை மகிமை படுத்துவாயானால்," தாங்கக்கூடாத எந்தக் கொடிய உபத்திரவமும் விரும்பப்படத்தக்கதல்லவோ? அதை நீ சகித்துக்கொள்ளலாமல்லவா? "அவரை மகிமைப் படுத்துவாய்." எப்படி? காரணம் தேடாத களங்கமற்ற உன் விசுவாசத்தாலும், முறுமுறுப்பின்றி சாந்தமாயும் பணிவாயும் அவரின் நடத்துதல்களுக்கு அடங்குவதாலுமே. இதே நடத்துதல்களினிமித்தம் கிருபாகரரான உன் இரட்சகர் உன் உள்ளத்திற்கு முன்னிலும் அதிக அருமையாகிவிடுவார்.

உபத்திரவம் நேரிட்ட சமயங்களில், எக்காலத்துப் பக்தரும் அவரை மகிமைபடுத்தும்படி தூண்டப்பட்டார்கள். புடமிடும் தெய்வ உலையில் போடப்பட்டிராவிடில், தாவீது தன் இனிய கீதங்களை இயற்றியிரார்; பவுல் தன் அரிய நிருபங்களை எழுதியிரார். பின்னை காலங்களில் திருச்சபையின் போதகராகும்படி அவர்கள் உபத்திரவக் கல்விச்சாலையில் பயிற்சியடைந்தனர். உன்னையும் அவர் அவ்வாறே உபத்திரவத்திற்கு உட்படுத்தும்போது மனப்பூர்வமாக அவருக்குக் கீழ்ப்படிந்தும், எதிர்பேசாது அவருக்கு அடங்கியும் நீ அவரை மகிமைப்படுத்தவேண்டும். தற்சிந்தையும், முகமூடலும் மனவேகமுமான துக்கத்தை உள்ளத்தில் பேணுமல், காலத்தை முன்னிலும் அதிகமாக மதித்து, வாழ்க்கையின் மேன்மையைப் பெருமிதப்படுத்தி, உனக்குக் குறிக்கப்பட்டிருக்கும் பணி

யும் போராட்டமுமான பெருத்த கருமத்தில் ஈடுபடுவாயாக.

"அவர் அந்தகாரத்தை வரப்பண்ணுவதற்கு முன்னும், இருண்ட மலைகளில் உன் கால்கள் இடறுவதற்கு முன்னும், நீ வெளிச்சத்துக்குக் காத்திருக்கும்போது அவர் அதை அந்தகாரமும் கார் இருளுமாக மாறப்பண்ணுவதற்கு முன்னும், நீ கடவுளாகிய கர்த்தருக்கு மகிமையைச் செலுத்து" (எரே. 13: 16).

"நான் பூமிக்கு மேலாக மேகத்தை வருவிக்கும்போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

11-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

பரிதவிக்கும் அன்பு

"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்"—சங்கீதம் 103: 13.

"அப்பா, பிதாவே" என்னும் விளி சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கும் மொழி (மார்க்கு 14: 36). பின் வருபவை, கடவுளே உன் மனக்கண்முன் நிறுத்தும் பூலோகக் காட்சிகள்: வியாதிப் படுக்கையில் தளர்ந்து ஒடுங்கியோ மரணத் தருவாயிலோ கிடக்கும் தன் பிள்ளையைக் குனிந்து நின்று பார்க்கும் ஓர் தந்தை; துடித்துக்கொண்டிருக்கும் தன் செல்லக் குழந்தையை பாசத்தோடும் கரிசனையோடும் தன் மார்போடு அணைத்துக்கொள்ளும் அன்னை. "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல்." "ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்" (ஏசாயா 66: 13).

நீ சகிக்கக்கூடாத அகோர துன்பத்தில் அழுந்தி, நான் படும் துன்பத்துக்குச் சரியான துன்பம் உண்டோ, என்னைப்போல் பாழாக்கப்பட்ட நிர்ப்பந்த தோஷியும் உண்டோ என நீ மறுகுகையில், "இதுவே பிதாவின் திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது" (மத். 11: 26) எனும் எண்ணம் உன் முறுமுறுப்பையும்

மறுகுதலேயும் அடக்குவதாக. பூலோகத்தின் எந்த உருக்கபாசமுள்ள தாய் தந்தையின் அன்பும் பரிதாபமும், கடவுளின் பரிதபிப்புக்கும் அன்புக்கு முன்பாக கேவலம் நிழலேயாகும். இம்மட்டும் முகமலர்ச்சியுடன் காணப்பட்ட உன் பரம தந்தையின் முகம் வேறுபட்டு, சிட்சையின் பிரம்பு அவர் கையில் இருப்பதைக் காண்கிருயோ? மாறுதலடைந்த அவரின் நடத்துதலுக்கு ஏதாகிலும் மறைவான காரணம் இருக்கவே இருக்கும். தன் பிள்ளேயின் இரணத்தில் வைத்தியனுடைய கூரிய கத்தி பாய்கையில், அதைப் பார்க்கும் தாய் தகப்பனின் குடல் துடிக்கிறதே, உள்ளம் உருகுகிறதே; அப்படியானுல், உன் பரம தகப்பன்—உன்னுடன் உடன்படிக்கை செய்திருக்கும் தெய்வ தந்தை—உன் உள்ளத்தின் ஆழங்களேத் தமது சிட்சையால் குடைகிறபோது, அவரின் திருஉள்ளமானது இன்னும் எவ்வளவு அதிகமாய்த் துடிக்கும்? அவருடைய நடத்துதலின் ஞானம் மட்டுப்பட்டதல்ல. பூலோகத் தகப்பன் தவறிவிடுவான், அவன் தவருமல் இருப்பதேயில்லே. "கடவுளின் வழியோ உத்தமமானது" (சங். 18: 30). "இவையெல்லாம் உங்களுக்குத் தேவையென்று உங்கள் பரமபிதா அறிவார்!" (மத். 6: 32); அவரின் நடத்துதல் ஒவ்வொன்றுக்கும் இதுவே விளக்கமாம்.

அவரைத் தேடிக் கண்டுபிடிக்கக் கூடாதபோது, அவரை நம்பிக்கொள். அவர் "பூமியின்மேல் மேகத்தை வருவிக்கும்போது," நீ உயரப் பறந்து மேகத்தை ஊடுருவிச் செல்ல முயலாதே. மேகத்தில் தோன்றும் வில்லேயே கண் தட்டாமல் பார்த்துக் கொண்டிரு. புத்திக்கெட்டாத இரகசியம் கடவுளுடையது, தெய்வ வாக்குத்தத்தம் உன்னுடையது. அவரின் சகல நடத்துதல்களின் பயனுக, நீ முன்னிலும் கெட்டியாய் அவரை நம்பிப் பற்றிக்கொள். ஒரு தடுமாற்றமுமின்றி உன்னே அவருக்கு ஒப்புவித்துவிடு. பூர்வ காலங்களில் எப்பிராயீமைக்குறித்து, "அவனே நினேத்துக்கொண்டே இருக்கிறேன்" என்று ஆண்டவர் உரைத்தார் (எரே. 31: 20); இதே திவ்விய

மொழியையே, அவரின் உடன்படிக்கைக்குள்ளான ஒவ்வொரு குடும்பத்தையும் பற்றி, விசேஷமாக உபத்திரவ காலத்தில் அவர் கூறுகிறூர். "உன்னை நினைத்துக் கொண்டே இருக்கிறேன்." நீ நாணலைப்போல் தலையைத் தொங்கவிட்டு நிற்கையிலும், துக்கத்தால் உன் உள்ளம் பிளக்கப்படுகையிலும், அவரின் திருக்கண்கள் பரிதாபத்துடன் உன்னை நோக்கி நிற்கின்றன. கண்ணீர்ப் பெருக்கால் உன் பார்வை அடைப்பட்டுப் போயிருக்கும்போதும், "ஆம், பிதாவே" என்று சொல்லுவாயாக.

"நான் பூமிக்கு மேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

12-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

ஆனந்த நன்னம்பிக்கை

"நாம் எதிர்பார்க்கும் ஆனந்த நன்னம்பிக்கை......மகத்தான நம்முடைய கடவுளும் இரட்சகருமாகிய கிறிஸ்து இயேசுவின் மகிமைப் பிரசன்னம்"—*தீத்து* 2: 13.

வானில் இருண்ட மேகங்களும், கீழே பெருமழையும் புசற் காற்றுமாய் இருக்கிற நிலையில், இந்த வானவில் என்ன ஜோதி காட்சியாயிருக்கிறது! நன்னம்பிக்கையானது களிப்புண்டாக்கும் மனவெழுச்சி. கவி இயற்றும் புலவர் அதைப் பரவசத்துடன் வர்ணிப்பர்; இசை வல்லோரும் சங்கீத சிரோமணிகளும் அதின் உன்னத உணர்ச்சிகளை தீங்கானமாக மீட்டுவர்; ஆனால், ஐயோ! நன்னம்பிக்கையினின்று வீண் நம்பிக்கையின் கனவுகளும் கற்பனைகளும் அடிக்கடி தோன்றி மாயமாய் மறைந்து விடுவதுண்டு. "காலையில்," பூ வாழ்க்கையின் புஷ்பங்கள் மலர்ந்து செழிக்கும்; "மாலையில்" அவைகள் உதிர்ந்து காலின்கீழ் மிதிபடும். ஜீவகால முழுமைக்கும் நீ போட்டுவைத்த திட்டங்கள் ஒரு சமயம் நிறைவேறுவதாகத் தோன்றும்; எதிர்பாராமல்

திடீரென்று பெருவெள்ளமும் பெருங்காற்றும் மோத, அவைகள் இருக்கும் இடம் தெரியாமல் ஒழிந்துபோம்.

ஆனால் "ஆனந்த நன்னம்பிக்கை" ஒன்று உண்டு. அது வாடுவதுமில்லை, அழிவதுமில்லை. அது, "தெய்வ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கை" (ரோம. 5: 2). உன்னை வெட்கப்படுத்தாத நம்பிக்கை: "மகத்தான கடவுளாகிய நம்முடைய இரட்சகரின் பிரசன்னம்" (தீத். 2: 13). பூலோகத்தில் உன்னுடைய சகோதரன் அல்லது நண்பன் கடல்களுக்கப்பாலுள்ள தொலை தேசத்திற்கு சில காலம் போயிருக்கையில், அவனுடைய வருகைக்காக எவ்வளவாய் ஏங்குகிறாய்! அவனை மீண்டும் கண்டு உன்னோடு வைத்துக்கொள்ள எவ்வளவு ஆத்திரம் உனக்கு இருக்கிறது! அப்படியானால், கிறிஸ்தவன் கிறிஸ்துவளாகிய நீ, சகோதரரில் சகோதரனும், நண்பரில் நண்பனுமானவரின் வருகைக்காக எவ்வளவு அதிகமாய் ஏங்கவேண்டும், ஆத்திரப்படவேண்டும்! "நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடம் சேர்த்துக்கொள்வேன்" (யோ. 14: 3) என அவர் கிருபையுடன் வாக்கருளியிருக்கிறாரே.

அவர் "தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராய்" (2 தெச. 1: 9) வரும் அந்நாள், ஆ, என்ன மனமகிழ்ச்சி நாள்! அவருடையவர்களுக்கு இனி பாடும் இல்லை, அவர்கள் பாவம் செய்வதுமில்லை. இனி வியாதியும் வலியும் நோயும் இல்லை. இனி கண்ணீருமில்லை, கல்லறைக் குழியுமில்லை. இதுமட்டுமோ? இனி தீங்குமில்லை, அன்பரை விட்டுப் பிரிவதுமில்லை, துரோகஞ் செய்யும் அசுத்த இருதயம் இருப்பதுமில்லை. ஆன்மாவாகிய மணவாட்டியின் திருமண் நாள். மண்ணில் படுத்திருக்கும் சரீரம் மகிமை பொருந்தி, மீட்கப்பட்ட ஆவியுடன் மீண்டும் சேர்ந்துவிடும். கல்லறைக்குழி பாழாக விடப்படும்: "மரணம் ஜெயமாக விழுங்கப்படும்" (1 கொரி. 15: 54); "இப்படியாக எப்பொழுதும் ஆண்டவரோடிருப்போம்" (1 தெச. 4: 17).

வாசிப்போனே, "அவரின் பிரசன்னமாகுதலை அன்போடு எதிர்பார்க்கிறாயா?" (2 தீமோ. 4:8). கடவுளின் நாளுக்கு ஆவலோடு காத்திரு. அதைச் சீக்கிரமாய் வரச்செய்வோரோடு (2 பேது. 3: 12) நீயும் சேர்ந்து அவ்வாறே ஆவலோடும் ஆத்திரத்தோடும் எதிர்பார்க்கிறாயா? "இன்னும் சொற்பக் காலந்தான், வருகிறவர் வருவார்" (எபி. 10: 37). நீ உடன்படிக்கையின் பிள்ளையாயிருந்து, பிள்ளைக்குரிய உரிமையுடன் கிருபாசனத்தை அண்டி நிற்பாயானால், மகிமையின் சிங்காசனத்தைப்பற்றிய அச்சம் அணுவளவும் உன்னில் இருக்கவேண்டியதில்லை. அவர், "மகத்தான கடவுள்," வாஸ்தவமே; ஆயினும் அவர் உன்னுடைய இரட்சகர். அவர் உன் சொந்தத்தாரான மீட்பர்; அவரே பூலோகத்தை நீதியோடு நியாயந்தீர்க்க நியமிக்கப்பட்டிருக்கிறார் (சங். 98: 9). இனி வெளிப்படப்போகும் மகிமையின்மேல் ஜோதி காட்சியாக வளைந்திருக்கும் இந்த வானவில்லை நீ திரும்பத் திரும்ப நோக்கிப் பார். "தமக்காகக் காத்திருக்கிறவர்களுக்கு"—இதை நினைத்துக் கொள்—"இரட்சிப்பை அருளுகிறவராய்ப் பாவ சம்பந்தமின்றி அவர் இரண்டாந்தரம் தரிசனமாவார்" (எபி. 9: 28).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

13-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

கிருபை கரத்தால் எடுத்துக்கொள்ளப்படுதல்

"நீதிமான் வாராததற்கு முன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறான். நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்துத் தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்"

—ஏசாயா 57: 1, 2.

பூலோகத்தில் மகா கொடிய துயரத்தை விளைவிக்கும் இழவையும் இந்த வசனமானது நொந்த உன்

உள்ளத்துக்கு விளக்கிக்காட்டி ஆறுதல் அளிக்கிறது. உன்னால் நேசிக்கப்பட்டு அகாலமாய் இறந்துபோனவர்கள் மிகுதியான துன்பத்தினின்றும் மிகுதியான பாடுகளினின்றும் தப்பிக்கொள்ளுகிறார்களாம். (ஆயினும், அவர்கள் காலத்துக்கு முன்னேயே ஒழிந்தனர் என நீ புலம்பித் தவிக்கிறாய்). உன் கண்ணெட்டும் தூரத்துக்கப்பால் என்ன என்ன தீங்குகளும் கேடுகளும் இருக்கின்றனவோ நீ அறியாய். மிக்க அழகும் உறுதியும் பொருந்தினதாகக் கட்டப்பட்ட கப்பல் போல், மா பெரிய நம்பிக்கைகளுடன் வாழப் புறப்பட்ட உன் அன்பன், இவ்வுலகத்தின் கொடிய சாகரத்தில் அடிபட்டு நாசமாகியிருக்கக்கூடும். உன் ஆண்டவர் மகா நன்மையானது எதுவென்று அறிவார். உன் ஆசைக்குரிய மல்லிகையை விரியுமுன்னே அவர் பிடுங்கிவிட்டாரோ? எரிக்கும் சூரிய கிரணங்கள் அதைத் தீய்க்காதபடியல்லவோ அவ்வாறு செய்தார். உன் ஆட்டு மறியை ஏற்கனவே தம் தொழுவத்திற்குள் அடைத்துவிட்டாரோ? பூலோக உறவால் அதின் அரிய கம்பளி கெடாதபடியே அவ்வாறு செய்தார். உன் வியாபாரக் கப்பல் இடை வழியிலேயே துறைமுகம் பிடித்துவிட்டதோ? உன் நோக்கம் நிறைவேறுமுன் உன் புல்லறிவுக்குத் தோன்றாத பயங்கரப் புசல்கள் அதை ஆழ்த்தக்கூடியதாயிருந்தன; ஆகவே, அது நாடின துறைமுகத்தில் அதைக் கொண்டுவந்து சேர்க்கிறார் (சங். 107: 30).

ஆம், அமர்ந்த சாந்த துறைமுகம். வாழ்க்கையின் புசல்களெல்லாம் ஓய்ந்தன. அந்தக் கரையில் ஒரு சின்னச் சிறிய அலையும் உண்டாவதில்லை. உன் ஆருயிர் அன்பன் சமாதானத்துக்குள் பிரவேசித்தாகிவிட்டது; அது இனி வர இருந்த இளைப்பாறுதலே (எபி. 4: 9). மரித்துப்போன பக்தர் மண்ணோடு மண்ணாகக் கலந்து மறக்கப்பட்டேபோவாரென்றால், கல்லறைக் குழியின் நித்திய மௌனமே அவர்கள் பங்காகிவிடுமானால், அவர்களின் மரணமாகிய இழவு தாங்கக்கூடாத வேதனையேயாகும். ஆனால், "அழாதே, பிள்ளை

மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறது'' (மார். 5: 39). ஆம்; அழாதே, மரிக்கவில்லை, உயிரோடிருக்கிறது. உன் கண்ணீரும் உன்னோடு சேர்ந்தோரின் கண்ணீரும் அருவி போல் விழுந்துகொண்டிருக்கும் அதே சமயத்தில், பிரிந்துபோன ஆவியானது நித்திய பகலின் இன்பப் பெருக்கில் களித்துக்கொண்டிருக்கிறது; சுக பத்திரமான ஒதுக்கிலும் சொந்த வீட்டிலும் அது வாழுகிறது! சரீரமானது தன் நீண்ட ஒடுக்கப் படுக்கையில் வைக்கப்பட்டிருக்கிறது; கல்லறைக் குழியில் அது அமர்ந்து இளைப்பாறுகிறது. அழிவின்மையின் உதயம் தோன்றும்போது மகிமையுடன் நாம் அதை மீண்டும் சந்திப்போமென்ற களிப்பான நம்பிக்கையுடன், "நல் இரவு, போய்வா'' எனச் சொல்லி, படுக்கை அறையைவிட்டு வந்துவிடுகிறோம். சூரியன் மந்தாரமில்லாமல் உதிக்கும் (2 சாமு. 23: 4); "அந்த சூரியன் அஸ்தமிப்பதில்லை'' (ஏசா. 60: 20).

பூலோகத்தில் அருமைக்கு அருமையாயிருந்த ஆருயிர் அன்பனை இழந்து சஞ்சலத்தில் அமிழ்ந்திருக்கும் பிள்ளையே, உன் கண்ணீரைத் துடைத்துவிடு; அழுகையை நிறுத்து. அன்பனுக்கு அகால மரணமே, ஆனால் காலத்துக்கு முன்னமே கிரீடமுமல்லவா! இழவினால் அறுபட்டுப்போன இணைப்பு, தெய்வ சிம்மாசனத்துடன் உன்னைக்கொண்டு இணைத்துவிட்டதல்லவா! இனி மேலான பரலோகத்தில் உனக்குச் சகோதரன், சகோதரி, பிள்ளை உண்டல்லவா! பரலோக பாக்கியத்தைப் பெற்றுக்கொண்ட பக்தனின் இனசம்பந்தம் உனக்கு கிடைத்துவிட்டதல்லவா! இவ்வுலகத்தில் மேன்மையான பதவியிலும் உத்தியோகத்திலும் இருப்போர் உனக்கு நண்பராயிருப்பதைப் பற்றி பெருமை கொள்கிறாயே; பக்தரானோர் தங்கள் மரணத்தின் மூலமாய்க் கிருபையினின்றும் மகிமைக்கு உயர்த்தப்படும் மேன்மைக்கு எந்த பூலோக மேன்மையும் இணையாகுமோ? அவர்களின் பிரயாணமும் போராட்டமும் ஓய்ந்தது, நித்திய இளைப்பாறுதலுக்குச் சென்றுவிட்டனர்.

அடிக்கடி, நீ துக்கத்தால் வாட்டப்படுகையில், தற்காலத்தில் நிச்சய நிச்சயமாகக் கிடைக்கிற பாக்கியத்தை, வருங்காலத்தில் உன்னை மேற்கொள்ளக்கூடிய பாவம், அதன் பலனுன பாடு, துக்கம் முதலியவைகளோடு ஒப்பிட்டுப்பார்; நீ அநுபவித்துவரும் சந்தோஷங்களை உனக்கு நேரிடக்கூடியதாக இருக்கும் தீமைகளோடு ஒப்பிட்டுப்பார். சூனேமியாளைப் போல், பூக்குமுன் பொறிந்துபோன பூவை உன் மடியில் கிடத்தி நீ மறுகுகையில், "நீ சுகமாயிருக்கிருயா? உன் புருஷன் சுகமாயிருக்கிருனு? அந்தப் பிள்ளை சுகமாயிருக்கிறதா" என்ற கேள்வி உன்னிடம் கேட்கப்படும் (2 இரா. 4: 26). மரித்துப்போனவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து, தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிருர்கள் எனும் பரவச நிச்சயத்துடன், நீயும் சூனேமியாளைப்போல், "சுகந்தான்" என்று மகிழ்ச்சியுடன் சொல்லக்கூடுமா?

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது, அந்த வில் மேகத்தில் தோன்றும்."

14-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்

பின்னுல் வெளிப்படும் தெய்வ இரகசியங்கள்

"நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய் இனிமேல் அறிவாய்" —யோவான் 13: 7.

தெய்வ நடத்துதல்களில் பல இக்காலத்தில் நமக்கு விளங்கா இரகசியமாகவும் மனதைக் குழப்புவதாகவும் இருக்கும். "ஐயோ! என் பாத்திரம் இவ்வளவு கசப்பாயிருக்கவேண்டுமா? என் உபத்திரவம் இவ்வளவு கொடியதாயிருக்கவேண்டுமா? என் வழி இவ்வளவு கஷ்டமும் தவிப்புமாயிருக்கவேண்டுமா?" என்று நீ அடிக்கடி புலம்பக்கூடியதாயிருக்கிறது. ஆனுல் கிருபாநிதியானவர், உன் கடவுள், "உன் சந்தேகங்களையும் முறைபாடுகளையும் ஒழித்துவிடு; என்

நடத்துதல்களின் நேர்மையையும் நீதியையும் குற்றப்படுத்தாதே; நீ நித்தியத்திற்குள் பிரவேசிக்கையில் எல்லாம் உனக்கு விளங்கும்; பட்டப்பகலைப் போல் தெளிவாகும்” என்கிறார்.

“நான் செய்கிறது”—ஆம், எல்லாம் என் செய்கையே —நான் குறித்து வைத்த திட்டமே. உனக்கு இவைகள் மங்கலாயும் திமுலாட்டமாயுமே காணப்படும். மங்கல் பார்வையும் மாருட்டமுமுடைய உன் புறக் கண்களுக்கு இப்படித்தான் அவைகள் தோன்றும். கெட்டுப்போன திட்டங்களாகவும், பட்டுப்போன ஆமணக்கு செடிகளாகவும், முறிந்துபோன ஊன்று கோல்களாகவுமே உன் கண்கள் யாவற்றையும் உனக்குத் தோன்றச் செய்யும். ஆனால் எனக்கோ ஆரம்பத்திலேயே முடிவும் தெரியும். சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பாரோ? (ஆதி. 18: 25).

“இனிமேல் அறிவாய்.”—இனிமேல் அது வெளிப்படும்; நீ காத்திரு. பூலோகத் தகப்பனானவன் ஒரு பச்சைக் குழந்தையினிடம் கருகலும் குழப்பமுமான மொழிகளைப் பேசான்; குழந்தை வளர்ந்து சரியான பிராயத்திற்கு வருமட்டும் அவன் காத்திருந்து, அப்பால் யாவற்றையும் விவரமாகவே விளக்கிப்பேசுவான். பரம தந்தையும் இவ்விதமாகவே செய்கிறார். நீ இப்பொழுது பேதமையான குழந்தையே; அவரின் வழிகளையும் நடத்துதல்களையும் நன்கு அறியாமல் மழலைச் சொற்களாகவே பேசக்கூடியவன். நீ நித்தியமாகிய புருஷப் பிராயம் அடையும்போது, ஆழமும் மறைபொருளுமானதை அறிந்துகொள்வாய். இக்காலத்தில் பல தடவையும் நீ கிறிஸ்துபெருமானை சன்னல் கம்பிகளுக்குப் பின்னால் க்ஷணப்பொழுது மட்டும் காணுவாய்; அவர் மறைந்துவிடுவார். ஆனால் ஒரு நாள் வரும்; அன்று “அவர் இருக்கிற வண்ணமாகவே” (1 யோ. 3: 2) நீ அவரைத் தரிசிப்பாய். அன்று, தெய்வ நடத்துதலின் சுருளில் எழுதப்பட்டுள்ள மறைவும் மந்திரமுமான சகல அட்சரங்களையும்

சுலோகங்களையும் நீ படிக்கக்கூடும்; பாராயணம் செய்து விளக்கவும் கூடும்.

பாதியில் விடப்பட்டிருக்கும் சித்திரத்தையும் அரைகுறையான ஒழுங்குத் திட்டத்தையும் குறை கூறுவது மகா மூடத்தனமல்லவா! இம்மையில் தெய்வத் திட்டங்கள் முதிராப் பிண்டங்களாகவே இருக்கின்றன. "தெய்வ நடத்துதல் தொடரின் தனித்தனி வளையங்களே நம் கண்ணுக்கு காணப்படுவன. தெய்வக் குசவன் தன் கையிலுள்ள களிமண்ணை அவரின் இஷ்டம்போல் வனையட்டும்" என ஒரு பக்தன் சொன்னார். ஆனால் நீல இரத்தின சிங்காசனத்தினின்றும் பேரொளி புறப்பட்டு வரும்; "உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்போம்" (சங். 36: 9). இம்மையில் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும் அவசியம், மறுமையில் உனக்குப் பூரணமாக விளக்கப்படும்; அது அன்பின் சொரூபியான கடவுளால் பட்டப் பகலிலும் தெளிவாகும்.

ஒருவேளை நீ மறுமைக்குள் பிரவேசிக்கும் முன்னதாகவே இந்நாளின் வாக்குத்தத்தம் உனக்கு நிறைவேறிவிடலாம்; மறைவாயிருந்த தெய்வ இரகசியம் இம்மையிலேயே உனக்கு விளங்கிவிடலாம். இம்மையின் வாழ்க்கையில் பல தடவைகளிலும், புத்திகெட்டாத தெய்வ நடத்துதல்கள் நீ எதிர்பாராத பெரும் பேறான பாக்கியமாக மாறுகிறதல்லவா! பென்யமீனை சிறிது காலம் யாக்கோபு இழந்திராவிடில் அவன் யோசேப்பைக் கண்ணால் பார்த்திரான். அவ்விதமாகவே பக்தனே, விசுவாசியே, உன் உயிருக்குயிரான அன்பனை நீ இழக்காவிடில் உன் மெய்யான யோசேப்பை நீ ஒருபோதும் கண்டிராய். அவ்வாறு நீ இழக்கக் கொடுக்கையில், கோத்திரப் பிதாவான யாக்கோபைப்போலவே, "நான் பிள்ளையற்றுப் போனேனே, இதெல்லாம் எனக்கு விரோதமாக நேரிடுகிறது" (ஆதி. 42: 36) என்றே நீயும் புலம்புவாய். ஆனால், உனக்கு விரோதமாக நேரிடுகிறது என நீ எண்ணிக்கொள்ளும் சம்பவங்களின் மூலமாகவே;

நீ மரிக்குமுன், "உன் கண்கள் இராஜாவை மகிமை பொருந்தினவராகக் காணும்" (ஏசா. 33: 17), "உன்னைச் சிறுமைப்படுத்தவும் சோதிக்கவும்" (உபா. 8: 15) பல துன்பங்கள் அனுப்பப்படுகின்றன. இப்போது அவைகள் உனக்கு நன்மையாக இராதிருக்கலாம். ஆனால் பின்னான காலத்தில் அவை நன்மையாகவே இருக்குமாம்; இது தெய்வ வாக்கு.

"இன்ன இன்ன விதமாகச் செய்யும்" என்று நீ உன் ஆண்டவரை ஏவத் துணிவாயோ? நோயாளியானவன் வைத்தியனுக்குக் கட்டளை கொடுப்பதும் உண்டோ? வைத்தியன் கொடுக்கும் மருந்து அரோசிகமானது என அதை எறிந்துவிடுவாரும் உண்டோ? அல்ல; அதனால் ஆரோக்கியம் கிடைக்கும் என நிச்சயமாக நம்பி உட்கொள்ளுவர். கடவுள் ஏற்படுத்தும் எவ்வித ஏற்பாட்டுக்கும் விசுவாசத்துடன் அடங்கவேண்டும். அவர் தரும் பாத்திரத்தில் ஒரு துளியாவது அனுவசியமானது, அளவுக்கு மிஞ்சியது என எண்ணி அவரின் அன்பை அசட்டை செய்யாமலும், அவரின் உண்மையை அவமதியாமலும் இரு; அது அன்போடும் ஞானத்தோடும் அவர்தாமே கூட்டித்தரும் பானமாம். "இப்பொழுது நாம் குறைந்த அறிவுள்ளவர்கள்; அப்பொழுது நாம் அறியப்பட்டிருக்கின்றபடியே அறிந்துகொள்ளுவோம்" (1 கொரி. 13: 12).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும்போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

15-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

தெரிந்துகொள்ளப்படும் இடம்

"உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்துகொண்டேன்"
—ஏசா. 48: 10.

உபத்திரவத்தின் குகை: கடவுள் தம் அடியவரைச் சந்திக்கும் இடம் இதுவே. அவர் என்ன சொல்லு

கிறார்? "உபத்திரவத்தின் குகையில் உன்னைத் தெரிந்து கொண்டேன்"; உன்னை முற்றிலும் புடமிட்டுமுடியும் வரையும் உன்னை அதிலேயே வைத்திருப்பேன்; அவசியமானால், "அக்கினி இரதத்திலேயே" (2 இரா. 2: 11) உன்னை ஏற்றிப் பரலோகத்திற்குக் கொண்டு போவேன் என்கிறார். பட்சித்துப்போடும் அக்கினி உண்டு; இதுவோ சுத்திகரிக்கும் அக்கினி. புடமிடும் தெய்வ தட்டானானவர், உலையின் பக்கமாக இருந்து ஜ்வாலையைப் பெருக்கியோ, தணித்தோ, கனலை வேண்டிய அளவாக மூட்டிக்கொண்டுமிருக்கிறார்; புடத்தில் இருக்கும் அணுப்போன்ற தங்கமும் அவருக்கு விலையுயர்ந்ததாகும். செடியானது அக்கினி பற்றி எரிகையிலும் அவர் அதின் நடுவில் இருக்கிறார் (யாத். 3: 2): முட்செடியின் மத்தியில் ஜீவனுள்ள கடவுள்! அக்கினி சூளையின் நடுவில் ஜீவனுள்ள இரட்சகர் (தானி. 3: 25)!

தம்மை விசுவாசிக்கும் பக்தரை எக்காலத்திலும் அவர் நடத்திவரும் முறை இதுவே. முதலாவது, பரிட்சை; அப்புறம், பாக்கியம். முதலாவது, இக்கட்டு; அப்புறம், இரட்சிப்பு. எகிப்து—பத்து வாதைகள்—காரிருள்—செங்கற் சூளை—சிவந்த சமுத்திரம்—இவைகளுக்கு அப்பால் கானான். முதலாவது, எரிகிற அக்கினி சூளை; அப்புறம், தெய்வ புத்திரனுக்கு ஒப்பான ஒருவரின் தரிசனம். கர்மேல் பர்வதத்தில் ஜெபத்தில் தரித்துநிற்கும் எலியாவைப் பார்; முதலாவது கிடைத்த உத்தரவு அக்கினி; அப்புறம் வந்த உத்தரவு மழை. முதலாவது, அக்கினி ஜ்வாலைபோன்ற பரிட்சை; அதற்கப்பால், அமைதியாய் "புல்லறுப்புண்ட வெளியின்மேல் பெய்யும் மழையைப்போலவும், பூமியை நனைக்கும் தூறலைப்போலவும் இறங்கிவரும்" (சங். 72: 6) தெய்வ ஆவியின் வல்லமை.

பக்தனே, நான் பரிட்சைகளால் பரிசுத்தம் அடைகிறேனா என்றே நீ உன்னைக் கேட்கவேண்டும். முன்னிலும் அதிகமாக, பரிசுத்தமும், தூய்மையும், சன்

மார்க்கமும், சாந்தமும், தயவும், பரலோக சிந்தையும், கிறிஸ்து இரட்சகரின் சாயலும் உன்னில் உண்டாகிறதா? கடவுளை அக்கினி ஜ்வாலைகளில் மகிமைப் படுத்துவாயாக. பொறுமை எனும் நற்குணம் தெய்வ தூதர்களில் இருப்பதில்லை. அது பூலோக வாழ்க்கையிலேயே மலருவதாகும்; பரலோகத்தின் எந்தத் தோட்டங்களிலும் பொறுமை மலரைக் காணமுடியாது. உபத்திரவத்திலேயே அது வெளிப்படும்; அது மலர்ந்து செழிப்பதற்கு, காற்றும், கன்மழையும், புசலும் அவசியம். நீசப் பாவியாகிய நீ உன் பொறுமையாலும், முறுமுறுப்பற்ற பணிவினாலும் கடவுளை மகிமைப்படுத்துவதுபோல், உன்னத மகிமையில் வாழும் தெய்வ தூதர்களும் அவரை மகிமைப் படுத்த இயலாதவர்கள்.

அவர் உன்னைத் தமது உள்ளறைகளுக்குள் அழைத்துச் சென்று, தம் உண்மை எனும் உடன்படிக்கையை உன்னுடன் ஏற்படுத்துகிறார். உன்னில் படிந்துள்ள களிம்பை நீக்குவதும், புடமிடப்பட்டபின் அவரின் தெய்வ சாயல் உன்னில் உண்டாவதும், நீ மகிமைக்குப் பாத்திரமாவதுமே அவரின் தெய்வ திட்டம். மிக உயர்ந்த பணிக்கு அழைக்கப்படுவோர் மிகவும் புடமிடப்படுவார்கள். ஒரு பக்தன் சொல்லுவதைக் கேள்: "அவரின் பிள்ளைகளுக்குக் கஷ்ட காலங்களே களிப்பின் காலங்கள்; சிலுவையைச் சுமக்கும்போது தான், பரம பிதாவுடன் அன்னியோன்னிய ஐக்கியமும், பரிசுத்தமும், தாராளமுமான அளவளாவுதலும் பரம முசிப்பாறுதலும் அவர்கள் பெற்று அநுபவிக்கின்றனர்."

"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றி யெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்......சந்தோஷப் படுங்கள்" (1 பே. 4: 12, 13).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

16-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

புலம்பலின் முடிவு

"உன் துக்க நாட்கள் முடிந்துபோம்" —எசாயா 60: 20.

விசுவாசியே, உனக்குத் துக்க நாட்கள் உண்டு. நீ தங்குகிற பூமி "அழுகையின் பள்ளத்தாக்கு" (சங். 84: 6). ஆதாம் பரதீசைவிட்டு அழுதுகொண்டு சென்றான்; நீ பரதீசுக்கு நேராக அழுதுகொண்டு செல்கிறாய். ஆனால், அழுது செல்லும் பிரயாணியே, உன் கண்ணீருக்கு முடிவு உண்டு. உன் மனோ வேதனையின் பெருமூச்சும், உன் வாழ்க்கையை இருளாக்கும் மேகங்களும் இன்னும் சொற்பக் காலம் மட்டுமே; நித்திய சூரியன் உன்மேல் உதிப்பார்; அவரின் ஒளிக் கிரணங்கள் இனி எப்போதாவது மறைவதில்லை. இது வரையும் நெடுங்காலமாக நீ அழுகையின் பள்ளத் தாக்கிலேயே நடந்துசென்றாய்; அழுகை, ஓயாத அழுகையே இதுவரையும்; ஆனால் சீக்கிரம் புதிய எருசலேமின் கோபுரங்களிலிருந்து இன்ப மணிகளின் இங்கித நாதம் உன் செவிகளில் கேட்கும்—"உன் எஜமானின் சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத். 25: 21) என்றே இந்த இன்ப மணிகள் தொனிக்கும். "கர்த்தராகிய கடவுள் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்துப்போடுவார்" (எசா. 25: 8).

உன் துக்க நாட்கள்: இந்த துக்க நாட்கள் உன் ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்டவை. அவைகளின் காலவரையும் இலக்கமும் அவரால் குறிக்கப்பட்டதே; இது உனக்கு ஆறுதல் அளிப்பதாக. "பாடுபடுகிறதற்கு உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது" என்று அப்போஸ்தலன் எழுதியிருக்கிறார் (பிலி. 1: 29). ஆம்; நீ உடன்படிக்கையின் பிள்ளையானால், உன் துக்க நாட்களால் உனக்கு விசேஷித்த சலாக்கியமும், நிறைந்த ஆசீர்வாதமும் கிடைக்கும். துக்க நாட்க

ளானவை அவிசுவாசிகளுக்கு, நித்திய வேதனையின் முன் அநுபவமும், விசுவாசிகளுக்கு நித்திய மகிமையின் அச்சாரமும் முன் ருசியுமாம். துன்பமானது, அவிசுவாசிகளுக்கு வானவில்லே இல்லாத கார்மேகங்களாம்; விசுவாசிகளுக்கு, சுவிசேஷ வாக்குத்தத்தம் சுவிசேஷ நம்பிக்கை எனும் பிரகாசமான வானவில்லுடன் காணப்படும் ஒளியுள்ள மேகங்களாம்.

வாசிப்போனே, இப்போது துக்கத்தில் அழுந்தியிருக்கும் ஏராளமான மனுமக்களில் நீயும் ஒருவனல்லவா? திடன்கொள்; நோவு நோய் இளைப்பு களைப்பு எனும் முடிதலும் விடிதலும் இல்லாத இந்த நெடு இரவு சீக்கிரம் ஒழியும். அப்போது உன் ஆன்மாவின் பலகணி வழியாய்ப் பார்க்கிறவைகள் இருண்டிருப்பதில்லை (பிர. 12: 3); ஆன்மா இருள் மூடியிருப்பதுமில்லை. சீக்கிரம் உனக்குப் பூரண விடுதலை கிடைக்கும்; உன்னை வருத்துபவைகள் யாவும் ஒழியும்; இம்மையின் நஷ்டங்களும் பாடுகளும் நித்திய ஆதாயமாக மாறும். இரவில் கசியும் உன் கண்ணீர்த் துளிகள் யாவும், நித்திய பகலின் அருணோதயத்தில் முத்துக்களாக ஜொலிக்கும். உன் எஜமானுகிய கர்த்தர் உன்னிடம் வரும் அவரின் காலடிச் சத்தம் உன் ஆன்மாவில் தொனிக்கும்; "உன் துக்க நாட்கள் முடிந்துபோம்" என்று அவருக்கு முன்னுகக் கூறப்படும். உன் இரட்டை நீ களைந்துபோட்டு மகிழ்ச்சியின் வஸ்திரத்தை உடுத்திக்கொள்வாய் (சங். 30: 11); உன் புலம்பல் ஆனந்தக் களிப்பாக மாறும் (எரே. 31: 13).

அந்நிமிஷம் வருமட்டும், உன் துக்க நாட்கள் முடிவேயில்லாத காலம்போல் தோன்றும்: ஆனல் தங்க வாசலை நீ தாண்டியவுடனே, உன் கண்ணீர் நீங்கிப்போம்; கண்ணீரின் ஊற்றுத்தானும் வறண்டுபோம்; உன் துக்க காலம் நாள் கணக்கானது; உன் நித்திய மகிழ்ச்சியோ யுகயுகமானது. ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிருய்? நீ ஏன் தியங்குகிருய்? கடவுளை நோக்கிக் காத்திரு (சங். 43: 5). உன் கண்ணீரைத் துடைத்துப் போட்டு வான ஜோதியாய் விளங்கும் வான வில்லைப்

யார்; இந்த இராகத்தையும் பாடு; உன் கண்ணீரை நீக்கிப்போடும் கடவுள் தாமே உன் வாயில் கொடுக்கும் புதுப் பாட்டாம் அது; "இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின" (தரி. 21: 4).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

17-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

நிலையான நண்பர்

"நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை"
—எபிரேயர் 13: 5.

எந்த பூலோக நண்பனும் இவ்வாறு சொல்லக் கூடாதவன். பூலோக அன்பின் எந்த அளவான பாசமும் உறவும் முறிந்துபோகலாம், முறிந்தேபோகிறது. காலத்தால் அன்பு மாறும், தூரத்தால் அன்பு பிரியும், மரணத்தால் அன்பு ஒழியும். முன்னே உன்னை உயிருக்குயிராய் நேசித்தோர் எங்கே? ஐயோ, மரித்துப்போயினர்; சுவரில் மாட்டப்பட்டுப் புன்முறுவலுடன் தோன்றும் அவர்களின் முகப்படமே இனி உனக்கு இருப்பது; அதை மாத்திரம் பார்த்து ஏமாறுகிறாய். ஆனால் இங்கே உனக்கு ஒரு நண்பர் நிற்கிறார்; அவரின் அன்பு தளர்வதில்லை, மாறுவதில்லை, ஒழிவதில்லை. துக்கத்தில் அழுந்தினோனே, பூலோக சந்தோஷங்கள் ஒழிந்ததால் சஞ்சலப்பட்டுப் புலம்பிக் கொண்டிருப்போனே, உன் ஆண்டவர் உனக்கு அனுப்பும் செய்தியைக் கேள்: நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. உன் ஆமணக்குச் செடி பட்டுப்போயிற்று, மெய்தான்; ஆனால் அதை உண்டாக்கினவர் இன்னமும் இருக்கிறார். அவரின் நடத்துதலுக்கு உன்னை ஒப்புவித்துவிடு. உனக்கு சந்தோஷத்தை விளைவிக்க அவர் கூடியவர்

என்று நீ அறிந்துகொள்ள அவர் விரும்புகிறார். உன் மௌனத்திலும் உன் சோகப் பெருக்கத்திலும், "யோசேப்பும் இல்லை, சிமியோனும் இல்லை" (ஆதி. 42: 36) என நீ ஒப்பாரி பாடிக்கொண்டிருக்கையில், "தனிமையானவர்களுக்கு வீடு வாசல் ஏற்படுத்தி" (சங். 68: 6), "குமாரருக்கும் குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும் கீர்த்தியையும் பார்க்கிலும் உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுக்கிற" (ஏசா. 56: 5) கடவுளை நினை. நீ தனிமையாயிருக்கிறாயோ? இல்லவே இல்லை. உன்னை முற்றும் மறந்து உன் இயேசுபெருமானை நோக்கு. உன் ஆன்மாவின் சூரியனான அவர் எப்போதும் உன்னோடிருக்கையில், உனக்கு இரவு ஏன்? உனக்கு இரவு ஏது? அதிகாலையில், உதய சூரியனின் முதல் கிரணம் உன்மேல் விழுகையில், அவர் உன்னிடம் வருகிறார். இரவின் அந்தகாரம் உன்னை மூடுகையில், அவர் உன்னோடு இருக்கிறார்; "அவருக்கு இருளும் வெளிச்சமும் சரி" (சங். 139: 12). இரவின் அமைதியில், நீ தூங்காமல் விழித்திருக்கையில், நீ இழக்கக் கொடுத்தவர்களைப் பற்றிய எண்ணம் சுவரில் விழும் நிழல்போல் உன் மனதில் வந்துகொண்டிருக்கையில், தூங்காமலும் உறங்காமலும் இஸ்ரவேலரைக் காக்கிறவர் (சங். 121:4) உன் படுக்கையில் உன்னை அணைத்துக்கொண்டு, "பயப்படாதே, நான் உன்னோடு இருக்கிறேன்" என்று உன் செவிக்குள் அமர்ந்த சத்தமாய்ச் சொல்லுகிறார்.

ஒருவேளை, பவுல் அப்போஸ்தலனைப்போல் நீயும், "எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்" என்று புலம்பலாம்; ஆயினும் உன் மகா கொடிய துக்கத்திலும் அவரைப்போலவே, "கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னைப் பலப்படுத்தினார்" என்று நீயும் சொல்லக்கூடும் (2 தீமோ. 4: 16, 17). அவருடைய தயவு நீடிய வாழ்வு (சங். 30: 5). பூலோக வாழ்க்கையில் உனக்கு நேரிடும் ஒவ்வொரு நஷ்டத்திற்கும் அவரின் அன்பின் பிரசன்னம் ஈடு செய்வதானது. அவரின் சிநேகத்தையும் அன்பையும் நீ உணராவிடில்,

மகா அற்பமான துன்பமும் உன்னை நசுக்கிப்போடும். உன் துன்பத்தில் (நீ இழந்துவிட்ட உன் அன்பரின் ஸ்தானத்தில்) அவர் உன்னுடன் இருந்து உன்னைத் தாங்கவும் தேற்றவும் செய்தால், மட்டுப்பட்டதும் மாறிப்போவதுமான உடைமைக்குப் பதிலாக மட்டற்றதும் மாறாததுமான செல்வமாக அவர் உனக்கு இருப்பார். வானத்தில் உண்டாகும் பல மேகங்களில் வானவில் இருப்பதில்லை. ஆனால் கிருபாநிதியான கடவுள் உனக்கு அனுப்பும் எந்த மேகத்திலும் வானவில் இல்லாதிருப்பதில்லை. ஒவ்வொரு துக்கத்திற்கும், அதற்கே உரியதும் அதற்கு ஏற்றதுமான ஆறுதல் உண்டு. "என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில் உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது" (சங். 94: 19). உன் சஞ்சலமானது நள்ளிரவின் அந்தகாரம்போல் இருண்டு, பூமிக்குரிய உன் சூரியன் ஒரே முடிவாய் அஸ்தமித்துவிட்டதாகத் தோன்றுகையில், உன் நொந்த உள்ளத்தில் நீதியின் சூரியனை கர்த்தர் உதிப்பதால், உன் அகவாழ்க்கையானது வெளிச்சத்தால் நிறைந்திருக்கும். பூலோக வாழ்க்கையின் நீரூற்றானது, சுரக்கும்போதே நச்சு நீராய் இருந்தாலும், நீ தளராமலும் சோராமலும், "என் ஊற்றுகளெல்லாம் உம்மில் இருக்கிறது" (சங். 87: 7) என்று சொல்லி ஆடிப்பாடக் கூடுமாகில், அவருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். "கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன்" (புலம். 3: 24).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

18-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

பிரியமற்ற கண்டனம்

"அவர் மனப்பூர்வமாய் மனுப்புத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை" —புலம்பல் 3: 33.

உன் புத்திக்கு விளங்காத துர்ச் சம்பவங்களால் நீ சஞ்சலத்தில் அமிழ்ந்திருக்கும் காலங்களில், "இதெல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது" (ஆதி. 42: 36) என்று நீ முறுமுறுக்கவும் புலம்பவும் ஆரம்பிக்கிறாயல்லவா? "சோகக் கடலில் என்னை ஆழ்த்திப்போட்ட இந்த சம்பவம் நேரிடாதிருந்திருக்கக் கூடாதா? என் உள்ளத்தையும் என் இல்லத்தையும் துக்கத்தால் இருளாக்கிவிட்ட இந்த மேகத்தை நீர் ஏன் வரவிட்டீர்? என்மேல் விழுந்த துன்பமும் துர்ச் சம்பவங்களும் இவ்வளவு கொடிதாக இருந்ததேன்? கடவுள் இரக்கம் செய்ய மறந்தாரோ" (சங். 77: 9) என்றெல்லாம் நீ ஏங்கிப் புலம்புகிறாய்.

புலம்பாதே, தவிக்காதே, இந்தக் கொடிய துன்பங்கள் யாவும் மறைவான தெய்வ இரக்கச் செயல்கள்; "அவர் மனப்பூர்வமாய் மனுப்புத்திரரைச் சஞ்சலப்படுத்துகிறதில்லை." தெய்வச் செயல்கள் காரணமற்றவையல்ல, நீதி நியாயமற்றவையுமல்ல. அவர் குறித்துள்ள ஒவ்வொன்றிலும் சொல்லுதற்கரிய உருக்கமான பாசமே அடங்கியிருக்கும். மக்களின் அன்பற்ற செய்கை உன் மனதைப் புண்படுத்தும்; நீ நம்பியிருந்த உன் பிராண நண்பர் உனக்குத் துரோகம் செய்யக்கூடும்: உன் சொந்த சகோதரன் யாதொரு காரணமுமின்றிக் கடுமொழியும் வசைச் சொல்லுமே பொழியலாம். ஆனால் கர்த்தர், "மகா தயையும் சத்தியமுமுள்ள கடவுள்" (யாத். 34: 6). அவசியமற்ற சோக வேதனையை அவர் கொடார். அவர் யோசேப்பைப்போல் கடின

மாய்ப் பேசுவதாகத் (ஆதி. 42: 7) தோன்றினும், அதற்கு அடியில் அன்பும் பாசமும் உண்டு. அவரின் கடின மொழிகள் வெளிக்குத்தான்; கடினமாகத் தொனிக்கும் மொழிகளால் மட்டும் உனக்கு சில அரிய அபூர்வ போதனைகளைக் கொடுக்கக்கூடும் என்பது அவரின் மர்மம்.

ஆ! இதுமட்டும் நிச்சயம்! அவர் செய்யும் ஒவ்வொரு செய்கைக்கும் ஆழ்ந்த அவசியமும் காரணமும் உண்டு. உனக்கு நேரிட்ட துக்க சம்பவங்களின் குறிப்புப்பதிவுகளில், ஒவ்வொருபதிவுக்கும் எதிராக, "அது அவசியமாயிருந்தது" என்று பொன் எழுத்துக்களில் குறித்துக்கொள். உன் வாழ்க்கையில் அனுவசியமாக இருந்த ஒரு கொடியை அவர் நறுக்கிப்போட்டார். அமிழ இருந்த உன் கப்பலில் நீ கட்டிவைத்திருந்த அரிசிச் சாக்குகளை அவர் கடலுக்குள் எறிந்து போட்டதால், பாரம் குறைந்து கப்பலும் அமிழாமல் தப்பிக்கொண்டது. புலம்பித் தவிப்போனே, அவர் உன்னையே சங்கரித்திருக்கக்கூடும்; நீ கனி கொடாமலும் நிலத்தைக் கெடுத்துக்கொண்டும் இருந்தாயே. உன் கப்பலானது, மாலுமியின்றி, கப்பலோட்டியின்றி, நாலு திக்கிலும் அலைந்து பாறைகளில் மோதி சுக்கு சுக்காக நொறுங்கிப்போகும்படி அவர் விட்டிருக்கலாம். விக்கிரகங்களோடு இணைந்திருக்கிற உன்னை அவர் போகவிட்டிருக்கலாம் (ஓசி. 4: 17); நீ வண்டலோடு வண்டலாகப் பாத்திரத்தில் உறைந்து கிடக்கும்படி உன்னை விட்டிருக்கலாம்; அவ்வாறு விடப்பட்டிருந்தால் உன் நித்திய பாக்கியத்தை நீ இழந்தேபோயிருப்பாய். ஆகையால், உன் நறுமணமுள்ள அழகிய மலர்களை அவர் வாடிவிடச் செய்ததும், உன் வழிகளை முள்ளுகளால் அடைத்துப்போட்டதும் அவரின் பாசமும் வரம்பற்ற அன்புமே. "இப்பக்கத்திலும் அப்பக்கத்திலும் இந்த முள்வேலிகள் வைக்கப்பட்டிராவிடில் மோட்ச பாதையில் நேராகச் செல்வது அசாத்தியமாகும்" என்று ரிச்சர்டு பாக்ஸ்ற்றர் (Richard Baxter) பக்தன் சொன்னார்.

இந்தத் துன்பங்கள் நேரிடாதிருந்திருக்கலாமே என்றும், இவ்வளவு கொடிதான சிட்சை என்னத்திற்கு என்றும் நீ முறுமுறுப்பது, உன் குருட்டாட்டத்தாலும் அவநம்பிக்கையாலுமே. ஆனால் ஒருநாள் சீக்கிரமாக வரும்; அப்போது தெய்வச் செய்கை ஒவ்வொன்றும் நியாயமும் நன்மையுமாகவே இருந்ததென்று விளங்கி விடும்; உனக்கு நேரிட்ட ஒவ்வொரு துக்கமும் துன்பமும் உன் ஆன்ம வாழ்க்கையில் சொல்லொண்ணு அருமையும் விசேஷமுமான அநுபவமாக இருந்ததென்று நீயே அப்போது ஒப்புக்கொள்வாய். ஆண்டவரின் பிள்ளையே, உன்னிடம் பறந்துவந்த சங்கார ஆதனின் ஒரு கையில் பரதிசின் தோட்டத்திலிருந்து நறுக்கப்பட்ட ஒரு ஒலிவ இலை—இது அன்பின் சின்னம்; மறு கையில், அன்பும் கிருபாநிதியுமான உன் ஆண்டவரால் சேர்க்கப்பட்ட பானம் நிறைந்த பாத்திரம்; அதில் அளவுக்கு மிஞ்சிய ஒரு துளி துக்கமும் இருப்பதில்லை. உனக்குப் பிணையாக மரித்த உன் இரட்சகர், கோபாக்கினையின் பாத்திரத்தை ஒரு துளியும் விட்டுவையாமல் அருந்தினார் என்பதை நினைத்துக்கொள். அதை அருந்தும்படி உன் கையில் வாங்கிக்கொண்டு, அவருடைய பலத்த ஆதரவையும் ஆறுதலையும் பெற்றுக்கொள். உன்னைவிட அநேக அகோர பாடுகள் அநுபவித்தவர் அவர். மகா கொடிய பயங்கரமான வேளையில்—மரணத்துக்கேதுவான துக்கத்தால் அவர் திகிலடைந்தபோதும் வியாகுலப்பட்ட போதும்—"பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணுதிருப்பேனு?" என்றார் (யோ. 18: 11).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

19-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

மரணத்தின் ஒழிவு

"மரித்தேன்; ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமேன்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" —தரிசனம் 1: 18.

தெய்வ சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் இரட்சா பெருமான் இவ்வாறு உரைக்கிறார். "நான் உயிரோடிருக்கிறேன்" (அல்லது, நான் உயிரோடிருக்கிறவர்). மற்றோர் யாவரும் கடந்துபோய்விட்டனர்; நானோ என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறேன், என்றென்றைக்கும் அன்பாக இருக்கிறேன். இப்போது நான் உன்னுடைய இரட்சகர், உனக்கே சொந்தமான இரட்சகர். "உன் உயிராகிய கிறிஸ்து நான்." சூறாவளிக் காற்றால் அடிபட்டு விழுந்துபோன உன் அருமையான களிமண் குடிசையைக் குனிந்து நின்று பார்த்து மறுகுகிறாயோ? சூறாவளியை அதின் திசையினின்று நானே எழுப்பினேன்; உன்னைக் கலங்கடித்த ஆபத்தை நானே நியமித்தேன்; நானே சாவை வரப் பண்ணிக் கல்லறைக் குழியையும் வெட்டினேன். எதிர் பாராத நிகழ்ச்சி, நேர்வு, விதி எனும் சொற்கள் துக்கிக்கும் உன் உள்ளத்திற்குள் தலைகாட்டவே வேண்டாம். நான் சாவுக்கும் ஜீவனுக்கும் ஆண்டவராயிருக்கிறேன். சாவுக்கும் பாதாளத்திற்கும் உரிய திறவு கோல்கள் என் இடுப்பில் தொங்குகின்றன. கல்லறை வாசலைத் திறக்கக்கூடியவர் நான் ஒருவரே. "பயங்கர இராஜா" (யோபு 18: 14) எனப்படும் மரணத்தின் வலிமையைப் பலரும் எண்ணி அஞ்சுவர்; என் அநுமதியின்றி அவனுக்கு வலிமை என்பதே இல்லை.

துக்கித்துப் புலம்புவோனே, இது மட்டுமல்ல; "நான் மரித்தேன்." அந்த இருள் கிடங்குக்குள் நானும் ஒருகால் சென்றிருந்தேன். என் பிரசன்னத்தால் நான் அதைப் பரிசுத்தமாக்கிப் பிரதிஷ்டை செய்

தேன். நான் கல்லறை வாசியுமானேன். இப்போது மகிமை மயமாக உனக்குமுன் தோன்றும். இந்த சரீரம், இரவல் கல்லறைக்குள் அன்பரின் கையால் அடக்கம் செய்யப்பட்டது. உன் ஆண்டவர் தாமே தங்கியிருந்த இந்த மரணபள்ளத்தாக்கில் காலெடுத்து வைக்க நீ அஞ்சுகிருயோ? அவர் எதிர்த்து மடக்கிய "கடைசி சத்துரு"வைக் காண (1 கொரி. 15: 26) நீ நடுங்குகிருயோ? சாவு: இது முடிவில்லாத ஜீவனில் ஒரு விநாடி அளவான முறிவுமட்டுமே; என்ருலேயே இவ்வாருயிற்று.

நான் மரித்தவர்: நான் உயிரோடிருக்கிறவர். கிறிஸ்துவனே, கிறிஸ்துவளே! இரட்டிப்பான இவ் வுறுதி நிச்சயத்தைவிட நீ விரும்புவதுதான் யாதோ? பூர்வகாலங்களில், பாவ நிவர்த்தியின் மகா சிறந்த தினத்தில், இரத்தமானது தரையிலும் கிருபாசனத் தின்மேலும் தெளிக்கப்பட்டது; ஆகவே, இரத்த மானது அடியிலே தரையிலிருந்தும், அதின்மேல் வைக் கப்பட்டிருந்த கிருபாசனத்திலுமிருந்தும் எழும்பி மன்ருடிற்று. உன் மூத்த சகோதரனின் இரத்தமும் இவ் வாறே மன்ருடுகிறது. முன்னே, அது பூமியிலிருந்து மன்ருடியது; இப்போது பரலோகத்திலிருந்து மன்ருடுகிறது. மரிக்கும்படி தம்மை ஒப்புக்கொடுத்த அவரின் அன்பானது என்றும் உயிருள்ள அன்பு; நித்திய ஜீவியான அவரைப்போன்றே அது அழி வற்றது, மாருதது.

இயற்கையின் விதிகள் ஆளும் காலம் முழுவதி லும், சூரியன் உள்ளளவும், மேலே இருக்கும் வான வெளியில் வானவில் தோன்ருதிராது. அவ்வாறே நீதியின் சூரியனுகிய (மல்கியா 4: 2) கிறிஸ்து பெரு மான் இருக்கும் காலமெல்லாம், அவர் ஆளும் கால மெல்லாம்—அதாவது நித்திய நித்திய காலமாக—நித் திய உடன்படிக்கையின் வில்லும் அதால் கிடைக்கும் சகல பாக்கியங்களும் ஓய்வதுமில்லை, ஒழிவதுமில்லை. வருங்காலத்தின்மேல் வளைந்து நிற்கும் இந்த வான வில்லைப் பார்! அதின் ஒரு கோடியானது மேகங்கள்

படரும் இவ்வுலக வாழ்க்கையிலும், மறுகோடியானது, காரிருள் மூடும் மரண பள்ளத்தாக்கிலும் ஊன்றி நிற்கிறது. "நான் பொல்லாப்புக்குப் பயப்படேன்; ஏனெனில், என் இரட்சகராகிய கடவுளே, நீர் என்னோடிருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" (சங். 23: 4).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும்போது, அந்த வில் மேகத்தில் தோன்றும்."

20-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

யாவிலும் மேலான ஈவு

"தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்குத் அருளாதிருக்கிறது எப்படி?"

—ரோமர் 8: 32.

இவை ஆச்சரியத்தை எழுப்பும் வார்த்தைகள். கடவுள், அளவிடப்படாத கடவுள், தம்மை மனுஷக்களின் துன்ப துக்கங்களோடு ஒன்றுபடுத்தி உரைக்கும் திருவாக்கு! உன் முறுமுறுப்பை அடக்கும் எதிர் பேசப்படாத உறுதிமொழி! "நான் என் சொந்தக் குமாரனையும் உனக்குக் கொடாது வைத்துக்கொள்ளவில்லையே! என் ஈவுகள் யாவிலும் மேலான ஈவை, உனக்குத் தந்தேனே; நீ உனக்கு மகா அருமையும் மேலானதுமானதை மன உவப்போடு எனக்குத் தந்துவிடக்கூடாதோ? என் அன்பின் சொல்லொண்ணு உன்னத ஈவை உனக்கு அளித்தேனே; நீ சிறு விஷயங்களில் என்னை நம்பிக்கொள்ள மனமற்றுப் போவாயோ? நான் உனக்கு அளித்த மேலான ஈவானது, அதைவிடத் தாழ்வான ஈவுகளை நான் தாராளமாக உனக்கு வழங்குவேன் என்பதற்கு உறுதி நிச்சயமாகாதோ?"

"எல்லாவற்றையும்" தருவதாக வாக்குக் கொடுக்கிறார். இவைகள் யாவும் அவரின் கரத்தில் இருக்

கிறது. அவரின் அன்பும் ஞானமும் அந்தந்த சமயத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் அவசியமானதைத் தெரிந்தெடுத்து உனக்குக் கொடுக்கும்: பாடுகள், ஆறுதல்கள்; துக்கங்கள் கண்ணீர்ப் பெருக்குகள்; முகமலர்ச்சி மனக்களிப்பு. துக்கத்தில் அமுந்திருேனே, உன்னை இப்போது கண்ணீர் வடிக்கச் செய்யும் இந்தத் துக்கமும், அவர் உனக்கு அருளும் ஈவுகள் எல்லாவற்றிலும் ஒரு ஈவாம். அவரின் உண்மையை நம்பிப் பற்றிக்கொள். அவர் தம் அன்பின் சுதனைப் போலவே உன்னையும் எண்ணுகிறார்; அவர் தம் அன்பின் சுதனை காயப்பட அடியாரே, உன்னையும் காயப்பட அடியார்.

"அவர் அருளாதிருக்கிறது எப்படி?" சகல ஈவுகளிலும் மேலான ஈவை அவர் உனக்கு அருளியபின், அவசியமில்லாத ஒரே ஒரு துக்கத்தை உன்பேரில் வரவிடுவதும், உனக்கு வேண்டிய ஒரே ஒரு ஈவையாகிலும் கொடாது மறுப்பதும் உன்னத கடவுளுக்கு அசாத்தியமேயாகும். அவர் தமது ஏக சுதனை சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுத்தாரே, அவரின் அன்பு உனக்கு எப்படித் தோன்றுகிறது? அதே அளவற்ற மாறாமையுள்ள அன்பே இந்த நாழிகையிலும் இந்த நிமிஷத்திலும் நிலைத்து நிற்கிறது. தமது குமாரனாகிய இயேசுவைத் தந்த பரம பிதாவானவர் தாமே உன் பூலோகபாக்கியத்தை உன்னைவிட்டு எடுத்துப்போட்டால், நீ அதைச் சரியென்று ஏற்றுக்கொண்டு அடங்கியிரு. இரக்கமயமான அவரின் திருக்கரங்களை நீ அமர்ந்து தழுவிக்கொண்டு, பிள்ளைக்குரிய பற்றுேடும் நம்பிக்கையோடும், "என்னில் அன்புகூருகிற என் ஸ்வாமீ, உமது அன்பில் எதையும் செய்யும், அன்பை விலக்கி அடியேனில் கோபம் மட்டும் வைத்துவிடாதிரும்" என்று கெஞ்சு.

"எல்லாவற்றையும்" மனிதரின் சகல தேவைகளும் அவசியங்களும் ஒன்றுவிடாமல் அவருக்குத் தெரியும்; உன் கவலைகளையெல்லாம் அவர்பேரில் வைத்துவிடு;

உன் அவசியங்கள் யாவையும் அவர் தீர்க்கட்டும்; இதுவே அவர் உன்னை வேண்டுவது. அவர் தாமே உனக்கு விசேஷமாக அருளியிருக்கும் வாக்கைக் கேள். "நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும்பெருகுகிறவர்களாயும் இருக்கும்படியாக, கடவுள் உங்களிடத்தில் சகல கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்" (2 கொரி. 9:8). அவர் உனக்குக் கொடுக்கும் எதுவும், உனக்கு மறுக்கும் எதுவும் உனக்கு நன்மையாகவே இருக்கும். வரம்பற்ற அவரின் ஞானத்தால் அவர் ஏற்படுத்தும் எந்த நடத்துதலையும் உன் அற்பப் புத்தியால் ஏனென்று கேட்கத் துணியாதே. அணுப்போன்ற சந்தேகத்தாலும் அவரை அவமரியாதை செய்து அவரின் உள்ளத்திற்கு நோவு உண்டாக்காதே. சிறிய விஷயங்களிலும் பெரிய விஷயங்களிலும் அவர்பேரிலேயே சார்ந்திரு. தமது குமாரன் மூலமாகத் தமது அன்பை உனக்கு அவர் உறுதிப்படுத்தினபின், அவரின் கரத்திலிருந்து அவர் உனக்கு அனுப்பும் எதினாலும் உனக்குத் தீங்கு விளைவதில்லை. வேளாவேளைகளில், அவர்பேரில் கோபித்துக்கொள்ளவும் அவரின் நடத்துதல்களைத் தவறாக எண்ணவும் நீ ஏவப்படுவாயாகில், சிலுவையை நோக்கிப்பார்த்து உன் கோபத்தையும் தவறான எண்ணத்தையும் தவிர்த்துவிடு. இன்று உன் மேகத்தில் அழகாகத் தோன்றும் வில்லைப் பார். "கிறிஸ்து என்னில் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" (கலா. 2: 20). அப்போது நீ சொல்ல வேண்டியது என்ன?

நாதா, நீர் என்னை வாதித்தும்,
உம் அன்பே தோன்றுமாம்:
வாதிக்கும் உந்தன் கரமும்
வாதைக்குள்ளானதாம்.

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும்போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

21-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

நித்திரையும் விழிப்பும்

"இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் கடவுள் அவரோடேகூட கொண்டுவருவார்" —1 தெசலோனிக்கேயர் 4: 14.

மேற்காட்டிய வசனம், "இயேசுவுக்குள் நித்திரை செய்யக் கிடத்தப்பட்டவர்களை" என்றும் திருப்பப்பட்டிருக்கிறது. மறுதினம் அதிகாலையில் நம் நண்பரை மீண்டும் உவப்புடன் சந்திப்போம் என்ற நம்பிக்கையுடன், அவர்களை இரவில் சந்தோஷமாய்ப் "போய் வாருங்கள்" என்று சொல்லி அனுப்பிவைக்கிறோம். அதே விதமாக, இயேசுபெருமானும் தம் அடியவரைக் கல்லறைப் படுக்கையில் நித்திரைச்செய்யக் கிடத்துகிறார்; அழியாமையின் யுகம் உதயமாகையில் அவர்களை அவர் சந்திப்பதாக உறுதியும் நிச்சயமுமான நம்பிக்கை கொடுத்திருக்கிறார்.

கடவுளின் பிள்ளையே, கிறிஸ்துவுடன்கூட இருக்கும்படிப் பிரிந்துபோனவர்களுக்காகத் துக்கியாதே; அது அவர்களுக்கு "அதிக நன்மை" (பிலி. 1: 23). அவர்கள் தொலைந்துபோனார்கள் என எண்ணாதே; "தொலைந்துபோதல்" எனும் பதம் சாவு எனும் பதத்துடன் சேர்ந்ததாகும். புத்தமதத்தினர் "நிர்மூலமாதல்" என எண்ணும் கொள்கையோடு பல கிறிஸ்துவரும் சேர்ந்து, மரித்தோரை இல்லாமற்போனோராகவே எண்ணுகின்றனர். உயிரோடிருக்கிறவர்களை மரித்தோரிடத்தில் நீ தேடாதே (லூக். 24: 5). பூலோக வாழ்க்கையின் கடைசி மூச்சை விட்ட அட்சணமே, ஆன்மாவானது பரலோகத்தில் கீதம் பாட ஆரம்பித்தாயிற்று; மின்சார வேகமாகப் பாய்ந்து, பணிசெய்யும் சேராபீன் கணத்துடன் சேர்ந்துகொள்ளுகிறது. இனி, அது உன் உள்ளத்தில் அமர்ந்த மெல்லிய சத்தமாய்ப் பரலோகத்தின் இன்னிசையுடன் பேசுவதைக்

கேள்: "நீ என்னில் அன்பாயிருந்தால், நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்று சொன்னதைக் குறித்து சந்தோஷப்படுவாய்" (யோ. 14: 28).

அழியா ஆபரணமான ஆன்மாவை அடக்கிவைத்திருந்த ஆபரணப் பெட்டியான உடலானது, சிறிது காலம் கல்லறைக் குழியிலிருந்து மண்ணும் சாம்பலும் புழுதியுமாகிவிடுகிறது. ஆனால் இரவின் ஒரு அற்ப சாமம் மட்டுக்குத்தான் அது விடப்பட்டிருக்கும். கல்லறையில் விடப்பட்டிருக்கும் அந்தப் புழுதி இரட்சிப்பைப் பெற்றதால் பரிசுத்தமானது. இம்மானுவேலரின் இரத்தத்தால் சரீரமும் ஆன்மாவும் ஒருங்கே மீட்கப்பட்டது. கல்லறையில் நித்திரை செய்யும் சாம்பலான உடலை சம்மனசுக்கள் காத்து வருகின்றனர். இதோ, ஒருநாள் வருகின்றது; அப்பொழுது, "வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்" (மத். 24: 31). என்ன ஆச்சரியம்! மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் கடவுளுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷம் உண்டாகுமாகில் (லூக். 15: 10), கணக்கில் அடங்காத மரித்தோரின் திரள், தெய்வதூதரின் எக்காளம் தொனிக்கையில் உயிர்த்தெழும்பி கிரீடங்களையும் சிம்மாசனங்களையும் அடைந்துகொள்கையில், இந்தப் பரலோகத் தூதர் கணங்களுக்கு உண்டாகும் மகிழ்ச்சியை என்னென்று சொல்வது! எவ்வாறு அளவிடுவது!

அழுது புலம்பும் கிறிஸ்துவளே, கிறிஸ்துவனே, "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்" (யோவா. 11: 23). இந்தப் பாழ் வனாந்தர உலகத்தின் கோஷ்டத்திற்கும் கொடுமைக்கும் அவன் மீண்டும் வர விரும்பாதே. கோதுமைக் கதிரானது மழையிலும் காற்றிலும் கிடந்து அடிபடாமல், களஞ்சியமான நித்திய

வீட்டிற்குள் பத்திரமாய்ச் சேர்க்கப்பட்டாயிற்று; இதை நன்றியுடன் பாராட்டு. கண்ணீர் விட்டு மறுகி அழுது, அவனை மீண்டும் பெறவும், பாக்கிய லோகத்தின் மகிமையை விட்டுவிட்டு, பரலோக வாசிகளின் பாஷையையும் மறந்து, இவ்வுலகத்தின் இரண களத்திற்குள்ளும் இரத்தப் புழுதிக்குள்ளும் அவன் வந்துவிடும்படியும் நீ விரும்புவாயோ? வேண்டாம், வேண்டாம்; "தெய்வ மகிமையை அடைவோம் என்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டு" (ரோம. 5: 2). மரணம் சதா நித்திரையல்ல. "வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார்; தாமதம் பண்ணார்" (எபி. 10: 37). மரணத்தைப் பரிகரிக்கும் உன் ஆண்டவர் ஒரு மகிமையான இரகசியத்தை உன் செவிக்குத் தெரிவிக்கிறார்; யுகங்களாகத் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைக்கப்பட்டிருந்ததும், அவரால் மாத்திரம் வெளியிடப்படுவதுமான இரகசியம்: "மரித்த உன்னுடையவர்கள் எழுந்திருப்பார்கள்; பிரேதமான தம் சரீரத்தோடேயே எழுந்திருப்பார்கள்" (ஏசா. 26: 19). மரித்த சகல பக்தருக்கும் அந்நாளில் தொனிக்கும் யூபிலி எக்காள சத்தத்தை அவர் உனக்குத் தெரிவிக்கிறார்: "மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள்!" (ஏசா. 26: 19).

ஆ என்ன சந்தோஷம்! என்ன பரவச பாக்கியம்! என் இரட்சகராகிய கடவுளை என் கண்கள் காணும்! உன்னத மனிதராக அவர் உயர்த்தப்பட்டு அவரின் சர்வ மகிமையும் பொருந்தியவராக அவரைக் காண்பேன்! நான் நேசித்து இழந்துவிட்ட என் அன்பரும் அவருடன் வருவார்கள்! ஆ! அவர்கள் மகிமையடைந்தவர்களாய் வருவார்கள்! இனி என்றுமே நான் அவர்களை இழப்பதில்லை! "என் கடவுளாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்" (சக. 14: 5). ஒருவராகிலும் வராமற் போவதில்லை. இன்று மண்ணில் தங்கி மௌனமாயிருப்போருடன் அன்று நாம் கூடிக்கொண்டு, வெற்றி சிறந்த திருச்சபை பாடி முழக்கும் ஜெய கீதத்தை

நாம் அனைவரும் பாடி முழக்குவோம்: "மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற கடவுளுக்கு ஸ்தோத்திரம்!" (1 கொரி. 15: 55, 57).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

22-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

மறைவிலிருந்து தொனிக்கும் இன்னிசை

"அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்க் கடவுளிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" —ரோமர் 8: 28.

நீ அடிக்கடி இஸ்ரவேலரின் பரிசுத்தரை மட்டுப்படுத்துகிறாயல்லவா? (சங். 78: 41). சிலதே நன்மைக்கேதுவாக நடக்கிறது என்று பிதற்றுகிறாய்; உன் கடவுள் சொல்லுவதைக் கேள்: சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது. இன்ப துன்பங்கள், பாடுகள் நஷ்டங்கள், செழிப்பு தீய்வு, சுகம் சுகவீனம், செழிப்பான ஆமணக்குச் செடி செத்துப்போன ஆமணக்கு செடி, நிறை பாத்திரம் வெறும் பாத்திரம், நீடிய வியாதிப் படுக்கை இளமையில் சாவு—சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது!

ஆனால் அடிக்கடி நீ காண்பதென்ன, அறிவதென்ன? மேற்சொன்ன வாக்கை வியர்த்தமாகத் தோற்றுவிக்கும் சம்பவங்களே. நேரிடும்பல சம்பவங்களில் தெய்வ அன்பின் ஒரு துளி முதலாய் உனக்குக் காணப்படுவதில்லை. பிரயோஜனமான உயிர்கள் சாகின்றன, மலருமுன் மொட்டுகள் பறிக்கப்படுகின்றன, ஆன்ம வாழ்க்கையின் ஆதாரங்கள் வீழ்கின்றன. பெருநன்மைக்கான திட்டங்கள் ஒழிகின்றன. அப்போஸ்தலன் உபயோகிக்கும் பதம், "கண்டிருக்கிறோம்"

என்பதல்ல, “அறிந்திருக்கிறேம்” என்பதே. இருளிலே கடவுளை நம்பிப் பற்றிக்கொள்வது விசுவாச அறிவைச் சேர்ந்தது. அறிவில்லாதோரும் ஆராய்ச்சியற்றோரும், பலபல பாகங்களால் உண்டாக்கப்பட்ட ஒரு யந்திரத்தின் துணைச் சக்கரங்களையும் அவற்றின் இணைப்புகள் இயக்கங்களையும் அறிந்துகொள்ளார், அவற்றை விளக்கவும் அறியார்; ஆனால் அவற்றையெல்லாம் ஒருசேர இணைத்து ஒரு யந்திரமாக்கி வைத்த விஞ்ஞான சிற்பியின் அபூர்வ அறிவுத் திறனை நம்பிக்கொள்வர்; யந்திரத்தின் ஒவ்வொரு பாகமும் இணைந்து, ஒரு அரிய பெரிய தொழிலைச் செவ்வனே செய்து முடிக்கிறவை என்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்.

உன் புத்திக்குப் புலப்படாத தெய்வச் செயல் நேரிடும்போதெல்லாம், “இதுவும் சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது; அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர்; செயலில் மகத்துவமானவர்” (ஏசா. 28: 29) என்று சொல்லிப் பதிவு செய்துகொள். “நீ அமர்ந்திருந்து நானே கடவுள் என்று அறிந்துகொள்” (சங். 46: 10). “சத்திய ஆவியானவர் தாமே விளம்பரப்படுத்தும் சிறந்த வைத்தியர் இவர்; இவர் உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறவர் (சங். 103: 3); ஆனால் நீ செய்யவேண்டியது ஒன்றுண்டு. அவர் தரும் ஔஷதம் கசப்பாயினும் தித்திப்பாயினும், எதையும் வாங்கிக்கொள்ளவெண்டும்” என்று பக்தியில் முதிர்ந்த ஒரு அம்மையார் குறித்துவைத்தனர். உனக்கு நேரிடும் உபத்திரவம் ஒவ்வொன்றும் அவரின் செம்மையும் உண்மையுமான நடத்துதலே என்று அவர் விளங்கச் செய்வார்; உன் ஆன்மாவும் அவற்றால் மேல்நிலை அடையும். அவை ஒவ்வொன்றினுலும் அவர் மகிமைப்படுவார். அவர் உன்னிடம் என்ன சொல்லுகிறார்? “என் அன்பைச் சந்தேகியாதே; ஒரு நாளில் சகல இரகசியங்களும் தெளிவாகும்: மறைவான ஒவ்வொன்றும் வெளியாகும்; தற்சமயத்தில் உன்மேல் வந்திருக்கும் துக்கமும் உன் நன்மைக் கேதுவாக நடக்கிறவை

களில் ஒன்றேயென்று விளங்கும்; மேகங்களால் பொன்மயமான காந்தி மனுஷர் கண்ணுக்குத் தோன்றுவதில்லை; "ஆனாலும் சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும்" (சக. 14: 7).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும்போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

23-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

மாறாத நாமம்

"இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்"
—எபிரேயர் 13: 8.

இம்மையில் யாவும் மாறுகின்றது; ஒவ்வொரு மூச்சிலும் விநாடியிலும் உரு மாறுகிறது. உலக வாழ்க்கையில் புது சம்பவங்கள், புது நாட்டங்கள், புது எண்ணங்கள், புது உறவுகள்; இருள் ஒளி, அமளி அமைதி ஆகியவை ஒன்றையொன்று அடுத்து வந்து கொண்டேயிருக்கும். நீரின்மேல் ஒளியின் சகல வர்ணங்களுடன் தோன்றும் குமிழிபோன்றதே வாழ்க்கையின் மகிழ்ச்சி; கை பட்டவுடனே குமிழி இல்லாதுபோம். ஆலயத்தில் நீ பார்த்துவந்தவர்கள் மறைந்தனர்; வீட்டில் சாவும் வெறுங் கட்டிலும்; நாள்தோறும் செவிகளில் அருமையாய்க் கேட்ட இன்மொழிகள் ஓய்ந்தன. அடிக்கடி, ஆதாரம் உறுதியாயிருக்கிறதென எண்ணி நீ பலமாகக் காலூன்றுகையில், சாரக் கால்கள் முறிந்துவிட்டன; ஜீவகாலமெல்லாம் நீ உறுதியாய்ப் பற்றியிருந்த உன் நம்பிக்கை ஒழிந்தது; நீ கோஷ்டத்திலும் கொந்தளிப்பிலும் தனித்துவிடப்பட்டாய்.

இவ்வித பல பலத்த மாறுதல்களின் மத்தியில் மாறுதல் ஒன்றுமில்லையா? நில்லா நிழல்களின் மத்தியில் நிலையும் நித்தியமுமானது ஒன்றுமில்லையா? இருக்கவே இருக்கிறது; என்றும் மாறாத இயேசு பெருமான்! அவர் உலகத்தை விட்டு எடுபட்டு ஏறக்குறைய ஈராயிரம் வருஷங்கள் ஆகின்றன. உலகம் மாறிக்கொண்டே இருக்கிறது; அவர் இந்நிமிஷமட்டும் மாறவேயில்லை. பூலோகத்தில் இருக்கையில் அவர் நடத்திய அதிசய அன்பின் வாழ்க்கையை ஒரு நிகழ்ச்சியும் தவறாமல் நீ படித்திருக்கிறாய். மனந்திரும்புதலின் கண்ணீர் வெள்ளத்துடன் திருப்பாதத்தில் விழுந்துகிடந்து மன்னிப்பைப் பெற்றுச் சென்ற பாவிகள், கண்ணீர் சிந்திக் கதறி அழுது பின்னாலே சென்று, ஆறுதலும் அமைதியும் ஆற்றலும் பெற்றுத் திரும்பிய துக்க மக்கள்; கண் எரிந்து கால் தள்ளாடி உடல் ஒட்டி உருக் குலைந்துபோயிருந்த நோயாளிகள்; அவரின் அதிகார மொழி புறப்பட்டதுடன் நோவெங்கே? நோயெங்கே? பறந்துவிட்டதே. அதே அந்த இயேசு பெருமானே இன்று பரலோகத்தின் மகத்துவ சிங்காசனத்தில் வீற்றிருப்பவர்!

பரலோகத்திற்கு எழுந்தருளியபின் அவர் அடைந்திருக்கும் தெய்வ மகிமையால், அவரின் உள்ளம் மாறவில்லை, அவரின் அன்பு குறையவில்லை. அவர் பெருங் கன்மலையானவர்; எத்தனை அலைகளும் எவ்வளவு சீறிமோதியும், இந்தக் கன்மலை அசைவதில்லை. மோதி மோதி வந்து இறந்து திரும்பும் அலைகள் உன்னைத் தாக்கலாம்; அவ்வளவுதான். நிலை பெயராமல் நிற்கும் இந்த நித்திய ஒருவனின்மேல் உன் பற்றும் மதிப்பும் ஊன்றாவிடில் அலைகளின் சூழ்ப் பயனுமாகும்!

பூலோக வாழ்க்கையின் சகலப் பற்றினின்றும் பாசத்தினின்றும் உன்னைப் பெயர்த்து, ஒரே உறுதியான ஒருத்தனை நீ பற்றிக்கொள்ளும்படி பல முறையும் பலத்த புசல்களை உன் ஆண்டவர் எழுப்புகிறார். இவை தண்ணீர் வற்றுவன (எரே. 31, 18) உன்

கடவுளைப் பருகும்படி, உன் சிற்றேடையின் நீரை அவர் பன்முறையும் நச்சாக்கிக் கெடுத்துப்போடுவ துண்டு. துதிக்கப்படத்தக்க இரட்சகரான அவரை மட்டும் நீ அடைந்துகொள்வாயாகில், வேறெதையும் நீ இழந்துவிடலாம்; நீ இழந்துவிடும் யாவையும்விட நீ அடைந்துகொள்வது அளவுக்கு அடங்காதது! அவ ரின் அன்பைவிட்டு எதுவும் உன்னைப் பிரிப்பதில்லை (ரோம. 8: 36); இந்த நிச்சயத்தால் நீ எவ்வளவும் மேன்மை பாராட்டலாம். பூலோகத்தில் உன் உத்த மோத்தம அன்பர்களைக் கவனி. ஒரு பார்வையால் அவர்களின் அன்பு வாடக்கூடும்; தெரியாமல் நீ பிதற் றிய ஒரு வார்த்தையால் அவர்கள் உன்னை வெறுக்கக் கூடும்; சாவுக்குப்பின் அவர்கள் உன்னைவிட்டுப் பிரிந்தே போவார்கள்; நீ அவர்களைப் பிடித்து இருத் திக்கொள்வாயோ? "கர்த்தர் ஜீவனுள்ளவர்; என் கன்மலை யானவர் துதிக்கப்படுவோராக; என் இரட்சிப்பின் கடவுள் உயர்ந்திருப்பாராக" (சங். 18: 46). அவர் "நேற்று" இருந்தவர்; அநாதி காலங்களாக யுக யுகங்களாக இருந்தவர்; அவர் இன்றும் இருக்கிறவர்; இன்றும் என்றும் சதாகாலமும் இருப்பவர். அவரின் வாக்குக ளாகிய வானவில்லை நீ ஓயாமல் பார்க்கலாம்; "கடவுளின் வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமேன் என்றும் இருக்கிறது" (2 கொரி. 1: 20). தமது மகிமை யின் சிங்காசனத்தில் வீற்றிருந்து உன்னுடன் பேசு கிறார். அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி பார்வைக்கு மரகதம்போல் தோன்றும் வானவில் வட்டமிடுகிறது (தரி. 4: 3). (மரகதமானது நித்திய நிலைவரத்தின் அடையாளம்). அவர் உரைப்பதைக் கேள்: "பயப் படாதே, மரித்தேன்; ஆனாலும் இதோ சதாகாலங் களிலும் உயிரோடிருக்கிறேன்" (தரி. 1: 18). "நான் பிழைக்கிறபடியால் நீயும் பிழைப்பாய்" (யோ. 14: 19).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

24-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

அன்றாடக பலம்

"உன் நாட்களுக்குத் தக்கபடி உன் பலம் இருக்கும்"
—உபாகமம் 33: 25.

விசுவாசியே, இதை நீ அநுபவத்தில் அறிந்திருக்கிறாயல்லவா? உன் துக்க வழியின் வேலிகளில் பிசின் தைலம் வடிக்கும் செடிகள் வளருகின்றன. உன்மேல் இருண்டு கவிந்துகொண்டிருந்த மேகங்களினின்றும் பிரளய வெள்ளம் உடைந்து நீ அதில் முழுகித் தத்தளிக்கையில், நீ கனவிலும் எதிர்பார்த்திராத ஆதரவும் ஆறுதலும் இரக்க வள்ளலான உன் கடவுளிடமிருந்து உனக்குக் கிடைத்ததே. ஆதலால், உன் அறிவுக்குத் தோன்றாமல் உனக்கு மறைவாயிருக்கும் வருங்காலத்தைக்குறித்து அணுவும் கலங்காதே; "உன் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடு" (1 பேது. 5:7). "எவ்விதக் கரடுமுரடான பாதைக்கும் ஏற்ற பாதரட்சைகள் நமக்கிருக்கிறதே" என ஓர் பக்தன் கூறியிருக்கிறார். "சகல கிருபையுமுள்ள கடவுள்" (1 பேது. 5: 10) எனப்படும் அவர் தம் வாக்கைத் தவறாது நிறைவேற்றுபவர். தம் மக்களின் எந்த அவசியத்திற்கும் வேளைக்கும் அவர் போதுமானவர்; மணித் திட்டத்தின்படியும் விநாடித் திட்டத்தின்படியும் தவறாமல் ஆதரிப்பவர்; மாராவின் கசப்பான தண்ணீர்களுக்கு உன்னை நடத்தினால், தண்ணீரை மதுரமாக்கும் மரத்தை உனக்குக் காட்டாதிரார் (யாத். 15: 23–25). பவுல் மூன்றாம் வானத்திலிருந்து கீழே தள்ளப்பட்டுக் கிடந்தார்; மாம்சத்தில் கொடுக்கப்பட்டிருந்த முள்ளின் வேதனை தாங்கக்கூடாததாயிருந்தது. ஆயினும் இராட்சத வலிமையுடன் எழுந்திருந்தார்; தன்னைத் தாங்கின தெய்வ

கிருபையைப்பற்றி மிகவும் மேன்மை பாராட்டினர்; யாவற்றிற்கும் போதுமானவரான சம்பூரண கடவுளின் கிருபை அவருக்கு அருளப்பட்டது (2 கொரி. 12: 7–10).

இந்நாளின் தெய்வ வாக்கில் தனிச் சிறப்பான விசேஷமுண்டு; உனக்கு அனுப்பப்படும் துன்பத்தின் தன்மைக்கும் வேளைக்கும் தக்கதாக கடவுள் தம் கிருபையை உனக்கு அளந்து தருகிறாராம். காலத்திற்கு முன்னமே ஒரு வண்டியளவான கிருபையை உன்முன் கொண்டு வைத்திடார் அவர். தகுதியான சமயமும் அவசியமும் நேருகையில், அதற்கு வேண்டியதும் போதுமானதுமான பலமும் சகாயமும் அவர் அருளுவார். மேகம் தோன்றுமுன் அவர் மேகவில் தோற்றுவிப்பதில்லை; மேகம் படருகையில் மேகவில்லும் தோன்றும். துன்ப சமயத்தில் துன்பத்துக்குத் தக்கதான கிருபையும், சாவுவேளையில் அதற்குத் தக்கதான கிருபையும் அருளப்படும்.

வாசிப்போனே, வருங்காலத்தைப்பற்றி ஆரோக்கியக் கேடான எவ்வித சிந்தனையும் வேண்டாம். தெய்வ வாக்கை நம்பிப் பிழைத்திரு. நாளைத் தினம் தோன்றி, துன்பங்களும் வருமாகில், அத்துன்பங்களுடன் இம்மானுவேலரும் வந்து சேருவார். தற்சமய கிருபையும் சகாயமும் தற்சமய அவசியத்துக்குப் போதுமானது. வருங்கால சம்பந்தமாக கடவுளை நம்பிக்கொண்டிரு. துன்பத்தை எதிர்பார்ப்பதால்ல, அவரின் உண்மையை நம்பிப் பற்றிக்கொள்ளுவதாலும், நீ தாங்குவதற்கு மிஞ்சிய துன்பத்தை அவர் அனுப்பார் என்று அவரின் திவ்விய வாக்கை நீ நம்புவதாலுமே அவரைக் கனம்பண்ணுவதாகும். பெருமழைக்குப்பின் மேகங்கள் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்தாலும் (பிர. 12: 3), "நான் பொல்லாங்குக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்" (சங். 23: 4) என்று திடனுடன் சொல்லுவாயாக.

உன் சுயமாக நீ துன்பத்தைத் தாங்கக்கூடியவனல்ல; தாங்கக்கூடிய "உன் தகுதி கடவுளிடமிருந்து வருகிறது" (2 கொரி. 3: 5). தெய்வ வாக்கைப் படித்துப் பார்; "உன் கிருபை" என்றல்ல, "என் கிருபை உனக்குப் போதும்" என்றே இருக்கிறது (2 கொரி. 12: 9). சகலத்துக்கும் போதுமான அவரின் சர்வ சம்பூரணத்தைப் பற்றிக்கொள். யெகோவாயீரே, கடவுள் பார்த்துக்கொள்ளுவார் (ஆதி. 22: 14). வருங்காலத்தில் உன்மேல் வரக்கூடிய ஒவ்வொரு துன்பத்திலும், "தக்கபடி உன் பலம் இருக்கும்" என்ற வாசகம் தீட்டப்பட்டிருக்கும்.

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

25-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

பாதாளம் ஒழிக்கப்படுதல்

"அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்திற்கு நீங்கலாக்கி விடுவிப்பேன். மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே?"
—ஓசியா 13: 14.

கிறிஸ்துவனே, இம்மானுவேலரின் அன்பு பாதாளத்திலும் பிரகாசிக்கிறது. மரண இருள் பிரதேசத்தில் கவிந்திருக்கும் கன்னங் கரிய கார்மேகத்திலும் மகா பிரகாசமான வானவில் காணப்படுகிறது. அழிந்துபோன சரீரம் இந்த இருள் கிடங்குகளிலேயே கிடந்துபோகும்படி விடப்படுவதில்லை. உன் அருமையிலும் அருமையானவரின் உடல் மறதி தேசத்தில் அடங்கிக் கிடக்கிறது; அங்கேயுள்ள காரிருளும் பாழும் சாவும் ஒழியும் காலம் வரும். மகிமையான நவ ஜீவன் அங்கே தோன்றுமென்ற தெய்வ வாக்கு இருக்கின்றது; அழிவுக்குரியது அழிவின்மையையும் சாவுக்குரியது சாவாமையையும் தரித்துக்கொள்ளுமாம் (1 கொரி. 15: 53).

[illegible] இரண்டாம் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] ([illegible] [illegible] 13-[illegible]). இதுவே அவரின் செய்தியின் மைய பிரசங்க அம்சமாக, அவர் "இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் குறித்துப் பிரசங்கித்தார்" (அப். 17: 18). அதுவே அவரின் விசுவாசத்தின் மையத்தில் அவர் ஆர்வ பக்தியுடன் பற்றியிருந்த கொள்கை; அவரின் உள்ளத் ஆவல்கள் எல்லாவற்றையும் அதிலேயே அடக்கியிருந்தது; "நான் எவ்வகையாகிலும் மரித்தோரின் உயிர்த்தெழுதலுக்கு வந்து சேரவேண்டும்" என்பதே அவரின் தனி ஆசையே அவா (பிலி. 3: 11). அருமையானவர்களின் இறந்து துக்கித்துக்கொண்டிருந்தோருக்கு அவர் வெளிப்படுத்த வந்த மகத்துவமான ஆறுதலும் அதாகவிருந்தது. மரிக்கும் தருணத்தில் உடலை விட்டுச் செல்லும் ஆவியானது ஆண்டவனையே அடைந்துகொள்ளும் பேரின்ப பாக்கியத்தின் சம்பந்தமாக அல்ல; "கடைசி எக்காளம்". அழியாமையுடன் உயிர்த்தெழும்பும் சரீரம், மகிமையுள்ள சரீரத்துடன் ஆண்டவருக்கு எதிர்கொண்டுபோக ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் — இவைகளைக்குறித்து எழுதுகையிலேதான், "இந்த வார்த்தைகளினால் நீங்கள் ஒருவரையொருவர் தேற்றிக்கொள்ளுங்கள்" என எழுதினார் (1 தெச. 4: 13-18).

சகல சிருஷ்டிகளுக்கும் உயிர்த்தெழுதலின் மகா மகிழ்ச்சி நிறைந்த நித்திய ஜீவனின் அருளுறுதியை வெற்றியடைந்த திருச்சபையின் ஜுபிலி விழா மா பாக்கிய நாள் சோகத்தில் அழுந்தியிருக்கும் பிரிந்தவனே, கல்லறைக்குச் சென்று அழாதே; அங்கே அழுகி, உரு மாறி, புழுபிடித்து சேர்ந்து போயிருக்கும் உடலின் ஒவ்வொரு அணுவும் கல்லாகி

யில் செலுத்தப்பட்ட பலியால் மீட்கப்பட்டாயிற்று. தாம் மாம்சத்திலிருந்த நாட்களில், கல்லறைக்குள் இருந்த ஒருவனை, "கட்டவிழ்த்து இவனைப் போக விடுங்கள்" என்று ஜீவனின் அதிபதி கட்டளையிட்டார் (யோவா. 11: 44). மரணத்தைப் பரிகரிக்கும் ஆண்டவராகிய இவர், சகல பரிசுத்தவான்களையும் தம்மிடம் கூட்டிச் சேர்ப்பதற்காகத் தம்முடைய தூதர்களுக்கு இதே கட்டளை கொடுக்க இருக்கிறார்.

மகிமையில் சென்றிருக்கும் ஆவிகள் உயிர்த்தெழுதலின் சரீரங்களோடு ஒன்றுசேர்ந்து, ஆண்டவரின் சாயலை பெற்று விளங்கும் உன்னத மகிமையை கிரகிக்க வல்லோர் யார்? உணர்ச்சி, உயிர் தத்துவம் ஒவ்வொன்றும் தூய தூய்மையாகப் பரிசுத்தமாகி உன்னத உயர்வுடன் இயங்கும். ஆண்டவரின் பணியில் அவை ஈடுபட்டு, அவரின் சித்தத்தைச் செய்வதில் ஒன்றையொன்று முந்திக்கொள்ள முனையும். தாழ்ந்த பள்ளத்தாக்காகிய இப்பூமியில் கொண்டிருந்த முக சாயல் ஒருவேளை தோன்றி, தாங்கள் விட்டுப் பிரிந்தவர்களுடன் மறுபடியும் யாவரும் கூடிக்கொள்ளுவார்கள்; இனி அவர்களின் சேர்க்கையை எதுவும் பிரிப்பதில்லை; துக்கக் குறி அவர்களின் முகத்தில் தோன்றுவதில்லை; துயர சொற்கள் அவர்கள் நாவில் பிறப்பதுமில்லை. சிம்மாசனத்தின் மத்தியில் இருக்கிற ஆட்டுக்குட்டி இவர்களை நடத்திச் செல்வார், இவர்களை மேய்ப்பார் (தரி. 7: 17). ஜீவ வழியில் அவர்களை நடத்தி, சிகரம் சிகரமாக அவர்களுடன் ஏறிச் செல்லுவார். ஒவ்வொரு சிகரத்தையும் அடையும் போது, "இங்கே ஏறி வாருங்கள், முன்னிலும் பெரிதானவைகளை உங்களுக்குக் காண்பிப்பேன்" எனக் கூறி அழைப்பார் (தரி. 4: 1; யோ. 1: 50).

தம் அடியவர் அனைவரும் உயிர்த்தெழுந்திருப்பார்களென்பதைத் தமது உயிர்த்தெழுதலால் அவர் நிச்சயப்படுத்திவிட்டார். ஈறுந்த மகா பெரிய விளைவின் சேர்ப்புக்கு முன்னடையாளமாக, பிரதான அரிக்கட்

டான திருக்குமாரனே தெய்வ ஆசனத்தின்முன் ஏறெடுக்கப்பட்டு அசைவாட்டப்பட்டாயிற்று. "முதற் பலனானவர் கிறிஸ்து; பின்பு அவருடைய வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரி. 15: 23). "முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைகிறவன் பாக்கியன்" (தரி. 20: 6).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

26-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

அநாதி சிநேகம்

"அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் கிருபையாய் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்"

—எரேமியா 31: 3.

விசுவாசியே, உன் துன்ப சமயத்தில் அவரின் அன்பை நீ சந்தேகிக்கத் தூண்டப்படுகிறாயல்லவா? உன்னை இப்பொழுது அவர் நடத்திச் செல்லும் அடர்ந்த இருளில், அவரின் அடிச்சுவடுகளை நீ காண முடிகிறதில்லையோ? ஆனால், காலங்கள் தோன்றுமுன் அநாதி யுகங்களாக அவரின் கண்கள் உன்னை நோக்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நினைத்துக்கொள். தற்சமய துக்கமானது, அவர் தமது வல்லமையையும் உன்னத அதிகாரத்தையும் திடீரென்றும் காரணமின்றியும் உனக்குப் பிரதிகூலமாக்கி விட்டதாகத் தோன்றச்செய்யும்; ஆனால் உண்மையில் அப்படியல்ல; உனக்கு நேரிட்ட சோக சம்பவமானது அவரது அநாதி சிநேகத்தின் தீர்மானமும் ஏற்பாடுமாம். "துன்பப்படுவோனே, என் அன்பினால் உன்னை உபத்திரவத்திற்கு உட்படுத்தினேன்; என் அன்புடன் உன்னை அதின் ஊடாக நடத்திச் செல்வேன்: உன்னைப்பற்றி நான் செய்த தீர்மானம் நிறைவேறியவுடனே, என் அன்பானது அநாதி யுகங்களிலிருந்து நித்திய காலமாக

நிலைத்திருக்கும் அன்பு என நீ அறிந்துகொள்ளச் செய்வேன்" என அவர் சொல்வதுபோல் இருக்கிறது.

கடவுளின் பிள்ளையே, உன் வாழ்க்கையாகிய ஓடையில் உண்டாகும் சிற்றலைகளாகிய துன்ப துக்கங்கள், அன்பு எனும் அதின் ஊற்றுக்கண்ணிலிருந்தே உண்டாகி வருகின்றன. கடவுள் உண்மையுள்ளவர், அவர் தமது உண்மையினின்று புரளுவதில்லை. அவரிலிருந்து வெளிச்செல்லும் அன்பின் கிரணங்களைக் கார்மேகங்கள் மறைக்கும்படி செய்வாரானால், மிக்க ஞானமுள்ள ஒரு இரகசிய காரணம் இருக்கும். "இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; எனினும் மிகுந்த இரக்கத்தினால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன். புரண்டோடுங் கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்: எனினும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று உன்னை மீட்பவராகிய யெகோவா சொல்லுகிறார். நான் நோவா கால வெள்ளத்தில் செய்ததுபோலச் செய்வேன். நோவாவின காலத்திலுண்டானவெள்ளம் இனிப் பூமியின்மேல் புரண்டு வருவதில்லை என்று நான் அப்பொழுது ஆணையிட்டேனே, உன்மேல் நான் கோபம் கொள்ளுவதில்லை என்றும், உன்னை நான் கடிந்துக்கொள்ளுவதில்லை என்றும் இப்போது ஆணையிடுகிறேன். மலைகள் விலகினாலும் குன்றுகள் அசைந்துபோனாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை அசையாமலும் இருக்கும் என்று உன்மேல் மனதுருகுகிற யெகோவா சொல்லுகிறார்" (ஏசா. 54: 7–10).

இருண்ட வானத்தில் அவர் தம் வானவில்லை வைக்கிறார்; தம் அடியவர் அதைப் பார்த்து மகிழ்ந்து, அதின் பல பலவான வாக்குத்தத்தங்களால் ஆறுதல் அடைவதும் போதாது என்றாற்போல், அவர் தாமும் அவர்களுடன் சேர்ந்து அந்த உடன்படிக்கையின் வில்லை நோக்கிப் பார்க்கிறாராம். "அந்த வில் மேகத்தில் தோன்றும்போது,......நித்திய உடன்படிக்கையை

நான் நினைத்தருளும்படி அதை நோக்கிப் பார்ப்பேன் என்று சொன்னார்" (ஆதி. 9: 16). அவரின் நித்திய அன்பை அவர் தாமே தமக்கு ஞாபகப்படுத்திக் கொள்ளுவாராம். தம் பக்தரானோர் தங்களின் இருள் சூழ்ந்த துன்ப நாட்களில் கடவுளின் உண்மையான வானவில்லைத் தங்கள் கண்களால் நோக்கிப்பார்த்து ஆறுகையில், உடன்படிக்கையை ஏற்படுத்தின கடவுளின் திருக்கண்களும் அந்த வில்லை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. "நான் அருளிய என் வாக்குத்தத்தங்களை நானே நோக்கிப் பார்த்து, என் மாறுத இரக்கங்களை ஞாபகப்படுத்திக்கொள்வேன்" என்று அவர் சொல்லுவதுபோல் இருக்கிறது.

மேற்சொல்லிய இந்த அன்பானது, எவ்வித தாரதம்மிய உணர்ச்சியுமின்றி மனு ஜாதி முழுவதின் மேலும் கடவுள் வைக்கும் பொதுவானதொரு பாசமல்ல. "நான் உன்னைச் சிநேகித்தேன்" என்றே இந்நாளின் வசனம் கூறுகிறது; உடன்படிக்கையைப் பெற்ற மனு ஜாதியின் தனித்தனி ஆளையே அது குறிக்கிறது. "என் அருமைத் தந்தையே, உண்மைத் துரோகியும் நன்றிகேடனுமான என்னைத் தனியே நினைக்கும்படி, மற்று யாரையும் நீர் மறந்துவிடுவதாகவே சில சமயங்களில் எனக்குத் தோன்றுகிறது" என்று பக்தி முதிர்ந்த ஒரு அம்மையார் பகர்ந்தனர்.

உன்பேரில் விழும் துன்பங்கள் யாவையும், கடவுள் உன்னை இழுத்துத் தம்முடன் சேர்த்துக் கட்டிக் கொள்ளும்படி உபயோகிக்கும் அத்தனை கயிறுகள் என்று எண்ணிக்கொள் (ஓசியா 11:4). உனக்கு புத்திக் கெட்டாத இரகசியமும் இருளுமாகத் தோன்றும் தெய்வ நடத்துதல்களில் என்ன இரக்கம் இருக்கிறதோ, யாருக்குத் தெரியும்? அவரின் வழிகளை நீ தவருய் அழைக்கவும் அருத்தப்படுத்தவும் தூண்டப்படுகிருய்; அவைகளை மிகக் காரமும் குரூரமுமான பாடுகள் என்கிருய்; அவரோ அவைகளை "இரக்க உருக்கங்கள்" என்கிருர்.

வாடிச் சோர்ந்துபோகும் பக்தனே, சிம்மாசனத்தைச் சுற்றிலும் வளைந்து நிற்கும் வானவில்லை நோக்கிப்பார்; அது நித்தியத்தின் ஆரம்பத்தையும் அந்தத்தையும் இணைத்து நிற்கிறது; கடவுளின் நித்திய நித்தியமான அன்பின் அடையாளமாம் அது. அதின் அடியில் தங்க எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும் ஆறுதலான இரக்க வாசகத்தைப் படித்துப்பார்: "யெகோவாவின் கிருபை அவர்களுக்குப் பயந்தவர்கள்மேல் அநாதியாய் என்றைக்கும் உள்ளது" (சங். 103: 17).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும்போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

27-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

முறியாத பாசம்

"உடன் பிறந்தோரிலும் உரிய நண்பர் உண்டு"

—நீதிமொழிகள் 18: 24.

உடன் பிறந்தோருக்குள் இருக்கும் பாசம் வலிமையானது; இளமையில் இவர்கள் ஒன்றாக வாழுபவர், சந்தோஷங்களையும் துக்கங்களையும் ஒன்றாக அநுபவிப்பவர், ஒரே மனித உருவில் வார்க்கப்பட்டவர்; இளமைப் பருவத்தின் தூயதான கூட்டு அநுபவங்கள் இவர்களின் உள்ளங்களில் கல்மேல் எழுத்துப்போல் ஆழ்ந்து பதிந்திருக்கும்.

ஆனால் கடைசியில் ஒருவரையொருவர் விட்டுப் பிரியும் காலம் வரும். தாய்ப் பறவையின் கூட்டை விட்டுக் குஞ்சுகள் பறந்துபோய்த் தூரமான அன்னிய இடங்களில் கூடுகட்டும். வாழ்க்கையின் அலுவலும் போராட்டமும் யாவரையும் கட்டாயமாகப் பாதிக்

கும். உடைந்துபோனக் கப்பல்போல், இல்லம் உருத் தெரியாமல் உடைபட்டுப்போம்; கப்பலின் உடைந்த துண்டுகள்போன்றே குடும்பத்தின் பிள்ளைகள் வாழ்க்கையின் சாகரத்தில் பல பல திசைகளிலும் தெறி பட்டுக் கிடப்பார்கள். வாழ்க்கையின் அலுவல்களால் சிலரும், மனஸ்தாபங்களாலும் சண்டைகளாலும் சிலரும் பிரிந்துவிடுவர். இவையெல்லாவற்றிற்கும் மேலாக சாவினால் யாவரும் பிரிக்கப்பட்டுப்போவர்.

ஆனாலும், அன்பர் ஒருவர் உண்டு; அவரின் நட்பும் அன்பும் சந்தர்ப்பங்களால் கெடுகிறதில்லை, இடம் விட்டுப் பெயர்வதால் மாறுவதில்லை, சாவினால் சிதைவதுமில்லை. இவர் உன் மூத்த சகோதரர்; யாவரையும்விட உன்மேல் பாசமாயிருக்கும் இனத்தாரும் இவரைப்பற்றி, போவாஸ் ரூத்துக்குச் சொன்னது போலவே, உன்னிடம் சொல்லக்கூடும்: "நான் உன் இனத்தான் என்பது மெய்யே; எனினும் என்னிலும் நெருங்கிய இனத்தான் ஒருவர் உனக்கிருக்கிறார்" (ரூத் 3: 12). அவர் உன் சகோதரர்; அல்ல, சகோதரனிலும் மேலானவர்; நண்பர், ஆலோசனையாளர், உன் சுதந்தரமானவர், பரிகாரி, மேய்ப்பர்—இவை யாவும் ஒருங்கே அமையப் பெற்றவர். உன்னோடு பிறந்து வளர்ந்து அன்பு பாராட்டி உன்னை மகிழ்வித்த யாவரும் பிரிந்துபோனபின், இவரின் சத்தத்தைக் கேட்பது உனக்கு ஆனந்த பாக்கியமே. இவரின் உண்மை குற்றப்படுத்தப்படாததாம்; "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (யோசு. 1: 5) என்பது அவரின் திருவாக்கு. நீ பற்றிக்கொண்டிருந்த அன்பர் ஒவ்வொருவராகக் கடந்துபோனபின், பெயராததும் அசையாததுமான உறுதியான நங்கூரம்போன்ற இவருடன் நீ இணைக்கப் படுவது உன் பெரும் பாக்கியமே. பூலோகப் புசல்களாலும் கொந்தளிப்புகளாலும் அடிபட்டு அல்லோலப் பட்டு, சுகபத்திரமான ஒதுக்கைப் பற்றிக்கொண்ட, பிரபல பக்தன் ஒருவர், "இனி நான் நித்திய தன்மலையின்மேல் சாய்ந்து நித்திரை போகலாம்" என்றார்.

துன்பத்தில் அடிபட்ட பக்தனே, அவர் உன்னை ஒருபோதும் கைவிட்டதில்லை, ஒருபோதும் கைவிடுவதுமில்லை. அவரது அன்பின் குரல் மாறுவதில்லை, அவரின் பாசம் நேரத்திற்கு நேரம் வேறுபடுவதில்லை. நாணல் அங்குமிங்கும் சாயும், ஆனால் கன்மலையானவர் மாறா உறுதியாய் நிலைத்திருப்பார். அவர்தாமே மெய்யான வானவில். வானவில்லின் பல நிறங்கள் போன்றே வேத வாக்குகளும் பல்வேறானவை. ஆனால் இந்த வாக்குத்தத்தங்கள் யாவும் அவரில் இருக்கின்றன (2 கொரி. 1: 20). மேகம் அடர்ந்த துன்ப சமயத்தில்தான் தெய்வ வாக்குத்தத்தமாகிய வானவில் மகிமையின் ஜோதியாய் விளங்கும். துன்ப துக்கத்தில்தான், கிறிஸ்து பெருமானை "இடுக்கணில் உதவி செய்யப் பிறந்த சகோதரராக" (நீதி. 17: 17) நீ கண்டுகொள்ளுவாய்; மற்ற எதினாலுமல்ல, உபத்திரவத்தாலேயே அவரின் அளவிடப்படாத மதிப்பும் அருமையும் உன் வாழ்க்கையில் அதிகமதிகமாகத் தோன்றி உன்னை ஈடுபடுத்தும். உன் பூலோக நண்பரின் அன்பு கல்லறைக்குள் ஒழியும்போது, பரலோக நண்பரின் அன்பானது என்றும் இல்லாத அருமையாய் உன் உள்ளத்தில் விளங்கும். சவுலின் குமாரனாகிய யோனத்தான் போரினால் இளைத்துத் தள்ளாடிக் காட்டில் அலைகையில், ஒரு மரத்தில் தேன் கூட்டைக் கண்டு அதினின்று ஒழுகிய தேனைப் புசித்து, கண்கள் தெளிந்து திடனடைந்தான் (1 சாமு. 14: 27); அவ்வாறே, தளர்ந்து தள்ளாடுவோனே, பூலோகத் துன்பங்களாகிய அடர்ந்த புதர்களுக்குள் நீ தள்ளாடித் திரிகையில் உன் காதலரின் நிழலிலே மிகுந்த ஆசையுடன் அமர்ந்திரு (கீதகீதம் 2: 3); அவரின் கனியை இன்பமாக ருசித்திரு. இந்த ஜீவ விருட்சத்திலிருந்து வடியும் பிசின் தைலம், நொந்து முறிந்து புண்பட்ட உள்ளத்திற்கும், இளைத்துத் தளர்ந்து போன ஆவிக்கும் ஆரோக்கியம் அளிக்கும். ஆம், ஏகாந்தியாய்த் துக்கத்தில் அழுந்தித் தவிக்கையில், ஜீவனை ஆதரிக்கும் ஆண்டவரின் திருவசனங்களும்

வாக்குகளும், "தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் உனக்கு மதுரமாயிருக்கும்" (சங். 19: 10). இப்பொழுது அவர் தெய்வ சிம்மாசனத்தில் வீற்றிருந்து நித்திய வாசியாய்ப் புகழ் பெறுகையிலும், அவரின் திரு உள்ளமானது சகோதர உள்ளமாயும் சகோதர பாசத்தால் துடிப்பதாயும் இருக்கிறது. நம்மைச் "சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை" (எபி. 2: 11).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

28-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

ஆதரிக்கும் தெய்வப் பிரசன்னம்

"நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னேடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை, நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினி சுவாலை உன்மேலே பற்றது" —ஏசாயா 43: 2.

பரீட்சை ஸ்தலமான இந்த லோகத்தில் எத்தனை எத்தனை விதமான உபத்திரவங்களோ இருக்கின்றன. தண்ணீர்கள், ஆறுகள், வெள்ளங்கள், அக்கினிகள், சுவாலைகள்! கணக்கில் அடங்காத இந்த உபத்திரவங்கள், ஏதாகிலும் ஒருவிதமாகக் கிறிஸ்துவரைத் தாக்கியே தீரும் என்ற முன்னெச்சரிப்பை இங்கே படிக்கிறுய். சுகம் கெடலாம், ஆஸ்தி போகலாம், நண்பர் ஒழியலாம், வாழ்க்கையின் திட்டங்களும் நம்பிக்கைகளும் சிதையலாம். ஆனல் எந்த உபத்திரவங்களுக்கும் மட்டு உண்டு, இது பெருத்த பாக்கியமே! வெள்ளங்கள் உன்மேல் புரளுவதில்லை; அக்கினியால் நீ வேகுவதில்லை; அதின் ஸ்வாலைகள் உன்னை எரித்துவிடுவதில்லை. "கொண்டல் காற்று அடிக்கிற நாளிலே, அவர் தம்முடைய கடுங் காற்றினல் அதை விலக்கிவிடுகிறுர்" (ஏசா. 27: 8). "இதுமட்டுமே, இதற்கப்பால் செல்லாதே" (யோபு 38: 11) என்று அவர் கட்டளையிடுவார்.

இதைவிடப் பாக்கியம் ஏதெனில், உன் எல்லா துன்பங்களிலும் இயேசு பெருமான் தாமே உன்னே டிருப்பார்; அவற்றை நீ தாங்கிக்கொள்ள, போது மான கிருபை அவரிடம் உண்டு. "உபத்திரவங்க ளாகிய மிகுந்த போராட்டத்தின் மத்தியில்" (எபி. 10: 32) உன் எஜமானனின் காலடிச் சத்தம் உன் செவியில் விழும். அவர்தாமே அக்கினி சுவாலை களுக்கு ஊடாக நடந்தார், வெள்ளங்களை எதிர்த்து நின்ருர், பாவமற்ற அவரின்மேல் பயங்கரப் புசல்கள் மோதின. அன்று இரவு புசல் காற்றின் மத்தியில் அவரின் சிஷரிடம் அவர் வந்தாற்போன்றே, அவர் உன்னிடமும் வந்து, "திடன்கொள், நான்தான், பயப் படாதே" என்பார் (மத். 14: 27).

விசுவாசியே, உன் அநுபவம் என்ன? எகிப்தியரின் மேல் வெற்றிகொண்ட இஸ்ரவேலரின் அநுபவ மல்லவா! "கடலை வெட்டாந்தரையாக மாற்றினுர்; ஆற்றைக் கால் நடையாகக் கடந்தார்கள்; அங்கே அவரில் களிகூர்ந்தார்கள்" (சங். 66: 6). துன்ப வெள்ளம் உன்மேல் புரண்டதே; அதின் பயங்கர அலைகளுக்கு நீ சற்றும் அஞ்சாமல் அதைக் கடந் தாயே; ஆம், உன் வாயினின்று ஸ்தோத்திர பாடலும் புறப்பட்டது. உன் அக வாழ்க்கையின் வீரத்தனத் திற்கும், எதிர்பாராத உன் மகிழ்ச்சி பாடலுக்கும் காரணம் என்ன? மேக ஸ்தம்பத்துடன் உன்னேடு செல்லும் உன் ஆண்டவரின் பிரசன்னமல்லவா! அவரி லேயே நீ அகமகிழ்ந்தாய்; அவரால் நீ "முற்றும் ஜெயங்கொள்ளுவோன்" ஆனுய் (ரோம. 8: 37). எத்தனையோ விரோதிகள் உன்னை எதிர்க்கலாம்— "உபத்திரவம், வியாகுலம், இம்சை, பஞ்சம், நிர்வா ணம், நாசமோசம், பட்டயம்" (ரோம. 8: 36). ஆனுல் அக்கினி சுவாலைகளிலும், புரண்டோடும் வெள்ளங் களிலும், அவைகளிலும் வலிமையுடையோர் ஒருவர் நின்றுகொண்டிருக்கிருர். அவர் உன்னுடன் இருப்ப தால், பாதாள ஆழங்களையும், பீதி உண்டாக்கும் உயரங்களையும் நீ துணிவுடன் நோக்கி, "கிறிஸ்துவின்

அன்பை விட்டு என்னைப் பிரிப்பவன் யார்?'' என அறைகூவலாம். "ஐயன்மாரே, சிலுவையில் அறையப் பட்ட இயேசுபெருமானில், அவரின் ஏழை அடியவர் களுக்கு உறும் இடுக்கண்களுக்கும், குறைவுகளுக்கும், அவசியங்களுக்கும், துன்பங்களுக்கும் ஏற்ற அள வான கிருபை உண்டு'' என்று ஒரு பக்தன் குறித்து வைத்திருக்கிறார்.

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்.''

29-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

உடன் உணர்ச்சி

"நமக்கு இருக்கும் பிரதான ஆசாரியர் நமது பலவீனங்களுக் காகப் பரிதபிக்க முடியாதவரல்ல'' —எபிரேயர் 4: 15.

"மழை நாளிலே மேகத்தில் வானவில் தோற்று வதுபோல் சுற்றிலும் அந்தப் பிரகாசம் தோன்றினது; யெகோவாவினுடைய மகிமையின் தோற்றம் இப்ப டிக் காணப்பட்டது'' (எசே. 1: 28); இது எசேக்கியே லின் தெய்வ தரிசனம். மனதைப் பரவசமாக்கும் சத்தியம் இது. கடவுளுக்கும் மனிதருக்கும் மத்தி யஸ்தரான மனுஷனாகிய கிறிஸ்து இயேசு (1 தீமோ. 2: 5, 6) உனது துக்கங்களில் உன்னுடன் ஒன்றாகிக் காணப்படும் காட்சி இதுவே; அவரே மெய்யான வானவில். நீ யாவற்றையும் இழந்து பாழாய்விடப் பட்டிருக்கையில், இது உனக்கு உன்னத மகிழ்ச்சி யைத் தரும். புசல் காற்றிலும் பெரு மழையிலும், அல்லது மப்பும் மந்தாரமும் அந்தகாரமுமான இக் கட்டில் நீ அகப்பட்டுத் திகைக்கையில், நீ அமர்ந்து தரிக்கக்கூடிய புல்லுள்ள வெளியாம் இது.

மானிட அநுதாபம் ஆறுதலும் தேறுதலுமானதே; ஆனால், "இம்மட்டுந்தான், இதற்கு அப்பால் அல்ல'' என்று மட்டுக்குட்பட்டது அது; மானிட அநுதாபம்

அடிக்கடி மட்டுப்பட்டதாயும், சுயநலத்துடன் கலந்ததாயுமிருக்கும். மனிதரின் எந்த அநுதாபத்திற்கும் ஆற்றுதலுக்கும் கட்டுப்படாத பூலோகத் துன்பங்களும் துக்கங்களும் கணக்கற்றவை, கூறுெண்ணுதவை.

ஆனுல் இயேசுபெருமானின் அநுதாபம் மட்டும் உன்னதமானது. அது சுத்தமானது, அளவற்றது, அணுவும் சுயநலக் கலப்பற்றது. ஒவ்வொரு வகையான மானிட துக்கமும் அவருக்குத் தம் அநுபவத்தால் தெரியும். நீ சோக சஞ்சல ஆழங்களில் எவ்வளவாய் அமிழ்ந்தாலும், அவரின் நித்திய கரங்கள் அங்கேயும் உன்னைத் தாங்கிக்கொண்டிருக்கும். அவரின் ஜனங்களுடைய பெரிய அநுதாப உணர்ச்சி நாம்பு அவர்; அவர்களின் இடுக்கண்களும் துன்பங்களும் பாடுகளும் அவருள் ஓயாது துடித்துக்கொண்டிருக்கும். துக்கத்தில் அழுந்திய பக்தனே, சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் தெய்வ சுதன் மனுஷீக இருதயமுடையவர்; உன் சகல அநுபவங்களையும் தம் திரு உள்ளத்தில் உணருபவர்; அந்த உள்ளத்தில் உன் பேர் குத்தப்பட்டிருக்கிறது. அவரின் உதவியையும் கரிசனையையும் நாடுவது நீ ஒருவனே என்றுற்போல், அவர் உன்பேரில் எண்ணமும் கரிசனையும் உள்ளவராயிருக்கிறுர். மகா பிரதான ஆசாரியரான அவர், தம் ஆலயத்தின் பொன் குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவி (தரி. 1: 13), சிலவற்றிற்கு எண்ணெய் ஊற்றுகிறுர்; சிலவற்றில் திரியைத் தூண்டிவிடுகிறுர்; இதின் திரு நோக்கம் யாதெனில், விளக்குகள் யாவும் தணியாமல் ஒரே மட்டாய்ப் பிரகாசமாய் எரியச் செய்வதே.

“எல்லா விதத்திலும் நம்மைப்போல் அவர் சோதிக்கப்பட்டார்” (எபி. 4: 15); இது உனக்கு என்ன பாக்கியமான உறுதிமொழி! வேதனையுற்றவரான இவர் அநுபவித்திராத எந்த வேதனையும் உனக்கு உண்டாவதில்லை. பூலோகத்தில் உன்னைப் பிழிந்தெடுக்கும் வேதனைகளின் மத்தியில், வேதனைகளுற்ற இரட்சக

ரான இவரின் திருவாய்மொழி உன் செவியில் விழும்; அது நீ பதில் சொல்லக்கூடாத ஒரு கேள்வி: "எனக்குற்ற வேதனைபோல் உண்டோ?' (புலம்பல் 1: 12). அவர்பேரில் கவிந்த மேகங்களில் வானவில் தோன்றவேயில்லை; அப்படியிருந்தும் வியாகுல பாத்திரத்தை வேண்டாமென்று அவர் மறுத்துவிடவில்லை; அவர்பேரில் சுமத்தப்பட்ட சிலுவைக்கு அஞ்சிப் பின் வாங்கவுமில்லை; "அவர் எருசலேமுக்குப் போக மன உறுதி கொண்டார்" (லூக். 9: 51). சிலுவையில் அறையப்பட்டபோது, அகோர தாகம் உண்டாகாதபடித் தடுத்து, சரீர வேதனையை மட்டுப்படுத்தும் வெள்ளைப்போளக் காடியைக் குடிக்க அவர் மறுத்தார் (மத். 27: 34). கடவுளின் கரம் உன்னை வாதிக்கையில் முறுமுறுக்கத் தூண்டப்படுகிறாயோ? "நீ மனஞ் சோர்ந்து இளைத்துப்போகாதபடிக்கு....சகித்த அவரை சிந்தித்துக்கொள்" (எபி. 12: 3). உன் ஆண்டவரும் எஜமானுமானவர், உன் நன்மையைக் கருதி உன்மேல் வரவிடும் எந்தத் துன்பத்தையும் சகிக்கப் பின்வாங்குகிறாயோ? அவர் உனக்காகவும் உலகம் அனைத்துக்காகவும், உன் புத்திக்கெட்டாத பாரமான சிலுவையை எவ்வளவு சாந்தத்தோடும் மனம் வருந்தாமலும் சுமந்தார்!

துன்பப்பட்டோனே, உன் துக்கமேகத்தில் தோன்றும் பிரகாசமான இந்த வானவில்லைப் பார். மறுரூப மலையில் மூன்று சீஷரும் மேகத்துக்குள் பிரவேசிக்கையில் பயந்ததுபோல் நீயும் பயப்படுகிறாயோ? ஆனால் மேகத்தினின்றும் பிறக்கும் சத்தத்தைக் கேள்: "இவர் என் நேசகுமாரன்; இவருக்குச் செவிகொடுங்கள்" (மார். 9: 7). மேகங்களுக்குள்ளிருந்தே இயேசு பெருமான் பேசுகிறார். உன் கவலைகளும் துக்கங்களும் அவருடைய கவலைகளும் துக்கங்களுமாம்; இது அவரின் வாக்கு. உன் புத்திக்கெட்டா இரகசியமான ஒவ்வொரு சிட்சையிலும், ஞானமும் இரக்கமுமான ஒரு நோக்கத்தை அவர் கொண்டிருக்கிறார். "தண்டனைக் கோலைப்பற்றியும் அதை நியமித்தவரைப்பற்றியும்

சொல்லுவதைக் கேள்" (மீகா 6: 9) என்று உன்னைப் பார்த்து விளம்புகிறார். அவர் தயாளமும் பாசமும் நிறைந்தவராகையால், அவசியமற்றதும் மிதமிஞ்சினதுமான ஒரு வேதனையையும் கொடுப்பதில்லை.

மெய்யாகவே அவரின் திருவாய் மொழியை நீ கேட்பது என்ன பாக்கியம்! உபத்திரவமானது தன்னிலேயே பரலோக பாதை என்று எண்ணிவிடாதே. மேகங்களாகவே வானவில்லை உண்டாக்குவதில்லை. கண்ணை மகிழ்விக்கும் ஏழு திவ்விய வருணங்களும் சூரிய கதிரினின்றே புறப்படுவன. சூரிய ஒளி இல்லாவிடின், வானம் இருண்டே இருக்கும், வெள்ளக்காடாக மழை ஊற்றிக்கொண்டே இருக்கும்.

திவ்விய வாசகனின் தரிசனத்தில் வெள்ளை அங்கிகளைத் தரித்தவர்களாய்க் காணப்பட்ட எண்ணக்கூடாத திரள், "பெரிதான உபத்திரவத்திலிருந்து வந்ததால்" பரம சிங்காசனத்தின் முன்னிற்கப் பாத்திரராகிவிடவில்லை; தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் துவைத்து வெளுத்ததாலேயே அதற்குப் பாத்திரர் ஆனார்கள் (தரி. 7: 9-14). உனக்கு உண்டாகும் உபத்திரவத்தால், நீ உன் இரட்சா பெருமானைக் கிட்டிச் சேர்ந்து, திறக்கப்பட்ட திரு ஊற்றுக்குச் சென்றால்மாத்திரம் நீ உன் உபத்திரவத்தைக்குறித்து மேன்மை பாராட்டலாம் (ரோ. 5: 4).

இயேசுவே, நீரே என் நம்பிக்கை; தளரும் சரீரத்தையும் சோரும் உள்ளத்தையும் திடப்படுத்தும் சக்தி நீரே; உம் திருமுகப் புன்முறுவலை நான் கண்டு கண்ணயர்வேனாக. ஆமேன்.

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

30-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

தீவிர வருகை

"இன்னும் சொற்பப் பொழுதுதான், வருகிறவர் வருவார், தாமதியார்" —எபிரேயர் 10: 37.

"இன்னும் சொற்பப் பொழுதுதான்", சொப்பனம் போன்ற பூ வாழ்க்கையின் கொந்தளிப்பு அடங்கி விடும்; "மந்தாரமில்லாத அதிகாலை" தோன்றும் (2 சாமு. 23:4); கடலின் கோஷ்டமும் அலைகளின் கொந்தளிப்பும் இன்னமும் சிறிது காலத்தில் அடங்கும்; அமைதியான துறை வந்துவிடும். இன்னமும் சில இரவுகள் மட்டுமே; அப்பால், கலிலேயாக் கடலோரமாய் அதிகாலை இருட்டில் ஆண்டவர் தோன்றிய வண்ணமாக (யோ. 21: 4–9) உன் ஆண்டவர் மோட்ச கரையில் தோன்றுவார்; தமது பிள்ளைகளுக்கென்று அவர் ஆயத்தப்படுத்தும் நித்திய அன்பின் பந்தியில் நீ அமருவாய்.

ஆம், "அவர் வருகிறார்"! இதுவே திருச்சபையின் "ஆனந்த நம்பிக்கை" (தீத். 2: 13). தெய்வ காதலரின் திருமொழியாலும் பிரசன்னத்தாலும் "காரிருள் விடியற்காலமாக மாறும்" (ஆமோ. 5: 8). மரித்தோர் அவரின் சத்தத்தைக் கேட்டு மரணத்தினின்று மீட்கப்பட்டு வெளியே வருவார்கள். இயேசுவில் நித்திரை அடைந்தவர்களைக் கடவுள் அவரோடுகூடக் கொண்டு வருவார் (1 தெச. 4: 14). அவரின் ஈறுந்த அழைப்பு, "ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உங்களுக்காக அங்கே தெய்வ தூதர்களுடன் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கும் ஒளி மயமான பரதீசுக்குப் போங்கள்" என்றல்ல, "வாருங்கள், என் பேரின்ப பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள், என் கிரீடத்தை அணிந்துகொள்ளுங்கள், எஜமானின் சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்" என்றே இருக்கும். பவுல் எதிர்பார்த்து ஆசித்த பரலோகம் "கிறிஸ்துவோடு" என்பதில் அடங்கியிருக்

கிறது (பிலி. 1: 23). யோவானின் நோக்கான பரலோகம் இரு அம்சங்கள் சேர்ந்தது—இயேசுபெருமானின் சாயல், அவருடன் ஐக்கியம்; "அவரைப்போல இருப்போம்; அவர் இருக்கிறபடியே நாம் அவரைத் தரிசிப்போம்" (1 யோ. 3: 2). யோவான் ஆவிக்குள்ளாகி, பரலோகத்தின் வாசல் திறக்கப்பட்டு, வரப்போகிறவைகளைத் தரிசிக்கையில், அவர் முதல் முதலாகப் பரவசத்தோடு தரிசித்தது, "சிங்காசனத்தில் வீற்றிருந்தவரே," "சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது, அது பார்வைக்கு மரகதத்துக்கு ஒப்பாயிருந்தது" (தரி. 4: 1–3).

உன் ஆண்டவராகிய இயேசுவினண்டை நீ நடத்தப்பட்டு, உன் கண்களால் அவரைத் தரிசித்து அவருக்கு ஒப்பாகுமட்டும் நீ பரிபூரண சந்தோஷம் அடைவது கூடாதது. வான உலகங்களுக்குக் கீழுள்ள இப்பூமியில் வசிப்போருக்கு பரம இராஜாவின் நாட்டிலிருந்து உணவு அளிக்கப்பட்டுவருகிறது. ஆனால் அந்த இராஜாவை உன் கண்களால் காணுமட்டும் உனக்கு திருப்தி உண்டாவதில்லை. யோசேப்பு வண்டி வண்டியாக அனுப்பிய உசிதமான பதார்த்தங்கள் யாக்கோபுக்குத் திருப்தியளிக்கவில்லை; அவனைத் தன் சொந்தக் கண்களால் கண்டபோதே வயோதிப தகப்பனின் ஆவி உயிர்த்தது. நீ பரதேசியாக இப்பூலோகத்தில் சஞ்சரிக்கையில், உன் யோசேப்பு நாதரிடமிருந்து ஏராளமான இரக்க வாக்குத்தத்தங்களும் அவைகளை உறுதிப்படுத்தும் அத்தாட்சிகளும் வந்துகொண்டேயிருக்கின்றன. ஆனால் நீதியில் அவரின் திருமுகத்தைத் தரிசிக்க நீ ஏங்குகிறாயல்லவா? நீ விழித்து அவரின் சாயலைத் தரிசிக்கும்போதுமாத்திரம் திருப்தியாவாய் (சங். 17: 15).

"ஆண்டவராகிய இயேசுவே, வாரும், சீக்கிரம் வாரும்." அவர் தாமதியார். ஒவ்வொரு நாளின் முடிவிலும் மனமகிழ்ச்சியின் மகா தினமான அவரின் வருகை சமீபமாகிக்கொண்டேயிருக்கிறது. காலம்

வாயு வேகமாகப் பறக்கிறது; அவர் சிம்மாசன அதிபதியாய் சீக்கிரம் வருவார். பாவத்தாலும் பாவ ஆக்கினையாலும் பாழான இவ்வாழ்க்கையில் நீ உடுத்தியிருக்கும் உன் இரட்டுகள் களைந்துபோடப்படும் (சங். 30: 11); ஒளி மயமும் திவ்விய மேனியுமான அங்கியால் நீ உடுத்தப்படுவாய். இதுவே நித்திய ஓய்வுக்குரிய அங்கி.

அப்போது "வானவில் மேகத்தில் தோன்றும்" என்ற தெய்வ வாக்கு மெய்யாக நிறைவேறும். ஆ பாக்கிய நாள்! வாக்குத்தத்தமாகிய மேகவில் அல்ல, சகல வாக்குத்தத்தங்களின் ஊற்றும் நிறைவேற்றமுமான ஆண்டவர் தாமே தோன்றுவார். "இதோ, மேகங்களோடு வருகிறார்" (தரி. 1: 7).

எப்போதும் விழிப்போடு காத்திரு. விசுவாசியே, நீ சிசெராவின் தாயைப்போல் அவருடைய இரதத்தின் இரைச்சலுக்காக, ஆவலாய்த் திறந்த செவிகளோடும் துடிக்கும் வேகத்தோடும் காத்திரு (நியா. 5: 28). "அதோ, வந்துவிட்டார்" என்ற சத்தம் உன் செவியில் விழுந்த உடனே, நீ மகிழ்ச்சி பொங்கி, "இதோ, இவரே என் கடவுள், இவருக்கென்று காத்திருந்தேன்" (ஏசா. 25: 9) என்று விளம்பக்கூடும்.

"எஜமான் வரும்போது விழித்திருக்கக் காணும் ஊழியக்காரரே பாக்கியவான்கள்; அவர் அரை கட்டிக்கொண்டு அவர்களைப் பந்தியிருக்கச் செய்து அவர்களண்டை வந்து பரிமாறுவார்" (லூக். 12: 37).

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது அந்த வில் மேகத்தில் தோன்றும்."

31-ம் தினம்

"நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்"

நித்திய ஆனந்தம்

"யெகோவாவினால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி மகிழ்ச்சியாய்ப் பாடிக்கொண்டு சீயோனுக்கு வருவார்கள்; அவர்கள் தலையின்மேல் நித்திய ஆனந்தம் சூட்டப்படும்; சந்தோஷமும் ஆனந்த

மும் அடைவார்கள்; சஞ்சலமும் பெருமூச்சும் ஓடிப்போம்"
—ஏசாயா 35: 10.

விசுவாசியே, உன் வானவில்லைக் கீழே விட்டுவிட்டு மேலே ஏறிச்செல்லு; பரம சிங்காசனத்தைச் சுற்றி யிருக்கும் வானவில்லை நோக்கு (தரி. 4: 3); கடவுளால் மீட்கப்பட்டவர்கள் மகிழ்ச்சியுடன் சீயோனுக்குத் திரும்புவதை உன் அகக்கண்ணால் பார்; அவர்களின் கண்ணீர் யாவும் காய்ந்துபோயிற்று; துக்கமும் பெரு மூச்சும் ஒழிந்தது.

இவர்கள் ஓர்காலத்தில் வனாந்தரத்திலே அவாந்தர வழியாய் அலைந்து திரிந்தவர்கள்; ஒடுக்கத்திலும் இரும் பிலும் கட்டுண்டிருந்தவர்கள், பெருங்காற்றில் அடி பட்ட கப்பலாட்கள் (சங். 107: 4, 11, 25). பலவித கட்டங்களுள்ள அவர்களின் வாழ்க்கையின் முடிவைக் கவனி. அவர்களின் தவனமுள்ள ஆத்துமாவை அவர் திருப்தியாக்கினார்; அவர்களின் விலங்குகளைக் கண்ட துண்டமாக முறித்துப்போட்டார்; பொங்கியெழுந்த அலைகளை அவர்கள் மேற்கொள்ளும்படி செய்தார்; யாவிலும் மேலாக, பரதேசிகளான இவர்களைத் தாப ரிக்கும் ஊருக்குள் கொண்டுசேர்த்தார். சிறைகளை அந்தகாரத்திலும் மரண இருளிலுமிருந்து வெளி யேற்றினார்; புசல்காற்றில் அடிபட்ட கப்பற் பிரயாணி களை அவர்கள் நாடின துறையில் சேர்த்தார்; அவர் கள் எல்லாரினுடைய உதடுகளினின்றும் நித்திய பாடல் புறப்பட்டது. "யெகோவாவின் கிருபையினி மித்தமும், மனுப்புத்திரருக்கு அவர் செய்கிற அதி சயங்களினிமித்தமும் இவர்கள் அவரைத் துதிப்பார் களாக" (சங். 107: 9, 16, 31).

துக்கமுற்றோனே, வாழ்க்கையின் கஷ்டங்களிலும் கோஷ்டங்களிலும் அடிபட்டோனே, நீ விரைவில் அமரிக்கையான துறையை அடைவாய். தெய்வ மகிமை விளங்கும் உன்னத உயரங்களிலிருந்து உன் பூலோக வாழ்க்கையை நீ பின்னிட்டுப் பார்க்கும் போது, உன் துன்பங்கள் ஒவ்வொன்றும் பரம பிதா

வின் உண்மைக்குத் தனித்தனியான அத்தாட்சியாயிருந்தது தெரியவரும்; துன்ப சம்பவம் ஒவ்வொன்றையும் சூழ்ந்திருந்தது அவரின் அன்பின் பிரபையே. விதைக்கும்படியாக உன் அருமையான நல்விதையைச் சுமந்துகொண்டு அழுகையோடே போவாய்; அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு பாடலுடன் திரும்புவாய்; இது நிச்சயம் (சங். 126: 6).

நிலத்தில் விதைக்கப்படும் விதைகள் தண்ணீரால் பொதுமிய பின்னரே முளை விடுகின்றன; அழிவில்லாத விதையும் இவ்வுலகில் கண்ணீரால் பொதுமவேண்டும். "கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்" (சங். 126: 5). "இராக்காலத்திலே அழுகை தங்கினாலும் விடியற்காலத்திலே களிப்பின் தொனி கேட்கும்" (சங். 30: 5). "இதோ, நீங்கள் பரம பாக்கிய அறுவடையில் பிரவேசித்துவிட்டீர்கள்; இதுகாறும் உங்களுக்கு நேரிட்ட நஷ்டங்கள் யாவும் அறுவடைக்குமுன் பெய்யவேண்டிய முன்மாரியே; புதிய எருசலேமின் சூரியனானவரது காந்தியால் கண்ணீர் காய்ந்து கஷ்டங்கள் ஒழிந்துபோம்" என்று ஒரு முதிர்ந்த பக்தன் எழுதிவைத்தார். பூலோக இரவின் பாட்டு பரலோக பகலின் கீதமாகிவிடும்; விசுவாசியின் கண்களுக்கு இப்பொழுது மறைவாக இருக்கும் மகிமையான பரம இரகசியங்கள் பட்டப்பகலைப் போல் தெளிவாகும். "சஞ்சலமும் பெருமூச்சும் ஓடிப் போம்."

"நோவும் நோயும் நொம்பலமும் இனி இரா; எதிர்மறையான இந்த ஒழிவு நிலைமையே இவ்வளவு பாக்கியமாகில், உடன்பாடான நிறைவு நிலைமை எவ்வளவு பாக்கியமாகும்!" என்று பரம பாக்கியத்திற்குள் சென்றுவிட்ட ஒரு வயோதிப பக்தன் விளம்பினார். "பாடல்கள்" "நித்திய ஆனந்தம்" "சந்தோஷமும் ஆனந்தமும்"; சதா பாடல், சதா சந்தோஷம், சதா ஆனந்தம். மோட்ச பாடல்கள், படிக்கட்டுகள் ஏறுவதுபோன்ற சங்கீதங்களாம்; மீட்கப்பட்டோர்

மேலும் மேலும் பாக்கியம் அடைவார்கள்; மகிமையின் மேல் மகிமை பெறுவார்கள். ஒரு சங்கீதம் முடியும், அதற்குள் மறு சங்கீதம் மேல் ஸ்தாயியில் தொடங்கி விடும்.

இதை வாசிப்போனே, கடந்து சென்றோரை நீ இழந்து புலம்புகிறாய்; அவர்களின் இன்குரலை இங்கு நீ என்றுமே இனி கேட்பதில்லை; உன் வனாந்தரப் பயணத்தில் நீ தன்னந்தனியனாய் நடக்கும்படி உன்னை விட்டு அவர்கள் போய்விட்டனர். இன்னும் சொற்பக் காலமே பயமும் கண்ணீரும்; மகிமையின் அருணோதயத்தில் நீ அவர்களோடு மீண்டும் கூடிக்கொள்ளுவாய். அது மாத்திரமல்ல, அவர்கள் ஏற்கனவே அணிந்துகொண்ட கிரீடம் இனி உனக்கும் சூட்டப்படும். சற்றுக்காலம் நீ தனிமையில் விடப்பட்டு, உன் இராப் பாட்டை நீயாகப் பாடிக்கொண்டிருக்கும்படி உன்னை விட்டு அவர்கள் சென்றுவிட்டனரோ" நித்திய பகல் இதோ விடியப்போகிறது; பூலோகப் பள்ளத்தாக்கின் கார்மேகங்கள் இனி காணப்படாமல் தூரமாய் அகன்றுபோம். உன் இருதயம் பூரிப்பாகட்டும். மரகதம்போன்ற வானவில்லால் சூழப்பட்டிருக்கும் சிம்மாசனத்திற்கு முன்னர், இருபத்து நான்கு மூப்பரும் இரவு பகல் ஓய்வில்லாமல் பாடிக்கொண்டிருக்கும் ஜெயமங்கள கீதத்தை நீயும் பாடப் போகிறாய்: சர்வவல்ல கடவுளாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் (தரி. 4: 3–8).

ஆன்மாவின் அதிபதியே, அன்புள்ள இரட்சகரே, வாழ்க்கையின் மேகங்களில் உம் வானவில்லை நான் காணட்டும்; நீதியின் சூரியனே, உம் காந்தியில் என் கண்ணீர்ப்பெருக்கு சுவறிப்போகட்டும்; போர்கள் போராட்டங்களில் நான் வெற்றிபெற்று ஜெய கெம்பீரப் பவனியாய்ச் செல்லட்டும். இரக்க சொரூபியே, வாடும் உள்ளத்தைத் திடப்படுத்தும்; துக்க இருளிலும் துன்ப அந்தகாரத்திலும், மங்கா மேகவில் நீரே; சாவிலும் அதின் மகிமைக் கிரணங்கள் மங்காமல் ஜொலிக்கட்டும். ஆமேன்.

"நான் பூமிக்குமேலாக மேகத்தை வருவிக்கும் போது, அந்த வில் மேகத்தில் தோன்றும்; என் நித்திய உடன்படிக்கையை நான் நினைத்தருளும்படி அதை நோக்கிப்பார்ப்பேன்."

பிரார்த்தனை

என் ஆண்டவராகிய கடவுளே, அளவற்ற உமது இரக்கங்களின் பெருக்கத்தினிமித்தம் உம்மைத் துதிக்கும்படி கிருபாசனத் திருவடிகளை அடைகிறேன். நான் பட்ட சிட்சைகள் ஆச்சரியமல்ல, இரக்க உருக்கமான ஆண்டவரின் பொறுமையும், தயவும், அன்புமே அதிசயத்தில் அதிசயம். கொடிதிலும் கொடிதான என் உபத்திரவங்களைவிட அவற்றிற்குக் காரணமான என் பாவங்களே கொடிது. நீர் இருண்ட மேகத்தை வருவித்தபோது, உமது வானவில்லை அதிலே வைத்திராவிட்டால் நீதியாயிருந்திருக்கும்; ஆயினும் உமது நினைவுகள் என் நினைவுகளல்ல, உமது வழிகள் என் வழிகளல்ல. நீர் நீதியுடன் நியாயம் தீர்க்கையில், கர்த்தாவே, உமது இரக்கத்தைக்குறித்துப்பாடுவேன்.

உமது சர்வாதிகார ஆளுகையை நான் ஏற்றித் தொழுவேன். "சர்வவல்ல கடவுளாகிய கர்த்தர் இராஜ்யபாரம் பண்ணுகிறார்." ஸ்வாமீ, எதிர்பாரா நிகழ்ச்சி, தற்செயலான சம்பவம் என்பது உமது ஆளுகையில் இருப்பதில்லை. பூமியின்மேல் மேகத்தை வருவிப்பவர் தேவரீரே, நல் ஈவுகளைக் கொடுப்பவரும் எடுப்பவரும் நீரே. உமது நீதியுள்ள செய்கைகளைக் குறித்து நான் முறுமுறுக்காமலும், உமது வழிகளின் செம்மையை நான் குற்றப்படுத்தாமலும் என்னைக் காத்துக்கொள்ளும். உமது வழிகளின் இரகசியம் எனக்குத் தோன்றாதிருக்கலாம்; அன்பாக இருக்கும் தேவரீர் அடியேனண்டை வருவது தெரியாதிருக்கலாம்; மேகத்தில் ஒளியுடன் தோன்றும் வானவில்லை என் கண்கள் காணாதிருக்கலாம். ஆனால் தேவரீரை நம்பிப் பற்றவும், உமது பரிசுத்த சித்தத்திற்கு பூரண

விசுவாசத்தோடும் எதிர்பேசாத பணிவோடும் அடங்கி உம்மை மகிமைப்படுத்தவும், "ஆம், பிதாவே, இதுவே உமது திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது" என்று ஒப்புக்கொள்ளவும் அடியேனுக்குக் கிருபை அளியும்.

மப்பும் மந்தாரமுமான நாளுக்கென்று அடியேனுக்கு நீர் அருளிய பெரிதும் அருமையுமான சகல திருவாக்குகளுக்காக உமக்கு ஸ்தோத்திரம் படைக்கிறேன்; விசேஷமாக, அர்ச்சிக்கப்படும் வஸ்துவான உமது திருக்குமாரனுக்காகவும் அவரின் புண்ணிய கிரியைக்காகவும், உமக்கு ஸ்தோத்திரம் படைக்கிறேன்; உமது அன்பின் உன்னத ஈவு அவரே. சகல பாக்கிய பேறுகளுக்கும் அவரே எனக்கு அச்சாரமும் உறுதிப் பத்திரமுமானவர். பெருமழையிலும் பூகம்பத்திலும் சூறுவளியிலும், எனக்காகப் பிளக்கப்பட்ட நித்திய கன்மலையானவரின் ஒதுக்கில் வைத்து அடியேனைக் காப்பாற்றி, அவரின் அமர்ந்த மெல்லிய சத்தம் என் செவியில் விழச்செய்யும். அவர் தெய்வமாகையால் முற்றுமுடிய இரட்சிக்க வல்லவர்; அவர் மனுஷனாகையால் எந்த அளவுக்கும் அநுதாப உணர்ச்சியுடையவர்; துன்பத்திலும் உபத்திரவத்திலும் அழுந்தும் தம் அடியவரின் பாடு துக்கங்களை, அளவற்ற உருக்க இரக்கத்துடன் அவர்களுடன் அநுபவிப்பவர்; இதினிமித்தம் உமது நாமம் துதிக்கப்படுவதாக.

பிதாவே, மனுமக்கள் அனைவரிலும் அதிகமாகப் பாடுற்ற அவரின் அருமையையே உமது நடத்துதல்கள் மேலும் மேலும் எனக்கு வெளிப்படுத்துவதாக. அவரின் பிரசன்னமும் அன்பும் என் சகல நஷ்டத்திற்கும் ஈடு செய்யக்கூடியது; பூலோகில் நான் படும் எந்தக் கொடிய உபத்திரவத்திலும் அவரின் உன்னத அநுதாபம் என்னைத் தாங்கவும் தூக்கவும் கூடியது; மாறிக்கொண்டிருக்கும் உலகத்தில் நிலையற்றதும் மாய்வதுமான யாவும் ஒழிந்தும், அவரின் நட்பு ஒழியாது நிலைநிற்பது; அவர் மரண இருளை விடியற்காலமாக மாற்றினார்; அவர் கல்லறையைப் பரிசுத்தமாக்கி,

அதின் அந்தகாரப் பள்ளத்தாக்கை அழியா ஜீவனின் நம்பிக்கையால் பிரகாசமாக்கினர்; இவைகள் யாவற்றையும் நான் உணரச்செய்யும், ஸ்வாமீ.

துதிக்கப்படத்தக்க தெய்வமே, அடிக்கடி மேகங்களிலிருந்தே உமது மகா உருக்க மொழிகள் புறப்படுகின்றன; வேறு எந்த சந்தர்ப்பத்திலும் நான் அறியக்கூடாத அரிய சத்தியங்களை நீர் அப்பொழுது அடியேனுக்கு உபதேசிக்கிறீர். தேவரீர் கொண்ட உமது அன்பின் நோக்கங்கள், முடிவில் எனக்குப் பூரணமாக விளங்கிவிடும் என்று அறிவேன்; அப்பொழுது உமது நடத்துதல்கள் யாவும் அவசியமாயிருந்தவை என்றும், என் உத்தம நன்மைக்கென்றே நடந்தவை என்றும் உணர்ந்துகொள்ளுவேன். எனக்கு நீர் இப்போது தரும் சிட்சைகளை மிகமிகப் பரிசுத்தமாக்கும்; அவைகள் என் உள்ளத்தின் அந்தரங்கங்களை எனக்கு எடுத்துக்காட்டுவதாக; அவைகள், பூமியை நான் மறக்கவும் மகிமையைச் சுதந்தரிக்கவும் செய்யும் ஆரோக்கியகரமான கண்டனமும் பயிற்சியுமாவதாக; “எழுந்திரு, போ, இது நீ இளைப்பாறும் இடமல்ல” என தேவரீர் கூறும் எச்சரிப்பு அவைகளால் என் உள்ளத்தில் தொனிப்பதாக. பூலோகத்தில் நான் ஆசித்துப் பற்றும் மகா ரம்மியமான பேறும் பாக்கியமும் நிலையற்றதென்றும் மோசகரமானதென்றும் அடியேன் என் அன்றாடக வாழ்க்கையில் உணரட்டும். நீர் கட்டளையிட, என் கூடாரத்தைப் பெயர்த்துப், பாத்திற்கும் உமக்கும் சமீபமாக முளையடிக்க அருள் புரிந்திடும்; பரம தேசத்தையே என் உள்ளம் நாடட்டும், உதடு உச்சரிக்கட்டும்.

கருணைகரரே, துக்கிப்போர் அனைவர்பேரிலும் இரக்கமாயிரும். ஒரு உறுப்பு பாடுபட, உடன் அவயவங்கள் யாவும் பாடுறுகின்றனவே. நொந்து நைந்த மக்களின் நோவையும் சஞ்சலத்தையும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியால் ஆற்றியருளும். நீர் அவர்கள்மேல் வருவிக்கும் மேகத்தில் உமது வான வில்லைக் கட்டளையிடும்; உமது கரம் அவர்களைச்

சிட்சிக்கையில், தேவரீர் வாக்குப்பண்ணிய உமது ஆறுதல்களால் அவர்களைத் தேற்றியருளும்; உமது உண்மையைச் சற்றும் சந்தேகியாமல், முறுமுறுப்பின்றி உமது நடத்துதலுக்கு அடங்கச்செய்தருளும். உபத்திரவத்தின் அக்கினியில் நீர் அவர்களை வைத்திருக்கையில், தேவரீர் உபத்திரவத்தைத் தணிப்பவராய் அவர்களுடன் இருப்பதை அவர்கள் உணரட்டும்; புடமிடப்பட்டு சுத்தத் தங்கமாய் விளங்கட்டும். மிகுந்த உபத்திரவத்தினின்று சென்று, தூய தூயோராக வெண்ணங்கி பூண்டு சிம்மாசனத்தின்முன் நிற்கும் திரள் கூட்டத்தில் சேரும்படி அவர்களை மேலும் மேலும் தகுதியாக்கியருளும்.

சர்வ வல்லவரே, ஆண்டவரே, பாடுகளும் பாவமும் முற்றுமேயில்லாமற்போகும் என்றும், உபத்திரவ உணர்ச்சியும் அதைப்பற்றிய பயமும் ஒழிந்துபோகும் என்றும், கண்ணீர் யாவும் கடவுளால் துடைக்கப் பட்டுப்போய், கண்ணீர்த் தாரவே என்றுமில்லாமல் தூர்ந்துபோம் என்றும் நாங்கள் நிச்சயமாய் நம்பி, அந்த நம்பிக்கையில் பூரிக்க அருள்புரியும். அதற்கு முன், நாங்கள் இந்த அழுகைப் பள்ளத்தாக்கில் சஞ்சரித்து உமது பண்ணையில் வேலை செய்கையில், ஒவ்வொரு நற்கடமையையும் நிறைவேற்ற நாட்டம் அளியும். எதில் முனைந்தாலும் எதோடு பொருதாலும் செய்யவேண்டியதை நிறைவேற்றித்தீர உமது அடியாருக்குத் தகுதியும் பலமும் தாரும். ஈடுபடவேண்டிய கடமைக்கும் தேறவேண்டிய பரீட்சைக்கும் தகுந்த அளவாக உமது கிருபையை இரக்கமாய்ப் பொழிந்தருளும். "உன் நாட்களுக்குத் தக்கபடி உன் பலமிருக்கும்" என்பது உமது மாறாத திருவாக்கல்லவா! நாங்கள் அதில் சார்ந்திருக்கட்டும். அன்புள்ள ஸ்வாமீ, உமது ஆலோசனையினால் எங்களை நடத்தி, முடிவிலே எங்களை மகிமையில் ஏற்றுக்கொண்டருளும்.

உமது திருக்குமாரனின் மன்றாட்டிற்கு ஓயாது திருச்செவியைச் சாய்த்தருளுகிற பராபரனே, இந்த நன்மைகளையும் மற்றும் அவசியமான சகல நன்மை

களையும் அருளிச்செய்யவேண்டுமென்று, என் ஒரே ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உம்மைத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறேன். ஆமேன்.

திருவசனக் களஞ்சியம்

"உமது திருவசனம் என்னை உயிர்ப்பிப்பதே என் சிறுமையில் எனக்குக் கிடைக்கும் ஆறுதல்" —சங். 119: 50.

"யெகோவா: என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்தேன்; அவர்கள் இடுகிற அபயசத்தத்தைக் கேட்டேன் என்றார்" (யாத். 3: 7). இப்போதும் நான் யெகோவாவின் கையில் விழுவேன்; அவருடைய இரக்கம் மகா பெரியது; நான் மனிதர் கையில் விழவேண்டாம்" (2 சாமு. 24: 14). "அவர் எனக்குப் புது உயிர் கொடுக்கிறார்; தமது நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்; நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடுகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" (சங். 23: 3, 4). "என் கடவுளே, என் ஆத்துமா எனக்குள் தைரியமற்றுப்போனது; ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் மீசார் மலையிலுமிருந்துகொண்டு உம்மை நினைவுகூருகிறேன். உமது அருவிகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது; உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என்மேல் புரண்டுபோகின்றன. யெகோவா பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார். இராக்காலத்திலே அவரைப் பாடும் பாட்டு என் வாயில் இருக்கிறது. என் ஆத்துமாவே, நீ ஏன் தைரியமற்றுப்போனாய்? ஏன் எனக்குள் சஞ்சலப்படுகிறாய்? கடவுளுக்குக் காத்திரு; என் முகத்துக்கு இரட்சிப்பும் என் கடவுளுமானவரை நான் இன்னும் துதிப்பேன் (சங். 42: 6–8, 11). "கடவுளே, உமது ஆலோசனைகள் எனக்கு அருமையானவைகள்! அவைகளின் தொகை எவ்வளவு

அதிகம்!'' (சங். 139: 17). ''உடைந்த இருதயமுள்ளவர்களைக் குணமாக்குகிறார்; அவர்கள் காயங்களைக் கட்டுகிறார்'' (சங். 147: 3). ''இப்பொழுதோ என்னென்று சொல்லுவேன்! வாக்கு எனக்கு அருளினார். அவரே செய்தார், நான் அநுபவித்தகசப்பை நினைத்து ஆயுள் நாளெல்லாம் அடங்கி நடப்பேன்'' (எசா. 38:15). ''பிள்ளையைத் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்'' (எசா. 66: 13). ''நாம் அழியாதிருப்பது யெகோவா கிருபையே; அவர் இரக்கங்களுக்கு ஒரு முடிவில்லையே: காலைக்குக் காலை அவை புதியனவாம்; உமது உண்மை மிகவும் பெரிது. யெகோவாவே என் பங்கு என்று எனது ஆத்துமா சொல்லும்; ஆதலின் என் நன்னம்பிக்கை அவராலேயே. என்றுமாகக் கைவிடாரே ஆண்டவர்; சஞ்சலமுறும்படிச் செய்வாராயினும் தமது மிகு கிருபையின்படி இரங்குவார்'' (பிரலாபம் 3: 22–24, 31, 32). ''ஆதலால், இதோ, நான் அவளுக்கு நயங்காட்டி, அவளை வனாந்தரத்தில் அழைத்துப்போய் அவளோடே பட்சமாய்ப் பேசுவேன்'' (ஓசியா 2: 14). ''யெகோவா நல்லவர், இக்கட்டு நாளில் அரணான கோட்டை; தம்மில் நம்பிக்கையாயிருக்கிறவர்களைக் கவனித்துக் கொள்ளுவார்'' (நாகூம் 1: 7).

''துயரப்படுவோர் பாக்கியர்; அவர்கள் தேற்றப்படுவார்கள்'' (மத். 5: 4). ''வருந்தி உழைத்து பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' (மத். 11: 28). ''ஆம், பிதாவே, இதுவே உமது திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது'' (மத். 11: 26). ''படகு கரையிலிருந்து வெகுதூரம் போயிருந்தது; எதிர் காற்றடிக்கவே அது அலைகளினால் அலைவுபட்டது. இரவின் நாலாம் ஜாமத்தில் அவர் கடலின்மேல் நடந்து அவர்களிடம் வந்தார். உடனே இயேசு அவர்களோடே பேசி: தைரியமாயிருங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்றார்'' (மத். 14: 24, 25, 27). ''உயிர்த்தெழுதலும் ஜீவனும்

நானே; என்னில் விசுவாசம் வைக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'' (யோ. 11: 25). "இயேசு கண்ணீர் விட்டார்''; "நீ நம்புவாயானால் கடவுளின் மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா?'' (யோ. 11: 35, 40). "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. கடவுளில் நம்பிக்கையாயிருக்கிறீர்களே, என்னிலும் நம்பிக்கையாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்களுண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேனே. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேனேயாகில், நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடம் சேர்த்துக்கொள்ளுவேன். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன்; அப்பொழுது என்றென்றைக்கும் உங்களோடிருக்கும்படி வேறொரு சகாயரை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். நான் உங்களை ஆதரவற்றவர்களாக விடேன், உங்களிடம் வருகிறேன். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என் சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிறதுபோல நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்கவும்வேண்டாம், அதைரியப்படவும்வேண்டாம்'' (யோ. 14: 1–3, 16, 18, 27). "பிதாவே, நீர் எனக்குத் தந்த என் மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னோடுகூட இருக்க விரும்புகிறேன்'' (யோ. 17: 24). "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? இவைகளெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயம்கொள்ளுகிறவர்களாகவே இருக்கிறோம்'' (ரோ. 8: 36, 37). "சகோதரரே, நித்திரையடைகிறவர்கள் விஷயத்தில் நீங்கள் அறிவில்லாதிருக்கிறது எனக்கு மனதில்லை; நன்னம்பிக்கையற்ற மற்றவர்களைப்போல் நீங்கள் துக்கிக்கவேண்டாம்''

(1 தெச. 4: 13). "அழிவுக்குரியதாகிய இது அழி வின்மையையும், சாவுக்குரியதாகிய இது சாவாமை யையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுக்குரிய தாகிய இது அழிவின்மையையும் சாவுக்குரியதாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போதோ, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது; மரணமே, உன் ஜெயம் எங்கே? மரணமே, உன் கொடுக்கு எங்கே? என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறித்தீரும். மரணத்தின் கொடுக்கு பாவம், பாவத்தின் வல்ல மையோ நியாயப்பிரமாணம்; நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு ஜெயங்கொடுக் கிற கடவுளுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரி. 15: 53–57). "நான் நேசிக்கிறவர்கள் எவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஊக்க மாயிருந்து மனந்திரும்பு. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறப்பானாகில் அவனிடம் உள்ளே வருவேன். நான் அவனோடு போஜனம் பண்ணு வேன், அவன் என்னோடு போஜனம் பண்ணுவான்" (தரி. 3: 19, 20). "பின்பு வானத்திலிருந்து ஒரு சத்தம் கேட்டேன்; அது: ஆண்டவருக்குள் சாகிற மரித்தோர் இதுமுதல் பாக்கியர் என்று எழுது; ஆம், அவர்கள் தங்கள் உழைப்பினின்று இளைப்பாறுவார்கள்; அவர் கள் செய்கைகள் அவர்களோடுகூடப் போகுமென்று ஆவியானவரும் சொல்லுகிறார் என்றது" (தரி. 14: 13). "அப்பொழுது மூப்பரில் ஒருவன் என்னைப் பார்த்து: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள் என்று என்னைக் கேட்க, நான்: என் ஐயனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன் என்னிடம்: இவர்களே பெரிதான உபத்திரவத்தினின்று வருகிறவர்கள்; தங்கள் அங்கி களை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் துவைத்து வெளுத்தார்கள். ஆனபடியால் இவர்கள் கடவுளின் சிங்காசனத்திற்குமுன் இருந்து இரவும் பகலும் அவ ருடைய ஆலயத்திலே அவரை ஆராதிக்கிறார்கள்.

சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர் இவர்கள்மேல் கூடாரம் விரித்து நிழலிடுவார். இவர்கள் இனிப் பசித்து வருந்தார்கள், தாகித்து வருந்தார்கள்; வெயில் இவர்கள்மேல் படாது, எந்த உஷ்ணமும் படாது; சிங்காசனத்தின் மத்தியில் இருக்கிற ஆட்டுக் குட்டியே இவர்களை மேய்த்து, ஜீவ தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு இவர்களை வழிநடத்தும்; கடவுள் தாமே அவர்கள் கண்களிலிருந்து கண்ணீரை எல்லாம் துடைப்பார் என்றான்'' (தரி. 7: 13–16).

“இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.”

குறிப்பு:—*இந்தத் தியான நூலிற் குறிக்கப்பட்ட வேத வசனங்கள் புது மொழிபெயர்ப்பினின்று எடுக்கப்பட்டன.*

BOW IN THE CLOUD

A BOOK OF COMFORT

(TAMIL)

விலை ரூபாய் 1-2